Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 14/00
දිනමුරසු වාරමලර් செப். 15-21, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 477



## என்ன செய்யப் போகிறார் ஜனாதிபதி?



## பிரபாவின் நகர்வு

## மீண்டும் ஆர்ப்பாட்ட அரசியல்



## ஆசை காட்டி மோசம் செய்த கிரண்



## சூதாட்டமாக மாறும் ஐ.சி.சி. போட்டிகள்

## விடுதலை வேண்டுமா...?

ஒரு வீட்டில் சிறுவன் ஒருவன் விளையாடிக் கொண்டிருந்தான். மேசையின் மீது இருந்த பூச்சாடி அவனை ஈர்க்கிறது. சுற்று முற்றும் பார்த்துவிட்டு, தன் வலதுகையை அதன் வாயினுள் நுழைக்கின்றான். மிகவும் இறுக்கமாகிவிட்டது. அப்பா வரும் சத்தம் கேட்கிறது. அவசரமாகக் கையை இழுக்கின்றான். முடியவில்லை. தந்தை மகனின் அவஸ்தையைப் புரிந்து கொள்கிறார். "சாடியை உடைத்து மகனின் கையை எடுக்கலாமா?" யோசிக்கிறார். மகனிடம் சொல்கிறார் "இதோ பார், என் கைக விரல்களை ஒன்று சேர்த்து நீட்டிக், குவித்துக் கொள்கிறேன். இது போன்று நீயும் செய். அப்படியே கை வெளியே எடு. சுலபமாக வந்து விடும்" சிறுவன் என்ன சொன்னான்? "என்னால் அதுபோல் நீட்ட முடியாது. காரணம், கையில் உள்ள நாணயம் உள்ளே விழுந்து விடும்" இப்படித்தான் நம்மில் பெரும்பாலானோர் சிறு பறைக் கூட விட முடியாமல், விடுதலைக்காக ஏங்குகிறார்கள்.

ரீ.குணவர்தன, களுவாஞ்சிக்குடி.

# ஆன்மீகம்



## மறுமையிலும் இறைவன் தீர்ப்புக்குத் தப்பமாட்டீர்கள்

இன்று எத்தனையோ வசதி படைத்த பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் நயவஞ்சகச் செயல்களால் சொத்து சுகம் இழந்து, அவர்களின் கொடுமை தாங்காமல் பிச்சையெடுத்துத். திரிவதையும், பிள்ளைகளிருந்தும் அநாதைகளாக அநாதை இல்லங்களில் வாழ்வதையும் காணக் கூடியதாகவுள்ளது.

பிள்ளைகள் தங்கள் பெற்றோரை அடித்து, நஞ்சூட்டிக் கொலை செய்த செய்திகளையும் தினசரி பத்திரிகைகளில் நாம் வாசித்தறியலாம்.

ஒரு மகனோ, மகளோ தன் தாய், தன்னைப் பத்து மாதம் சொல்லொணா வேதனையுடன் சுமந்து பெற்றெடுத்து, இரத்தத்தையே பாலாகப் பருக்கி, எத்தனையோ இரவுகள் கண்விழித்து, தன்னை உயர்வான நிலைக்கு ஆளாக்கியதைச் சற்றுக் கூடச் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

"உன் தந்தையை உன்முழு உள்ளத்துடன் மதித்து நட; உன் தாயின் பேறு காலத் துன்பத்தை மறவாதே. அவர்கள் உன்னைப் பெற்றெடுத்தார்கள்; அதற்கு ஈடாக உன்னால் எதையும் செய்ய முடியாது என்பதை நினைவில் இருத்து." (சீராம் 7-27,28)

பிள்ளைகளே! சொத்து சுகத்திற்காக அல்லது கணவன், மனைவியின் வேண்டுகோளுக்கிணங்க உங்கள் பெற்றோரைப் புறக்கணித்திருப்பீர்களானால் இந் நிமிடமே அவர்களைக் கண்டு, அவர்களின் பாதங்களில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டு அவர்களை மகிழ்ச்சிப்படுத்தி வாழவையுங்கள். இன்றேல் இம்மையில் மட்டுமல்ல, மறுமையிலும் இறைவனின் தீர்ப்புக்குத் தப்பமாட்டீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

ஜோசப் அருள்சாமி, இரஜவெல்ல.

## மரணம்

மரணத்தை மனிதன் விரும்புவதில்லை. உலகமே மரணத்தை, வெறுத்தாலும் அது யாரையும் விட்டு வைப்பதில்லை மரணத்தை வெல்ல மனிதன் தொன்று தொட்டு முயற்சி செய்துகொண்டே இருக்கிறான். மரணத்தை வெல்ல முடியுமா?

மரணத்தைப் பற்றி திருக்குர் ஆன் என்ன கூறுகிறது? அதில் அல்லாஹ் உயிர்களை அவை மரணிக்கும் போதும், மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி பின்பு எதன்மீது மரணத்தை விதித்து விட்டானோ அதை (தன்னிடத்தில்) நிறுத்திக் கொள்கிறான். மீதி உள்ளவற்றை ஒரு குறிப்பிட்ட தவணைவரை (வாழ்வதற்காக) அனுப்பி விடுகிறான். சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு நிச்சயமாக அதில் அத்தாட்சி இருக்கின்றன. (39:42)

மரணத் தறுவாயில் ஒருவரின் (உயிர்) தொண்டைக் குழியை அடையும் போது அந்நேரம் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆயினும் நாமோ உங்களை விடச் சமீபமாக இருக்கிறோம். எனினும் நீங்கள் பார்க்கவில்லை. (எனவே மறுமையில் உங்கள் செயல்களுக்கு) கூலி கொடுக்கப்பட மாட்டீர்கள் என்று இருந்தால்,

நீங்கள் உண்மையாளராக இருப்பின் (அவ்வுயிரை) மீள வைத்திருக்கலாம்.

செல்வி செய்யது புகாரி ஸஹானா, வாழைச்சேனை.

## கவிதைப் போட்டி இல. 474



### பரிசுக்குரிய கவிதை

#### எழுப்புங்கள்....

விளக்குமாற்றுக் கட்டுடன்
வீதியில் தூங்குமவனை
விரைவில் தட்டி எழுப்புங்கள்
இனத் துவேஷக் குப்பைகளை
இனி இல்லாமல் கூட்டித்தள்ள!

அ.சந்தியாகோ- கண்டி.

**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

#### புனைபெயரில்

அப்பாவியான இவனை வருத்தி
ஆறறிவு படைத்த
அரக்கனொருவன்
அநியாயம் செய்கின்றான்
முதலாளியெனும் புனைபெயரினிலே

எஸ்-சகிலா, பண்டத்தரிப்பு.

#### விழித்துக்கொள்

ஊரை மட்டுமே- சுத்தப் படுத்த
முயலும் நீ...
உன் நிலைபற்றி சிறிதும் கருதாது
உறங்கிக் கொண்டிருக்கிறாயே
உன்னுள் நீ விழித்துக்கொள்!

கே. சுகி, மஸ்கெலியா.

#### தெரியவில்லையோ?

ஒவ்வொரு நாளும்
மிதி வண்டியில் போய்
மிச்சம் பிடித்து ஜீவியம்
நடாத்தும் அப்பாவி ஜீவன்களையும்
அடையாளம் தெரியவில்லையோ?
இவர்களுக்குமா இந்தக் கதி?

ராமச்சந்திரன் தவேந்திரன், ஹாலி-எல.

#### சுமைகள் சோகமானதே

முயற்சியே வெற்றி- ஆனால்,
மூச்சு நிற்கும் முயற்சி
இவர் வாழ்க்கையில்
அப்படியோர் வறட்சி
துயரத்தில்
நிம்மதித் தூக்கத்தை
தேடியாகிவிட்டது.

ஏ.ராசேந்திரன், கீளியன் குடியிருப்பு.

#### எத்தனை எத்தனை...

எத்தனை-
ப(ா)ட்டுக் கோட்டைகள்
எத்தனையெத்தனை
பிறப்புக்கள்
எடுத்தாலுமே
உன் தூக்கத்தை
மட்டுமல்ல...
உலகிலுள்ள எவர்
தூக்கத்தையும்
கலைத்துவிட முடியாது!
இன்றைய மனிதனின்
நிரந்தரம்- நித்திரை!
இதையுணர்ந்தாலேயொழிய
உனக்கேது-
உன் வாழ்விலே விடியல்?!

தாராபுரம நிலாம்-கரம்பை.

#### தூங்கும் மனம்!

கோடி கோடியாய் உழைத்தாலும்
கொஞ்சநேரம் தூங்குவதில்தான்
நிம்மதியே நிலைத்திருக்கிறது!
கொஞ்சம் உழைத்தாலும்
உளம் மகிழ்கிறது இவனுக்கு;
கோடியான தூக்கத்தில்!!
போதுமென்பதே நிம்மதியின்
நிலையான பாதை!


ஏ.எப்.எம். றியாட்,
முள்ளிப்பொத்தானை.

#### நாளை

கூவி விற்று கூலி வாங்கி
குடிசையின்றி வாழ்வை நோக்கும்
வான் பரப்பை நோக்கி துயிலும்
இவன் வாழ்க்கை நாளை!

தெ.லோஜனா, கொழும்பு-06.

## கவிதைப் போட்டி இல.477



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 21.09.2002

கவிதைப் போட்டி இல.477
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

#### தெருவோர சயனிப்பு

தகிக்கும் வெயிலில்
தாங்கொண்ணா சூட்டில்
தன் சரக்கை விலையாக்க
தெருவெல்லாம் சஞ்சரித்து
அலுப்பு மேலீட்டால்
ஆயாசம் தீர
வீதியோரத்தில் கண் துஞ்சும்
வேதனைக்குரிய ஒரு ஜீவன்.

க.கமால்தீன் பன்னக்குடா வீதி,
ஏறாவூர்-3.

#### புரிந்துகொள் மனிதா

விற்க வந்த பொருட்களை
வீதியோரம் போட்டுவிட்டு
வெட்டியாக உறங்கும் மனிதா!
சோதனையும் சுமையும்
உனக்கு மட்டுமல்ல
சோர்வுறாதே தோழா!
தமிழனாய் பிறந்தேன் என்று
தயங்காதே,
தன்னம்பிக்கையோடு போராடு
தரணியில் தலை நிமிர்வாய்!

நா. நிரோஸ், அக்கரைப்பற்று-07.

#### சத்திரத்தில் சயனம்

"பயமின்றிப் படுப்பதற்கு பஞ்சணையேது?
சுயமாக உழைத்துண்ணும் உத்தமர்க்கு
பயணிக்கவோ பல மைல்கள் தூரமுண்டு
சயனிக்கக் கிடைத்ததோ சத்திரம்"

மு.பா.சமீறா பாரிக், மூதூர்-06.

#### தெரியுமா உங்களுக்கு?

கட்டாந்தரையில் இங்கு!
கண்மூடி தூங்கும் இவனை!
கண்விழிக்க வைத்திடாதீர்!
உண்மையான உழைப்பாளிக்கு!
உறக்கம் மட்டுமே!
உன்னதமான ஊட்டச்சத்து!

ஹப்புத்தளையூர், மனோகோபாலன்.

#### அவன் நிலை

கூட்டுமாறு கூவி விற்றான்
ஏழையவன்
கூழ் குடிக்கும் வயிற்றுக்காய்;
கண்ணயர்ந்தான்...
கரை தெரியா நிழலொன்றில்
களைத்ததனால்....!

சி.மதியழகன், திக்கம்.

#### ஆட்டம்

ஆடுவதெல்லாம் ஆடிவிட்டு
அடங்கிவிட்டாயோ ஆடுபவர்களால்
ஆட்டப்பட்டு அடங்கியிருக்கின்றாயோ
தூங்கு குழந்தாய் தூங்கு.

எம்.ஏ.எம். முஹர்றிம், கற்பிட்டி.

## வாசக[ர்] சாலை



என் அன்பின் முரசே,

நீ சுமந்துவரும் அம்சங்கள் ஒவ்வொன்றும் அருமை. அரசியல், தேன் கிண்ணம், இலக்கிய நயம், சிந்தியா பதில்கள், மன்னாதிமன்னன், பாப்பா முரசு போன்ற பல அம்சங்கள் அருமையானவை. இன்னும் உன் சேவை தொடர என் வாழ்த்துக்கள்.

எம். றஜி, அனலைதீவு.

முரசின் 475 இதழின் முரசம் பகுதியில் ஆசிரியர் குறிப்பிட்டதைப் போன்றே இன்று தலைநகரில் தமிழ் ஆபாசப் படங்கள் கூடுதலாகத் திரையிடப்படுகின்றன. இப் படங்கள் கட்டாயம் தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்கு இடையில் பாலியல் ரீதியாகத் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றன. இது பற்றி உண்மையில் இந்து கலாசார அமைச்சருக்கோ, முஸ்லீம் கலாசார அமைச்சருக்கோ எவ்வித அக்கறையும் இருப்பதாகவே தெரியவில்லை. இப் படங்கள் பற்றி இனியாவது இவர்கள் கவனம் எடுக்க வேண்டும் என்பதனை முரசு தொடர்ந்து வலியுறுத்த வேண்டும்.

சி. பேரின்பராசா, நிலாவெளி-02.

முத்தான முரசே;

நீ சும்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். எனது குடும்பத்தில் அனைவரும் உன்னை விரும்பி படிக்கின்றனர். உனது க்ரைம் கதையான ஒரு கைதியின் கதை முடிவை நெருங்குகிறது. அடுத்து என்ன தரப்போகிறாய் என்று ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறோம்.

ரி.சுபாஸ்,இரத்தினபுரி.

*என் அன்பு முரசுக்கு*

எனது முதற்கண் வணக்கம். வாரம் பத்தாண்டுகளாகப் பக்கச் சார்பின்றி நேர்மையாக நடந்து வருகின்றது எனது தினமுரசு பத்திரிகை. எக்ஸ்ரே ரிப்போர்ட், அண்டை மண்டலத்தில், அதிரடி அய்யாத்துரை, தகவல் பெட்டி, சினிமா, லேடீஸ் ஸ்பெஷல், பாப்பா முரசு, சிறுகதைகள், ஸ்போட்ஸ், சிந்தியா பதில்கள், இலக்கிய நயம், நினைத்து நினைத்து சிரிக்க (ஜோக்), பார்த்த ஞாபகம் இல்லையோ? இப்படி எல்லாம், எல்லோரும் பார்த்து ரசிக்கக் கூடிய அம்சங்கள். தொடர்ந்து வருக, வளர்க, வாழ்க.

கே. மதுரா, ஏழாலை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாகச் சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

*என் இனிய தினமுரசு வார மலரே!*

நீ தாங்கி வரும் சிறுகதை, தேன்கிண்ணம் மற்றும் பல அம்சங்களும் அருமையானவை. இன்னும் பல அம்சங்களைத் தாங்கி சூடு, சுவை சுவாரசியம் என்ற முனைப்புடன் வெளிவர என் வாழ்த்துக்கள்.

சி. இன்பராஜ், மீசாலை மேற்கு.

*தமிழ் சுமக்கும் அன்பான முரசே;*

ஒரு நூற்றாண்டைக் கடந்து, புது நூற்றாண்டில் புகழ் படைக்கும் முரசுக்கு நன்றிகள், பல.

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் எக்ஸ்ரே ரிப்போர்ட், அலசுவது- இராஜதந்திரி, நெட்டிலிருந்து, காதில பூ கந்தசாமி, அதிரடி அய்யாத்துரை மிகவும் சூப்பர். இருந்தும், ஒரு செய்தி வாசகர் மனதை ஈர்ப்பதற்கு அச் செய்தியின் தலைப்பே காரணமாகும்.

காதில பூ கந்தசாமியில் வரும் ஆங்கில வார்த்தைகளைத் தவிர்த்தால் மிகவும் சிறப்பாக அமையும் என விரும்புகின்றேன்.

மா.ஈஸ்வரன், நெடுந்தீவு.

# உங்கள் பக்கம்

## மனம் நொந்து செயற்படுங்கள்

மனம் நொந்து செயற்படுங்கள்

கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மனம் நொந்து எழுதுகிறேன். மனம் வைத்து செயற்படுங்கள். வலிகாமம் வடக்கில் இருந்து நாங்கள் இடம் பெயர்ந்து 12 ஆண்டுகள் கடந்து விட்டன. எங்கள் பண்பாடு, கலாசாரம், பொருளாதாரம், கல்வி உட்பட வாழ்வியலுக்குத் தேவையான அனைத்தும் அழிக்கப்பட்ட நிலையில் அகதியாய் அலைந்து திரிகிறோம்.

யாழ் நகருக்கு நிகராக எமது பிரதேசம் முன்பு சகல துறைகளிலும் சிறந்து விளங்கியது. முன்னணிப் பாடசாலைகளின் ஒரு தொகுதி இப் பிரதேசத்திலே அமைந்திருந்தது. குடில்களாக இருந்த பாடசாலைகள் பல சிறப்புற்று விளங்குகின்றன. ஆனால் சகல வசதிகளுடனும் இருந்த எமது பாடசாலைகள் குடில்களாக மாறியுள்ளன. மனம் வெதும்புகிறது. கோயில் கடவை என சிறப்பித்துக் கூறப்படும் எமது புனித பூமி இன்று மயானபூமியாக உள்ளது. தயவு செய்து எமது பிரதேசத்தில் நாங்கள் வாழ்வதற்கான உரிமையைப் பெற்றுத் தாருங்கள்.

எங்கள் எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் வடிவம் கொடுக்கவே உங்களைப் பாராளுமன்றம் அனுப்பி வைத்தோம். தயவு செய்து நாங்கள் மீளக் குடியமர ஆவன செய்யுங்கள். அவ்வாறு செய்யும் பட்சத்தில் எமது பிரதேச மக்களின் நன்றிக்கு உரித்தாவீர்கள்.

க. ஞானேந்திரன்( ஞானன்)

## இப்படியும் நடக்கிறது

மஸ்கெலியா தபாற்கந்தோரில் தொலைபேசியில் பேச நகர்ப்புற மக்களும், தோட்டப்புற மக்களும் செல்வது வழக்கம். ஆனால் அதிகமாக தோட்டப்புற மக்களே அங்கு செல்கின்றனர். இதுவரை காலமும் தொலைபேசி இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு, அங்கே ஓர் கடிகாரம் இருக்கும் அதிலே நிமிடத்தைக் கணக்கிட்டு, அதற்கான கட்டணத்தை அறவிடுவார்கள். ஆனால், இந்த மாதம் முதல் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால் நாம் எவ்வளவு நேரம் கதைக்கிறோமோ அதற்குத் தகுந்த கட்டணத்தை அந்த இயந்திரம் காட்டும். ஆனால், இங்கு அவ்வாறு இயந்திரத்தில் பதியப்படும் ரசீதை அந்த அஞ்சல் உத்தியோகத்தர் கொடுப்பதில்லை. மாறாக கடிகார நிமிடத்தைக் கணக்குக் காட்டிப் பணத்தை வாங்கிக் கொண்டு நாம் வெளியே வந்ததும் இயந்திரத்திலுள்ள ரசீதை கிழித்துத் தன் பைக்குள் போட்டுக் கொள்வார். விபரம் தெரிந்தவர்கள் இயந்திரத்தின் ரசீதைக் கேட்டு அதிலுள்ள தொகையைச் செலுத்திவிட்டு செல்வர். விபரம் தெரியாத பாமர மக்கள் என்ன செய்வார்கள் தகுந்தவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

நலன் விரும்பி,மஸ்கெலியா.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772,கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

# ஜனாதிபதி–பிரதமர் 'அரசியல் சகவாழ்வுக்கு' முற்றுப்புள்ளி!

# 19 ஆவது சீர்திருத்தச் சட்டமூலம் நிறைவேறுமா?

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும் இடையிலான அரசியல் சகவாழ்வுப் பேச்சுக்கள் முடிவுக்கு வந்துள்ள நிலையில், எதிர்வரும் 16ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் 19ஆவது அரசியலமைப்பு சட்டமூலம் நிறைவேறுமா அல்லது தோற்கடிக்கப்படுமா என்பதைப் பொறுத்தே இலங்கையின் அடுத்த கட்ட அரசியல் நகர்வு தீர்மானிக்கப்படப் போகிறது.

ஜனாதிபதியின் அதிகாரங்கள் பலவற்றை மட்டுப்படுத்தும் தெளிவான கருத்துக்களைக் கொண்டுள்ள 19ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் குறித்த வர்த்தமானி அறிவித்தல் 10ஆம் திகதி வெளியிடப்படும் என அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்தச் சட்டமூலத்தை நீதிமன்றம் பரிசீலித்ததன் பின்னர் 16ஆம் திகதி இது பாராளுமன்றத்திற்கு வரவிருக்கிறது.

இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றி ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்க முடியாது போனால் பாராளுமன்றத்தைக் கலைத்துப் புதிதாகத் தேர்தல் ஒன்றை நடத்தப்போவதாக அரசாங்கம் முன்னதாக அறிவித்திருந்தது.

19ஆவது திருத்தத்தைப் பாராளுமன்றில் நிறைவேற்றும் பொருட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறும் முயற்சியில் அரச தரப்புத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

எம்.பிக்கள் விலை பேசப்படுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. தமது தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்து விடாமல் பாதுகாப்பதில் ஜனாதிபதி அதிக அக்கறை செலுத்தி வருகின்றார். சட்ட மூலம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படும் வரை இரு தரப்புக்கும் உள்ள ஆதரவு குறித்துச் சரியான எண்ணிக்கை விபரங்களை ஊகிக்க முடியாதுள்ளது.

தாய்லாந்துப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் தருணத்தில் உள்நாட்டு அரசியலில் தீவிர அதிகாரப் போட்டி நிலவுவதையிட்டுச் சமாதான ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

### பிரபாவின் நகர்வுகள்

இதேவேளை தாய்லாந்து சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாகப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவரது பிராந்தியத் தளபதிகளை வன்னிக்கு அழைத்துக் கலந்துரையாடியிருக்கிறார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் நோக்கம் குறித்தும், இயக்க உறுப்பினர்களின் உளவியல் பலம் சிதையாமல் பாதுகாக்க வேண்டிய தன் அவசியம் தொடர்பாகவும் பிரபா தனது தளபதிகளுக்கு விளக்கியுள்ளார்.

## விவசாய வரிகள்

கிழக்கின் வாகனேரி, கல்குடாத் தொகுதியில் உள்ள வயல் நிலங்களில் விவசாயம் செய்த முஸ்லிம் விவசாயிகள் அறுவடையின் போது நான்கு வகையான வரிகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். உழவு இயந்திரங்களுக்காக 5 ஆயிரம் ரூபாவும், ஒரு ஏக்கருக்கு வரியாக 500 ரூபாவும், நீர் வரியாக 250 ரூபாவும் செலுத்த வேண்டும். பின்னர் ஒரு நெல் மூடைக்கு 10 ரூபா என்ற அடிப்படையிலும் வரி அறவிடப்படுகின்றது.

## பிரபாவைச் சந்திப்பதை ஆயர் தவிர்ப்பு

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பு அவர்களைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நேரில் சந்திக்க அழைப்பு விடுத்துள்ள போதிலும், ஆயர் அந்தச் சந்திப்பைத் தவிர்த்து வருவதாக நம்பகமாகத் தெரிய வருகிறது.

சில வாரங்களுக்கு முன்னதாகவே பிரபாகரனின் அழைப்பு இராயப்பு ஜோசப்பு ஆயருக்குக் கிடைத்துள்ள போதிலும் ஆயர் தொடர்ந்தும் கொழும்பிலேயே தங்கியிருக்கிறார்.

## அவுஸ்திரேலியாவிலிருந்து வந்த நல்லூர்வாசி

# கொழும்பில் வைத்துக் குத்திக் கொலை

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த சுப்பிரமணியம் முத்துலிங்கம் (வயது48) என்பவர் கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு கொழும்பில் இனந்தெரியாதோரால் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் முத்துலிங்கம் 1991ஆம் ஆண்டு முதல் அவுஸ்திரேலியாவில் வசித்து வருபவர்.

கடந்தவாரம் உறவினர் ஒருவரின் திருமண ஒழுங்குகளைக் கவனிப்பதற்காக இலங்கை வந்த அவர் யாழ்ப்பாணத்திற்குச் சென்று தமது உறவினர்களைச் சந்தித்து விட்டுக் கொழும்பு திரும்பியிருக்கிறார். தெஹிவளை அல்பேட் பிளேஸில் உள்ள அவரது வீட்டில் திங்களன்று இரவு 10.30 மணியளவில் உறவினர்கள் சகிதம் உணவருந்திக் கொண்டிருந்தபோது வீட்டுக்குள் திடீரெனப் புகுந்த இரண்டு தமிழ் இளைஞர்கள் இவரைக் கத்தியால் குத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இவர் அதே இடத்தில் உயிரிழந்தார். கொலையாளிகள் யார் என்பது இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இவர் யாழ்ப்பாணம் சென்றிருந்த சமயம் அங்கு இளைஞர்கள் சிலர் இவரிடம் பணம் கேட்டதாகவும், இவர் கொடுக்க மறுத்ததன் காரணமாகக் கொழும்பில் வைத்துத் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## புலிகளிடம் முறைப்பாடு!

பொதுமக்களின் பிரச்சனைகள் தொடர்பில் புலிகளின் அலுவலகங்களில் செய்யப்படும் முறைப்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைச் செய்தால் அவை விசாரணைக்கு வர கால தாமதம் ஏற்படுவதாலும், பொலிஸாரின் இலஞ்சம், அசிரத்தை போன்ற காரணங்களாலும் பொது மக்கள் பலர் தமது அன்றாடப் பிரச்சனைகளில் பொலிஸ் நிலையங் களுக்குப் பதிலாகப் புலிகளின் காரியாலயங்களை நாடுகின்றனர்.

# ஒன்றரைக் கோடி ரூபா செலவில்

## நடந்து முடிந்த மக்கள் எழுச்சிப் பேரணி

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்துத் திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற மக்கள் எழுச்சிப் பேரணியில் நாடு முழுவதிலும் இருந்து பல இலட்சம் ஐ.தே.க. ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

மலையகத்திலிருந்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்களும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

அரசாங்க பஸ்களில் அதிகாலை முதல் கொழும்பு நகருக்கு அரச ஊழியர்கள், தொழிலாளர்கள் எனப் பலரும் இலவசமாக அழைத்து வரப்பட்டனர். அவ்வாறு வந்தவர்களுள் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் குறிப்பிட்ட பிரதேசங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களின் செலவில் மதிய உணவு விநியோகிக்கப்பட்டது.

துறைமுகத்திலிருந்து 30 ஆயிரம் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேரணியை ஒழுங்கு செய்யச் சுமார் ஒன்றரைக் கோடி ரூபா வரையில் செலவானதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பேரணியின் முடிவில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத் தனிநாட்டுக் கோரிக்கையில் உறுதியாக இருந்த புலிகள் இயக்கம் அரசியல் செயற்பாடுகளில் பிரவேசித்திருப்பது சாதகமான அம்சம் எனக் கூறினார்.

அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, எஸ்.பி. திஸாநாயக்க போன்றோர் ஜனாதிபதியைக் கடுமையாக விமர்சித்து உரையாற்றினர்.

இந்தப் பேரணியில் தமிழ்க் கட்சித் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## 2 மாத நிவாரணம் இல்லை!

## வன்னியில் கேட்குமாறு அதிகாரிகள் பதில்

மன்னார் மாவட்டத்தில் உள்ள அகதிகளுக்கான நிவாரண உதவிகள் கடந்த இரண்டு மாதங்களாக வழங்கப்படாத நிலையில் அவர்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த நிவாரண உதவிகள் குறித்துப் பிரதேசச் செயலாளரிடம் கேட்டால் அவர் அரசாங்க அதிபரிடம் வினவுமாறு கூறுகிறார். அரசாங்க அதிபர் மாவட்ட செயலாளரிடம் முறையிடுமாறு கூறுகிறார். மாவட்ட செயலாளர் தனக்கு மேலுள்ள அதிகாரியைக் காண்பித்து அங்கு போய் வினவுமாறு அகதிகளுக்குக் கூறி வருகிறார்.

வன்னியில் போய்க் கேளுங்கள் என்று இறுதியாகப், பதில் கூறப்படுகின்றது.

தமக்குக் கிடைக்க வேண்டிய நிவாரண உதவிகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் அகதிகள் தினசரி அரசாங்க அதிகாரிகளைச் சந்திக்க அலைந்து திரிகின்றனர்.

## 'தமிழீழ' நிதி நிறுவனங்களை வலுப்படுத்துவதன் மூலம்

# வெளிநாட்டு உதவிகளை நேரடியாகப் பெறப் புலிகள் திட்டம்

வடக்கு கிழக்கு பகுதிகளில் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படும் பட்சத்தில் அந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கான வெளிநாட்டு உதவிகளைப் புலிகள் நேரடியாகவே பெற்றுக்கொள்ளும் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

ஏற்கனவே வீதி நிர்மாணப் பணிகள் உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற் திட்டங்களுக்கு நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுடன் புலிகள் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

வடக்கு கிழக்குக்கான இடைக்கால நிர்வாக சபையைக் கையேற்றதன் பின்னர் நேரடி வெளிநாட்டு உதவிகளைப் பெறப் புலிகள் இயக்கம் உத்தேசித்துள்ளது. இதன் மூலம் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் துரித அபிவிருத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

புலிகள் தற்போது தமது நிதி நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்தி வருகின்றனர். தமிழீழ வங்கிகளின் காசோலைகள் மூலமான கொடுக்கல் வாங்கல்கள் ஊக்குவிக்கப்படுவதுடன் இந்த வங்கிகளில் பேணப்படும் சேமிப்புகளுக்கு உயர்ந்த வட்டி வீதமும் வழங்கப்படுகிறது.

தமிழீழ வங்கிகளில் நிரந்தர வைப்புக்களுக்கு 17 சதவீத வட்டி வழங்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள அரச தனியார் வங்கிகளில் நிரந்தர வைப்புக்களுக்கு 11-14 சதவீத வட்டியே வழங்கப்படுகின்றது.



# முரசம்

## செப்டம்பர் 11 தாக்குதலின் பின் மாறிவரும் உலக ஒழுங்கு

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

சென்ற வருடம் செப்டம்பர் 11ம் திகதி அமெரிக்கா மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் அமெரிக்காவை மட்டுமன்றி முழு உலகையுமே அதிர்ச்சியில் ஆழ்த்திய சம்பவமாகும். பனிப்போர் ஓய்ந்த பின், அமெரிக்கா உலகின் கேள்விக்கிடமற்ற ஒரே வல்லரசாகத் தனக்குத் தானே முடிசூடிக் கொண்டபின், இத்தகைய ஒரு அதிர்ச்சித் தாக்குதல் எந்தப் பக்கத்திலுமிருந்து தம்மீது மேற்கொள்ளப்படுமென்பதை எதிர்பார்க்கவில்லை. இத்தகைய ஒரு எண்ணிப்பாராத திடீர்த் தாக்குதல் தனது இதயத்திலேயே மேற்கொள்ளப்பட்ட நிலையில் அதன் எதிரொலியாக அமெரிக்கா கிளப்பிய பயங்கரவாதத்துக்கு எதிரான பகிரங்க யுத்தப் பிரகடனம் இன்றைய உலக நாடுகளின் தாரக மந்திரமாக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதமென்பதை ஒரு சர்வதேச அச்சுறுத்தலாக உணரச் செய்வதிலும் அதற்கெதிரான எத்தகைய நடவடிக்கையையும் நியாயப் படுத்துவதிலும் அமெரிக்கா வெற்றி கண்டுள்ளது. இதேவேளை அல்கைதாவை ஒழிக்கிறேன் என்ற பெயரில் ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்து அந் நாட்டில் தனது சார்பு அரசாங்கமொன்றை நிலைநிறுத்தியுள்ள போதிலும், அமெரிக்கத் தாக்குதலின் சூத்திரதாரிகள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்கைதா இயக்கத் தலைவர் ஓசாமா பின்லேடனையோ, அவரது முக்கிய தளபதிகளையோ கைது செய்ய அல்லது கொன்றொழிக்க முடியவில்லை. ஆப்கானென்ற நாடு சின்னாபின்னமாக்கப்பட்டதே கண்ட மிச்சமாகியுள்ளது. இதேவேளை, அதன் தொடர்ச்சியாக அமெரிக்கா தற்போது ஈராக் மீதான படையெடுப்புக்குத் தீவிர ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. பயங்கரவாதம் என்பது உலக அச்சுறுத்தலாக சித்திரிக்கப்படுகின்ற அதேவேளை, அதே பயங்கரவாதம் என்ற சொல்லைப் பயன்படுத்தி எத்தகைய காரியத்தையும் மேற்கொள்ளும் ஒரு திறந்த அனுமதியை அமெரிக்கா சுவீகரித்துக் கொள்ள முனைகிறதா என்ற கேள்வி எழுந்துள்ளது. பாலஸ்தீனப் பிரச்சினையிலும் பாலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தை ஜனாதிபதி ஸ்தானத்திலிருந்து மாற்ற வேண்டுமென்ற ஒரு எதேச்சாதிகாரக் கருத்தை அமெரிக்கா முன்வைத்திருந்ததும் இத்தகைய வெளிப்பாடாகத்தான் இருந்தது.

இவற்றுக்கெல்லாம் கால்கோளாக அமைந்தது செப்டம்பர் 11 அமெரிக்கத் தாக்குதல்கள்தான் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. இலங்கைப் பிரச்சினையிலும் இப் பயங்கரவாதம் தொடர்பான உலக விழிப்புணர்வு தாக்கம் செலுத்தியுள்ளது. புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்ததற்கான பிரதானமான அழுத்தம் இவ் உலக அக்கறையே என்று அரசாங்கமும் வெளிநாட்டு ஊடகங்களும் தெரிவித்து வருகின்றன. புலிகள் இக் கருத்தை நிராகரித்திருந்த போதிலும் உலக அபிப்பிராயங்களுக்கு மதிப்பளிக்க வேண்டிய ஒரு நிலையை முகம் கொடுப்பது வெளிப்படையானது. அமெரிக்க வேலைத்திட்டத்தின் போக்கில் பயங்கரவாதத்தை ஒழிப்பதென்ற ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நோக்கிற்கு அப்பால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வை ஈட்டுவது குறித்த அக்கறையையும் சர்வதேச சமுகம் செலுத்த வேண்டுமென்பது முக்கியமானது.

அதேவேளை உலக அரங்கில் தோன்றியுள்ள மாற்றங்களை நிராகரித்து எமது அரசியலை வடிவமைக்க முடியாதென்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

■ ■

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# என்ன செய்யப் போகிறார் ஜனாதிபதி?

நரன்

இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமையில் அதிக நெருக்கடிகளுக்குள்ளாகியிருக்கும் அரசியல் தலைவர் ஜனாதிபதி சந்திரிகா என்றால் அது மிகையாகாது.

இலங்கையின் அதி உயர் அரசியல் அதிகாரத்தைக் கொண்ட தனிப் பதவியான ஜனாதிபதிப் பதவியைத் தன் வசம் கொண்டிருக்கும் அவருக்கு உள்ள சவால், அந்த ஜனாதிபதிப் பதவிக்குரிய அதிகாரங்களையே காவு கொடுக்கப் போகிறாரா இல்லை காப்பாற்றிக் கொள்ளப் போகிறாரா என்ற நிலையை எட்டியுள்ளதென்பது மிகவும் பாரதூரமானது.

இத்தகைய ஒரு கட்டத்திலிருந்துகொண்டு, அரசாங்கத்தையும், சமாதான முயற்சி என்ற வகையில் புலிகள் தொடர்பாக நடந்தேறும் விடயதானங்களையும் அவர் கையாள வேண்டியிருக்கிறது.

இங்கு அவருக்கு உள்ள சங்கடமான நிலைமை என்னவென்றால், சமாதான முயற்சி என்ற நல்ல காரியத்துக்கு எதிரானவராகத் தன்னை முன்னிறுத்தவும் முடியாது, அதேவேளை அக் காரியமென்ற கோதாவில் அவரது ஜனாதிபதிப் பதவிக்குரிய மேலாண்மையை அசட்டை செய்தபடி அவரது அதிகாரங்களை அரசாங்கம் உருவியெடுத்து அவரது செயற்பாடுகளை மேற்கொள்வதை அனுமதிக்கவும் முடியாது, அவ்வாறு அனுமதிக்கும் பட்சத்தில் அதுவே ஒரு பொது விதியாக மாறி ஜனாதிபதியின் அதிகாரங்கள் யாவும் மீறப்படுவதற்கு வழிகோலவிடவும் முடியாது.

ஆனால் ஜனாதிபதி தனது அதிகாரத்தை நிலைநாட்டக் கருதி அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகளைத் தடுக்க முனைந்தால் அவர் சமாதானத்தைத் தடுப்பவராக வெளிக்காட்டப்பட்டு அபகீர்த்திக்கு உள்ளாக்கப்படும் ஆபத்தையும் கொண்டிருக்கிறார்.

இந் நிலை மிகவும் சிக்கலானது.

புதிய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் ஜனாதிபதியின் அதிகாரத்துக்கான சவால்கள் பல தலைதூக்கத் தொடங்கின.

முதலாவது நகர்வாக, ஜனாதிபதியிடமிருந்து பாதுகாப்பு அமைச்சும், நிதியமைச்சும் பெறப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சை இழந்ததால் முப்படைகளின் தளபதியாக அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி அதிகாரம் கொண்டிருக்கும் ஜனாதிபதி, அவ் அதிகாரத்தை நடைமுறையில் செயற்படுத்தும் சட்டங்களை வகுக்கவும், பாதுகாப்புக் குறித்த சட்டங்களை இயற்றிச் செயற்படுத்தவும் வாய்ப்பற்றவராகிப்போனார்.

நடைமுறையில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாடு பாதுகாப்பு அமைச்சரின் கீழானதாகவே மாற்றப்பட்டது.

பாதுகாப்புப் படையினரின் நியமனங்கள், பதவி மாற்றங்கள், பதவி நீடிப்புகள், ஏன் பதவி நீக்கங்கள் கூட, படைத் தளபதிகள் தரம்வரை அரசாங்கத்தின் எண்ணத்துக்கேற்றதாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தது.

முன்னைய அரசாங்கத்தின்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜனாதிபதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த பல பாதுகாப்பு ஏற்பாடுகளும், பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் தலைநகரில் மேற்கொள்ளப்பட்டிருந்த வீதித் தடைகள் யாவும் அவரின் விருப்பு வெறுப்புகளை மீறி நீக்கப்பட்டது, மாற்றியமைக்கப்பட்டது.

இதில் ஜனாதிபதிக்கான பாதுகாப்புப் பிரிவும் கூடத் தப்பவில்லை.

அப் பாதுகாப்புப் பிரிவின் பல அதி உயர்மட்ட அதிகாரிகள் வரை கைது செய்யப்பட்ட போதும் அதை ஜனாதிபதியால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இதேவேளை நிதியமைச்சை இழந்த நிலையில் ஜனாதிபதிக்கான நிதி பெருமளவு வெட்டப்பட்டு அவரின் செயற்பாடுகள் முடக்கப்பட்டது.

இந் நிலையில் சமாதான முயற்சி என்ற வகையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஜனாதிபதியிடம் காண்பிக்கப்படாமலே மறுதரப்பான புலிகள் தலைவர் பிரபாகரனின் கையொப்பம் பெறப்பட்டதென்பது ஜனாதிபதியின் இருத்தலை நகைப்புக்கிடமாக்கும் விடயமாக்கியிருந்தது.

இவ் ஒப்பந்தத்தின் சரத்துகள் சிலவற்றைக் குறித்து ஜனாதிபதி அதிருப்தி தெரிவித்திருந்தது மட்டுமன்றி சில விடயங்கள் நாட்டின் இறைமைக்குக் குந்தகமானவையெனவும் அரசியல் யாப்புக்கு மாறுபட்டவையெனவும் குற்றம் சாட்டியிருந்தார்.

ஆனால் அதை ஒரு சாதாரண நபரின் குற்றச்சாட்டுப்போல, வெளிப்படுத்திவிட்டு வாழாவிருக்க முடிந்ததேயன்றி, அத்தகைய ஒரு ஆபத்தை உணரும் ஜனாதிபதிக்குரிய ஆளுமையுடன் அவரால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை, தனது எதிர்ப்புக்குரிய விடயங்களில் ஒரு சிறு மாற்றத்தையாவது செய்விக்க முடியவில்லை.

இவ்வாறான கையாலாகாத நிலைக்கு உள்ளாகிச் சென்றுகொண்டிருக்கும் நிலையில் அடுத்தடுத்து அவரது கட்சியின் முக்கியஸ்தர்கள் மீது அரசாங்கம் கைவைத்த போதும் அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.

அவரது ஆட்சிக் காலத்தில் மிகவும் அதிகாரமிக்க அமைச்சராக விளங்கியவரும், பாதுகாப்பு அமைச்சுக்கு பதிலமைச்சராக இருந்தவருமான அவரது மாமனார் அநுருத்த ரத்வத்தகூட தனது புத்திரர்கள் சகிதம் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார்.

பல்வேறு முன்னாள் அமைச்சர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன.

இறுதியில் ஜனாதிபதி மீதே குற்றம் சுமத்தப்பட்டது. - குண்டுபுகா வாகனங்களை இறக்குமதி செய்த விவகாரத்தில் ஜனாதிபதி செயலகத்தில் ஊழல் நிகழ்ந்துள்ளதான பழி அவர்மீது சுமத்தப்பட்டது.

அத்துடன் அவரது கைப்பையில் உளவு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் ஒரு பரபரப்பான சர்ச்சை கிளப்பப்பட்டது.

ஆனாலும் அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதி மீது வழக்குத் தொடர முடியாதென்ற காரணத்தால் அவரையும் நீதிமன்றத்தில் நிறுத்துவது சாத்தியப்படாது போய் விட்டது.

இந் நிலையில்தான் அவரது அதிகாரத்தைக் கேலிக்குரியதாக்கும் வகையில் அண்மைய சம்பவங்கள் நிகழ்ந்தேறி வருகின்றன.

தாய்லாந்தில் நிகழவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவித்து வந்தார்.

பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை பிறக்கும் வகையில் முன்னேற்றங்களைக் கண்ட பின்னரே புலித் தடையை நீக்க வேண்டுமென்றும் கூறி வந்தார்.



அவரைச் சந்தித்த பௌத்த மகாசங்கப் பீடாதிபதிகளிடம் தான் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் புலிகள் மீதான தடையை நீக்க அனுமதிக்க மாட்டாரென உறுதியளித்திருக்கிறார்.

ஆனால், அவரைப் பொருட்படுத்தாமலே அரசாங்கம் புலிகள் மீதான தடையைச் சென்ற 5ம் திகதி நீக்கி, வர்த்தமானியிலும் வெளியிட்டு விட்டது.

எப்படி ஜனாதிபதியால் விதிக்கப்பட்ட தடையை அமைச்சர் ஒருவர் நீக்கலாம் என்ற கேள்விக்கு, பாதுகாப்பு அமைச்சர் என்ற கோதாவிலேயே ஜனாதிபதி முன்னர் புலிகள் மீதான தடையை விதித்திருந்தார், இப்போது பாதுகாப்பு அமைச்சராக உள்ளவரால் அதை நீக்க முடியுமென சட்டமா அதிபர் பதிலளித்திருந்தார்.

இதேபோல், முழுமையான அரசியல் தீர்வு பற்றி இணக்கமேதுமின்றி இடைக்கால நிர்வாகமொன்றைப் புலிகளுக்கு வழங்கக் கூடாதெனவும் அவர் தெரிவித்து வருகிறார்.

ஆயினும் இடைக்கால நிர்வாக சபையை வழங்குவது பற்றி அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

இந் நிலையில்தான் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அரசாங்கம் கொண்டுவருகிறது.

இச் சட்டமூலத்தை தான் இல்லாத வேளையில் அமைச்சரவையில் வாதத்திற்கெடுக்க வேண்டாமென லண்டன் சென்றிருந்த சமயம் ஜனாதிபதி அறிவுறுத்தல் கொடுத்திருந்தும்கூட அவரில்லாத வேளையிலேயே அது அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பின்னர் ஜனாதிபதி தான் சில திருத்தங்களை முன்வைக்க விரும்புவதாகத் தெரிவித்ததையடுத்து இதுகுறித்த வர்த்தமானி அறிவித்தல் இடைநிறுத்தப்பட்டு ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

எனினும் ஜனாதிபதியின் யோசனைகளுடன் இணக்கம் காணப்படாததால் அவர் அடுத்தடுத்த பேச்சுவார்த்தைகளுக்குச் செல்லாத நிலையில் தற்போது மீண்டும் அச் சட்டமூலம் ஜனாதிபதி தெரிவித்ததாகக் கூறப்படும் ஒரு திருத்தத்துடன் இம்மாதம் 11ம் திகதி நடைபெறும் விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்படுகிறது.

அதன்பின் மறுநாள் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டு எதிர்வரும் 16ம் திகதி - புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் அதே தினம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் ஜனாதிபதிக்குப் பாராளுமன்றத்தைத் தன்னிஷ்டப்படி கலைக்கும் அதிகாரம் பறிபோய்விடும்.

அத்துடன் கட்சி மாறி வாக்களிக்கும் உரிமையைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுவிடுவர்.

இவற்றின் வாயிலாக ஜனாதிபதியைப் பதவி நீக்கவும் அரசாங்கத்துக்கு வாய்ப்பேற்பட்டுவிடும்.

எவ்வாறாயினும் இச் சட்டமூலத்தை வர்த்தமானியில் அறிவித்த பின்னர் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு விடவேண்டும்.

உச்ச நீதிமன்றம் இது அரசியல் யாப்பிற்கு உட்பட்டுள்ளதாவெனவும், இத்தகைய திருத்தத்திற்குப் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும் பான்மை மட்டுமன்றி சர்வஜன வாக்கெடுப்பும் தேவையா எனவும் தீர்ப்பளிக்கும்.

சர்வஜன வாக்கெடுப்பிற்குச் செல்வதானால் அவ் வாக்கெடுப்புக்கு உத்தரவிடவேண்டியவர் ஜனாதிபதியே. - இது அவருக்கு வாய்ப்பானதாக அமையலாம்.

இதேவேளை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற வேண்டுமானால் ஐக்கிய தேசிய முன்னணிக்கு தமிழ் கூட்டமைப்பும் ஆதரவளித்து மேலதிகமாக 22 வாக்குகள் தேவைப்படும்.

அவ்வாறு தமக்கு சுமார் 30 வாக்குகள் எதிர்க் கட்சித் தரப்பிலிருந்து கிடைக்குமென இச் சட்ட மூலத்தை முன்னிறுத்துகின்ற ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் பிரசாரப்படுத்தி வருகிறார்கள்.

இந் நிலையில் ஜனாதிபதி கைவசமுள்ள அதிகாரங்களை இவ் இறுதித் தருணத்திலாவது பயன்படுத்தித் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முனைவாரா என்ற கேள்விகளும் தலைதூக்காமலில்லை.

தற்போதும்கூட அவரால் பாராளுமன்றத்தை ஒத்திப்போட முடியும். அமைச்சரவையை மாற்றம் செய்ய முடியும். பிரதமரை நீக்க முடியும். புதிய பிரதமரை நியமிக்க முடியும்.

ஆனால் இவ்வாறு செய்ய முனைந்தால் அவருக்கு சர்வதேச அழுத்தங்கள் பெருகுவது ஒருபுறமிருக்க, அவர் பற்றிய நற்பெயர் பாழாகிவிடவும்கூடும்.

எனினும் தனது இறுதி மூச்சுக்கே ஆபத்து ஏற்படுகிறது என்ற தருணத்தில் தர்மங்கள் பற்றி யாரும் சிந்திப்பதில்லை.

எவ்வாறாயினும் தமது கட்சி உறுப்பினர்களிலிருந்து இத்தனை பெருந்தொகையானோரை ஐக்கிய தேசியக் கட்சி மாற்றி எடுத்துக் கொள்ள முடியாதென்றும் பொ.ஐ.மு. வினர் நம்புகிறார்கள்.

இதேவேளை ஐ.தே.மு. வில் இருக்கும் கூட்டுக் கட்சியினரான இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளுக்கு இச் சட்டமூலத்திலுள்ள கட்சி மாறி வாக்களிக்கும் சுதந்திரத்தை வழங்கும் சரத்துக் குறித்து தமது உறுப்பினர்களையே தம்வசம் வைத்துக்கொள்ள முடியாத ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்ற அச்சம் உண்டு.

அத்தோடு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை சிறுபான்மை இனங்களுக்குப் பாதுகாப்பானதென்ற கருத்தையும் இவர்கள் கொண்டிருக்கிறார்கள்.

அதனால் இவர்களின் இறுதிக்கட்ட முடிவு எப்படியிருக்கும் என்பதிலும் சந்தேகங்கள் உள்ளன.

ஆனால் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்காவிட்டால் மறுபடி தேர்தல் ஒன்றை முகம் கொடுக்க நேரிடும் என்ற பீதியும் பல பின்வரிசைப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உண்டு.

இதனைப் பயன்படுத்தி நீங்கள் இச் சட்ட மூலத்துக்கு ஆதரவளிக்காவிட்டால் விரைவில் தேர்தல் நடந்து நீங்கள் பாராளுமன்றத்தையே இழக்க நேரிடும், உங்கள் பதவியைக் காத்துக் கொள்ள எம்மோடு இணையுங்கள் என்ற வலையையே ஐ.தே.மு. எதிரணி எம்.பீ.க்களை நோக்கி வீசி வருகிறது.

இதில் யார் யார் சிக்குவார்கள், சிக்கியவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்குப் போதுமானவர்களா என்பது கேள்விக்குறி.

இச் சட்டமூலத்தைப் பாராளுமன்றத்துக்கு கொணர்ந்து தோல்வியைத் தழுவிக்கொண்டால் அது ஐ.தே.மு. விற்கு ஒரு இறங்குமுகச் சரிவை ஏற்படுத்திவிட்ட சம்பவமாக முடிந்து விடலாம்.

ஜனாதிபதி இந்த அக்கினிப் பரீட்சையை எப்படிக் கையாளப்போகிறார் என்பதில்தான் அவரது அரசியல் சாணக்கியம் வெளித் தெரியும். ■

# காவிரியில் தண்ணீர், ஆனால் சம்பா பிழைக்குமா?

பகீரதப் பிரயத்தனத்திற்குப் பிறகு ஒரு வழியாகத் தமிழகத்தில் காவிரியில் நீர் ஓடத் துவங்கியிருக்கிறது. கர்நாடக மாநிலஅரசு உச்ச நீதிமன்ற உத்தரவை ஏற்று, கடந்த புதன் இரவு 11.15 மணி முதல் கபினி அணையிலிருந்து வினாடிக்கு 12,000 கன அடி நீரைத் திறந்து விட்டது.

காவிரி ஆணையத்தைக் கூட்டி, தமிழகத்தின் தேவைகளைக் குறித்து இறுதி முடிவு எடுக்கும் வரை, தொடர்ந்து நாள்தோறும் 1.25 மில்லியன் கன அடி நீர் தமிழகத்திற்குத் திறந்து விடப்படவேண்டுமென்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. வேறு வழியின்றிக் கர்நாடக மாநில அரசும் நீர் தர ஒத்துக்கொண்டது. ஆனால், அம்மாநில காவிரிப் பாசன விவசாயிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டங்களில் இறங்கியிருக்கிறார்கள். முதல்வர் கிருஷ்ணாவின் தொகுதியான மத்தூரில் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. அதை ஒட்டிய மண்டியாவில் விவசாயிகளுடன் மாணவர்களும் இணைந்து சாலை மறியல் போராட்டம் நடத்தினர். பந்த் டெல்டா பகுதி முழுவதும் பரவும், வன்முறை தலைதூக்கும் என அஞ்சப்படுகிறது.

தமிழகத்துக்குத் தண்ணீர் விடுவதை எதிர்த்துக் கபினி அணையில் குதித்துத் தற்கொலை செய்துகொள்வோம் எனச் சில விவசாயிகள் சங்கத் தலைவர்கள் எச்சரித்துள்ளனர்.

உச்ச நீதிமன்ற உத்தரவு கர்நாடகத்துக்குப் பெரும் அநீதியாகும். எனவே அந்த உத்தரவை நிறைவேற்றக் கூடாது என அவர்கள் கோரியுள்ளனர். இடைக்கால உத்தரவினை நிறைவேற்றாவிட்டால் உச்ச நீதிமன்றத்தினை அவமதிப்பதாகும் என்றஞ்சியே, நீரைத் திறந்து விட ஒத்துக்கொண்ட கிருஷ்ணா விழிக்கிறார். முன்னாள் முதல்வர்கள், பல்வேறு கட்சித் தலைவர்கள் என்று ஒவ்வொருவர் வீட்டின்படியேறி, தனது அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு கோரி வருகிறார்.

ஒவ்வொரு முறையும் குறுவை, சம்பா சாகுபடியின்போது இந்தப் பிரச்சனை பெரிதாக உருவெடுக்கும். நல்ல மழை பெய்து, கர்நாடக அணைகளில் நீர் நிரம்பினால், வேறு வழியின்றி, அதிகப்படி நீரைத் தமிழகத்திற்குத் திறந்து விடுவது வாடிக்கை. அப்படித் திறந்து விடவில்லையென்றால் அணைகள் உடைந்துவிடுமே.

ஆனால்,தட்டுப்பாடானால் சொட்டுத் தண்ணீர்கூட விடுவதில்லை. இருக்கும் நீரினைப் பகிர்ந்து கொள்வோம் எனப் பரந்த மனப்பான்மை யாருக்குமேயில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

1924 ஆம் ஆண்டு அன்றைய மைசூர் சமஸ்தானத்திற்கும் பிரிட்டிஷாரின் ஆளுகையில் இருந்த சென்னை இராஜதானிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் தமிழகத்திற்கு மிகச் சாதகமானது என்பதை மறுப்பதற்கில்லை. அன்றைய காலகட்டத்தில் மைசூர்ப் பகுதிகளில் அவ்வளவாக விவசாயம் பரவவில்லை. தஞ்சைத் தரணி கொழித்துக் கொண்டிருந்தது. தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கியது. எனவே அன்றைய நிலைவரப்படி தமிழக விவசாயிகளின் நலன்களைக் காக்கும் வழியிலேயே அந்த ஒப்பந்தம் அமைந்தது.

மேலும் பிரிட்டிஷாருக்குப் பணிந்து போவதைத் தவிர மைசூர் அரசருக்கு வேறு வழியில்லாமல் இருந்திருக்கலாம். இதையெல்லாம் தமிழக அரசியல் தலைவர்களோ அறிவுஜீவிகளோ ஏற்றுக்கொள்வதில்லை. மறுபக்கம் கர்நாடகம் விடுதலை பெற்ற நாளிலிருந்து தனது விவசாயத்தைப் பெருக்க வேண்டி, மேலும் மேலும் அணைகளைக் கட்டி, நீரைத் தேக்கி, 1924 ஒப்பந்தத்திற்கு முரணாகக் குறைந்த அளவு நீரையே விட்டு வந்தது. ஐம்பது ஆண்டுகளில் அந்த ஒப்பந்தத்தினை மறு ஆய்வு செய்தாக வேண்டும். ஆனால் தமிழகம் ஒத்துக்கொள்ளவில்லை.பேச்சுவார்த்தை இழுத்துக்கொண்டே போனது. விட்டுக் கொடுத்துப் போனால் ஐந்திற்கு இரண்டாவது பழுதில்லை என்ற அளவில், இரண்டு தரப்பிற்கும் ஓரளவாவது நியாயம் கிடைப்பதுபோல் புதிய ஒப்பந்தம் ஒன்றினை உருவாக்கியிருக்கலாம்.

ஆனால், 1924 ஒப்பந்தத்தினை வைத்துக் கொண்டு தமிழகம் முரண்டு பிடித்தது. விளைவு, தன் விருப்பம் போல் கர்நாடக அரசு நீரைத் திறந்து விடுகிறது. ஒவ்வொரு முறையும் தமிழகம் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றே ஓரளவாவது நீதியினைப் பெற முடிகிறது.

காவிரி தாவா குறித்த நடுவர் மன்றம்(ட்ரிப்யூனல்) அளிக்கின்ற பரிந்துரைகளை அமுல்படுத்தக்கூட உச்ச நீதிமன்றத்தின் உதவி தேவைப்படுகிறது. இந்திராகாந்தி காலத்திலிருந்து மத்திய அரசுகள் தொடர்ந்து தங்கள் கையைக் கழுவி விட்டு, உச்ச நீதிமன்றம் கூறுவதை அமுல்படுத்துவது மட்டுமே தங்கள் கடமை என்பதுபோல் நடந்துகொள்கிறார்கள்.

இந்த ஆண்டு ஏற்கனவே குறுவை சாகுபடி ஏறத்தாழ முற்றிலுமாகக் கருகிவிட்டது. ட்ரிப்யூனலின் இடைக்காலப் பரிந்துரைப்படி, ஆண்டுக்கு 205 மில்லியன் கன அடிநீர் தமிழகத்துக்குக் கர்நாடகம் திறந்து விடவேண்டுமென்றாலுங்கூட, பற்றாக்குறைக் காலங்களில், இருப்பதைப் பகிர்ந்து கொள்ளும் அளவு ஒரு திட்டத்தினையும் ட்ரிப்யூனல் வகுத்துக் கொடுத்திருக்கிறது. ஆனால் எதனையும் கர்நாடகம் மதிப்பதில்லை. குறுவை போகிறதேயென்றால், எல்லாம் ஒரு போகம் பயிரிட்டால் போதும் என்கிறது. தமிழக அரசுகூட வேண்டுமென்றே குறுவையின்போது தேவையான நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டதாகவே கூறப்படுகிறது. நன்கு விளைந்துவிட்டால், நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும். அதற்கான நிதி ஆதாரமுமில்லை, எடுத்துக்கொள்ளப்படும் நெல்லை பாதுகாக்கக்கூடப் போதிய கிடங்கு வசதிகளுமில்லை. எனவேயே குறுவையைக் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டார் ஜெயலலிதா என்று நம்பப்படுகிறது. ஆனால், குறுவை பொய்த்தால் மிக அதிகமாகப் பாதிக்கப்படுவது விவசாயத் தொழிலாளர்கள்தான். அவர்களது பரிதாபகரமான நிலை பற்றித் தொடர்ந்து பத்திரிகைகள் செய்தி வெளியிட, அரசு சில நிவாரணப் பணிகளை அறிவித்தது. இந் நிலையில், சம்பாவும் இல்லையென்றானால் உணவு உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்படும். தனது அரசிற்கு மிகவும் அவப்பெயர் என்பதை நன்கு உணர்ந்து, ஜெயலலிதா மத்திய அரசிற்கு நெருக்கடி கொடுத்து, நதி நீர் ஆணையத்தைக் கூட்ட வைத்தார்.

ட்ரிப்யூனல் நீதிபதிகள் அடங்கிய விசாரணைக் குழுவாகும். ஆணையம் என்பது பிரதமர், சம்பந்தப்பட்ட மாநில முதல்வர்கள், அதிகாரிகள் அடங்கிய குழு. ட்ரிப்யூனலின் உத்தரவுகளை அமுல்படுத்த அமைக்கப்பட்ட குழுதான் ஆணையம் என்று வைத்துக்கொள்ளலாம். அல்லது நீதிமன்றத்தின் முன் சொல்லாமலேயே பிரச்சனைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ள உதவும் மன்றம் எனவும் கருதலாம். ஆனால், ஆணையத்தாலும் பயன் ஏதும் நிகழ்ந்துவிடவில்லை. இம்முறை கூட்டப்பட்ட போது, எங்கள் பகுதியிலும் வறட்சி, ட்ரிப்யூனல் பரிந்துரைப்படி நீர் கொடுக்கவியலாது எனக் கர்நாட கம் கைவிரிக்க, கோபித்துக் கொண்டு வெளிநடப்புச் செய்தார் ஜெயலலிதா. அதன்பிறகுதான் அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகியது. மறுபடியும் வறட்சி என்று கர்நாடகம் அதே பல்லவியைத்தான் பாடியது.

**கானகன்**

ஆனால் நீதிபதிகள், அது அளித்த தகவல்களின்படியே, கர்நாடக அணைகளில் தமிழகத்திற்கு, குறிப்பிட்ட அளவு நீர் வழங்கப் போதுமான இருப்பு உள்ளது எனச் சுட்டிக் காட்டினர். மறுபடி ஆணையம் கூடித் தேவைபற்றி இறுதி மதிப்பீடு செய்யும் வரை நாள்தோறும் 1.25 டி.எம். சி. நீர் தமிழகத்திற்கு வழங்கவேண்டுமென உத்தரவிட்டனர். இப்போது ஆணையத்தைக் கூட்ட வேண்டுமென்கிறது கர்நாடகம். ஆனால் கூட்டினால் மட்டுமென்ன,அத்துடன் தமிழகம் ஒத்துழைக்கப் போகிறதா?

வடகிழக்குப் பருவ மழை அக்டோபர் இரண்டாவது வாரம் தொடங்கலாம். அதுவரை நாள்தோறும் பத்து மில்லியன் கன அடி நீர் கிடைத்தாலும் போதும், சம்பாவைக் காப்பாற்றிவிடலாம் என்பது தமிழக விவசாயிகளின் நப்பாசை. ஆனால், அதுவரை கர்நாடகம் நீர் கொடுத்துக் கொண்டிருக்குமா, அங்குள்ள விவசாயிகள் சும்மா இருப்பார்களா? வன்முறை தலைதூக்குமா, தமிழர்கள் பாதிக்கப்படுவார்களா என்பதே இன்றைய கேள்விகள். பத்தாண்டுகளுக்கு முன்பு, காவிரி தாவாவை விசாரிக்கும் ட்ரிப்யூனலின் இடைக்காலப் பரிந்துரைகளை அன்றைய நரசிம்மராவ் அரசு கெசட்டில் அறிக்கையாக வெளியிட்டபோது தமிழர்களுக்கு எதிராகக் கர்நாடகத்தில் பெரும் கலவரம் வெடித்தது. பலர் உயிரிழந்தனர்.

சொத்துக்களுக்குப் பெரும்சேதம், மாண்டியா பகுதியிலும், பெங்களூரிலும், தமிழர்கள் பெரு மளவில் பாதிக்கப்பட்டார்கள். அதேபோன்ற நிலை மீண்டும் உருவாகுமோ என்றுதான் பலரும் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய சூழலில் முன்னாள் கர்நாடக அமைச்சர் நாகப்பா கடத்தல் பிரச்சனை வேறு. கடைசியாக வந்த செய்திகளின்படி, வீரப்பன் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறனையும், கொளத்தூர் மணியினையும் தன்னிடம் தூதுவர்களாக அனுப்ப வேண்டுமென கோரியிருப்பதாகக் கூறப்படுகிறது. இங்கோ காவிரிப் பிரச்சனையில் தனக்கு மாபெரும் வெற்றி கிடைத்துவிட்டது என்றும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் முதல்வர் ஜெயலலிதா, வீரப்பனைச் சங்காரம் செய்தே தீருவேன். பேச்சுவார்த்தை கிடையாது என முழங்கி வருகிறார்.

எல்லோரும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் சற்று நிம்மதி தரும் ஒரே விஷயம் ஏதோ நீதிமன்றத் தீர்ப்புகளுக்காவது ஓரளவு மரியாதையிருக்கிறது என்பதுதான்.

---

# காலம் தவறிய இரங்கல்

இம்முறை த.வி.கூவின் படுகொலை செய்யப்பட்ட செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் அவர்களின் நினைவு தினம் கூட்டணி வட்டாரங்களால் அனுட்டிக்கப்பட்டது.

திரு. அமிர்தலிங்கம் அவர்கள் மறைந்து 12 ஆண்டுகள் ஆகியும் மௌனம் சாதித்தவர்களுக்குத் திடீர் என்று எவ்வாறு ஞானம் பிறந்தது? எவ்வாறு துணிவு பிறந்தது? எவ்வாறு வீரம் விளைந்தது? என்ற கேள்விகள் புருவங்கள் நெரிய எழவே செய்கின்றன.

நாளிதழ்களில் சம்பந்தரும் யாழ் பல்கலைக்கழக சிற்றம்பலத்தாரும் அமிர்தலிங்கம் அவர்களைப் பற்றிக் கட்டுரை வரைந்திருந்தார்கள். அவருடைய பங்களிப்புக்கள் பற்றி ஊடகவியலாளர் டி.பி.எஸ். அவர்களும் அவரது தலைவிதியை யார் நிர்ணயித்தார்கள் என்பதுவரை தெளிவாக எழுதியிருந்தார். ஆனால் முன்னையவர்கள் இருவரும் தமது சகாவும், வழிகாட்டியும், தலைவருமான மனிதர் எத்தகைய குரூர மரணத்திற்கு உள்ளானார் என்பதனைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் த.வி.கூ. செயலதிபர் சம்பந்தர் அவர்கள் யாருடைய கோபத்திற்கும் இரையாகி விடக் கூடாது என்பதற்காக அமிர்தலிங்கத்திற்கும் தனக்குமிடையே ஒரு சில கருத்து வேறுபாடுகள் இருந்ததாக தனது கட்டுரை போகிற போக்கில் எழுதியிருக்கிறார். அது எல்லாருடைய கண்ணுக்கும் தெரிய வாய்ப்பில்லை. ஆனால் அந்த இடத்தில் ஒரு பாரதூரமான தவறு இழைக்கப்படுகிறது. அதாவது அமிர்தலிங்கம் அவர்களின் படுகொலையுடன் சமரசம் செய்ய முனையும் ஒரு எத்தனிப்புக் காணப்படுகிறது.

அமிர்தலிங்கம் அவர்களின் 75 ஆண்டு கால வாழ்க்கையில் 40 ஆண்டுகள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துடன் தொடர்புபட்டிருந்தது. இலங்கைத் தமிழ் தேசியத்தின் வரலாறு சொல்லப்படும் போது அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் அவர்களை விட்டு வீட்டுக் கூறமுடியாது. அப்படியான காரியத்தைச் சிலர் இப்போதும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அமிர்தலிங்கம் அவர்கள் வடக்குக் கிழக்கின் மூலைமுடுக்கெல்லாம் திரிந்து வேலை செய்தவர்.

தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நீண்ட ஆழமான சொற்பொழிவுகளை அவர் பாராளுமன்றத்தில் நிகழ்த்தியுள்ளார்.

வடக்குக் கிழக்கில் நடைபெற்ற அனேகமான சத்தியாக்கிரகங்கள், அகிம்சைப் போராட்ட நடவடிக்கைகளில் அவர் பங்கு பற்றியிருக்கிறார். இராணுவமுகாம்கள், சிறைச்சாலைகளில் அவர் தடுத்து வைக்கப் பட்டிருந்திருக்கிறார். உரிமைகளுக்கு குரல் கொடுத்ததற்காக அவர் பேரினவாதிகளால் தாக்கப்பட்டிருக்கிறார். அவர் வாழ்ந்த கால கட்டத்திற்கேற்ப அவர் நியாயமாகவே தனது பங்களிப்பைச் செய்திருக்கிறார்.

இலங்கையின் குடியரசு அரசியல் யாப்பை எதிர்த்ததற்காக அவர் 1970களின் முற்பகுதியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ட்ரயல் அட்பார் வழக்கினைச் சந்தித்தார்.

புதிய தலைமுறை 70களின் முற்பகுதியில் வீறுகொண்டெழுந்தபோது அவர்களின் கவர்ச்சி மிகுந்த தலைவராக அவர் இருந்திருக்கிறார்.

அவர் த.வி.கூ. விற்கோ அல்லது தமிழரசுக் கட்சிக்கோ மாத்திரம் உரிமையானவர் அல்ல. அவர் தமிழ் தேசியத்தின் ஒரு கால கட்டத்தின் குறியீடாக இருந்தார்.

துரோகிகள் என்று நாமம் சூட்டப்படுபவர்கள் எல்லாம் அழிக்கப்படவேண்டியவர்கள் என்ற தமிழ் அரசியலின் பங்குதாரராக அவரும் இருந்திருக்கிறார். ஆனால் அந்தத் தவறான அரசியலை விழுங்கிக் கொண்ட ஆயுதம் தாங்கிய அடுத்த தலைமுறை அவரது உயிரைக் காவு கொண்டது.

அவர் ஈழத் தமிழர் பிரச்சனையை சர்வதேச மயப்படுத்த வேண்டும் என்பதில் முன்னெடுப்பாளராகத் திகழ்ந்தார்.

அன்னை இந்திராகாந்தி, தந்தை பெரியார் போன்ற இந்திய, தமிழக தலைவர்களையும் மற்றும் பல ஐரோப்பிய தலைவர்களையும் அவர் சந்தித்துள்ளார். ஈழத்தமிழர் பிரச்சினையை சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்வதிலும் ஈழத்தமிழர்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதிலும் அவர் இந்தியா தொடர்பாக உயர்வான மதிப்பீடுகளைக்கொண்டிருந்தார்.

> போதாக் குறைக்கு அமிர்தலிங்கம் பற்றிய குறிப்பெழுதிய பல்கலைக்கழக பேராசிரியர், மாவையை அமிர்தலிங்கத்தின் வாரிசு என்று எழுதியிருக்கிறார். வரலாற்றாசிரியர்கள் வரலாற்றுத் தர்மத்தை சிறிதாவது உணர வேண்டும். சில தலைவர்கள் வரலாற்றால் உருவாக்கப்படுகிறார்கள். யாராலும் நியமிக்கப்படுவதில்லை.

பல்லைக்கழகத்தில் படித்த காலத்தில் என். எம்.பெரேராவின் மாணவனாக இருந்ததனால் இடதுசாரி இயக்கத்திலும் அவருக்கு ஈடுபாடிருந்தது.

பண்ணாகத்தில் பிறந்த அமிர், இறக்கும் வரை எளிமையாகத்தான் வாழ்ந்தார். கட்டுப்பாடு, ஒழுக்கமுள்ள திருவாளர் அமிர்தலிங்கம் அவர்கள் தனக்கோ, தமது உற்ற சுற்றத்திற்கோ சொத்துச் சேர்த்தவரல்ல. தமது வட்டுக்கோட்டை வீட்டைத் தவிர பெரிதாக எதுவும் இருந்ததில்லை.

அமிர்தலிங்கம், அவர் மனைவியார் மங்கையற்கரசி ஆகிய இருவருமே குடும்பமாக தமிழ் தேசிய உரிமைப் போராட்டத்திற்கு ஆற்றிய பங்கு நிராகரிக்க முடியாதது.

அவரது குரூர மரணம் கொழும்பில் நிகழ்ந்த போது அது ஈழத் தமிழர் வாழ்வில் நிகழ்ந்த அபசகுனமாகவே கருதப்பட்டது. ஈழத்தமிழர் வாழ்வு எவ்வளவு இருண்டதாக இருக்கப்போகிறது என்பதற்குக் கட்டியம் கூறுவதாக இருந்தது.

அமிர்தலிங்கத்துடன் ஒப்பிடுகையில் இன்று உயிரோடிருக்கும் பலரின் யோக்கியம் கேள்விக்குரியது. முயல் விழுந்தது நரிக்குத் தாயம் என்பது போல்தான் பலர் வாழ்கிறார்கள். துரோகிகளாகக் கொல்லப்படுவதில் இருந்து மயிரிழையில் தப்பியவர்கள் சிலர் தமிழ் தலைவர்களாகி விடுவது, மாமனிதர்களாகிவிடுவது இன்றைய ஈழத்தமிழர் அரசியலின் 'பாஷன்'.

அமிர்தலிங்கம் அவர்கள் மரணித்த போது, மரணத்தின் வாயிலுக்குச்சென்று திரும்பிய சிவசிதம்பரம் அவர்கள் புலிகளின் கேள்விக்கிடமற்ற தலைமையை அங்கீகரித்ததால் அவரின் பூதவுடலில் புலிகளின் மாலை விழுந்தது. அமிர்தலிங்கம் அவர்கள் அவ்வாறு ஒன்றும் சொல்லாமல் கொள்ளாமல் தான் வரிந்துகொண்ட நிலைப்பாட்டில் நின்று மரணித்தவர்தானே.

இதனை விளங்கிக் கொள்ளாமல் 12 வருடம் மௌனமாக இருந்து விட்டு ஆகஸ்ட் 26ந்திகதி அவரது 75வது பிறந்த நாளில் நினைவு கூரப் புறப்பட்ட பிரகலாதன்களாகக் கூட்டணியினர் அவர்கள் புலிகளின் சினத்திற்காளாகியிருக்கிறார்கள்.த.வி.கூ. வினர் லண்டனில் நடத்திய இரங்கல் கூட்டத்திற்கு யாரும் செல்லக் கூடாது எனத் துண்டுப்

**தாகூர்**

பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அடக்கமாக காரியாலயத்தினுள் நடத்துமாறு பணிக்கப்பட்டது. பத்திரிகைகளில் அதுபற்றிய செய்திகள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது.

போதாக் குறைக்கு அமிர்தலிங்கம் பற்றிய குறிப்பெழுதிய பல்கலைக்கழக பேராசிரியர், மாவையை அமிர்தலிங்கத்தின் வாரிசு என்று எழுதியிருக்கிறார். வரலாற்றாசிரியர்கள் வரலாற்றுத் தர்மத்தை சிறிதாவது உணர வேண்டும். சில தலைவர்கள் வரலாற்றால் உருவாக்கப்படுகிறார்கள். யாராலும் நியமிக்கப்படுவதில்லை. ■

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8**

**எமது புதிய காட்சியறை**

**184-A, Havelock Road, Colombo-05.**

**Tel :01-507334**

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ன, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

---

# இதோ இடமாற்றம்

இதுவரை வெள்ளவத்தை சிலோன் இன் கட்டடத் தொகுதியில் இயங்கி வந்த எமது

## வெள்ளவத்தை ஒப்ரிக்கல்ஸ்

இடமாற்றப்பட்டுள்ளது. எமது புதிய விலாசம்: இல, 473, 1/2 - காலிவீதி, வெள்ளவத்தை கொழும்பு-06. (ஹோட்டல் ரன்மன் லங்காவுக்கு எதிரில்) தொ.பே:075-517135

★ இலவச கண் பரிசோதனை ★ விஷேச சலுகை 450/=ற்கு வாசிக்கும் கண்ணாடி 15/09/02 இலிருந்து 15/10/02 வரை

---

## மஹாரிஷிகளின் மாந்திரீக வசியசக்தி
## Meditation Yoga Cosmic VibrationPower



MY GURU

பிரிந்துசென்றவர்கள் வெறுப்பவர்கள் வேண்டியவர்கள் எங்கிருந்தாலும் வந்து உறவாகும் அற்புத ஆகர்ஷன வசியம்! காதல்திருமணம் சம்பந்தப்பட்டவர்களின் சம்மதங்களுடன் நிறைவேறும் குடும்ப வசியம்! விதியினால் அல்லது சதியினால், கண்ணூறு, நாவூறு, கிரகதோஷம், கர்ம வினை, காலப்பகைகளினால், வேறு தீய சக்திகளினால் ஏற்பட்ட தீராத உடல்னோய் மன னோய் காதல், திருமணம், கல்வி, தொழில், வியாபாரம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத்தடைகளை இறைவன் துணையோடு ஆன்மீக மாந்திரிக மருத்துவ முறைப்படி தீர்த்து எத்துன்பங்களும் ஏற்படாமல் தெய்வீக தாயத்து, தெய்வீக ரட்ஷைகளினால் காவல் செய்ப்படுதுடன் ஸ்த்திரி புரிஷ வசியங்கள் ஜனராஜதேவ வசியங்களினாலும் சகல காரியங்களிலும் வெற்றிபெறுகின்றார்கள் போதைவஸ்துப் பாவனை வேறு கெட்ட பழக்கங்கள் தகாத விரும்பாத ஆண் பெண் உறவுகளை மறப்பிக்கப்படுகின்றன.

*SEXUAL INTERCOURSE. பாலியல் பிரச்சனைகள் வாலிபர்களே! திருமணமானவர்களே!. "விந்துவிட்டான் நொந்து கெட்டான்" "மாதமிருமுறை மாதரைப் புணர்ந்து" காம எண்ணங்களினாலும் விதிமுறைகளை மீறியதாலும் தகாத முறைகளில் கூடியளவில் விந்தை விரயம் செய்தவர்க்கு பலரோகங்கள் ஏற்படுவதுடன் உடல் உஸ்ணமடைந்து உயிர்த்தாதுக்கள் கேடடைந்து விந்து நீர்த்து தண்ணீர் போலாகி கனவிலும் சிறுநீலும் விந்து வெளியேறுவதுடன் உறவின் போது கெதியில் சக்தியிழந்து தளர்வு ஏற்பட்டு தனக்கும் தன்னைச் சேர்ந்தவளுக்கும் பூரண திருப்தியில்லாமல் விரக்திடைந்து வேறுகாரணங்கள் கூறி பிரிந்த குடும்பங்கள் எத்தனையோ. வீரியக் குறைவு-ஆண்மைக்குறை, மலட்டுத் தன்மை இப்படிப் பல பாலியல் பிரச்சனைகள் ஆண்களுக்குமுண்டு பெண்களுக்குமுண்டு. மேற்கூறிய பிரச்சனையுடைவர்கள் கூடிய காம சுகபோகம் அனுபவிக்கத் துடிப்பவர்களுக்கு போதைமஸ்து அற்ற புராதன கொக்கோ முனிவரின் காம சூத்திரத்திலும் போக முனிவரின் காம சாஸ்த்திரத்திலும் கூறிய தங்கபஸ்பம், காண்டாமிருக கொம்பு சேர்ந்த மருந்துக்களும் மஹாரிஷிகளின் 64 மூலிகைகள் அடங்கிய ஔடதங்களினால் ஆன "நரசிங்க லேகியம்" இன்னும் ரகசிய பாலியல்போக மருந்துக்களினாலும் ஜேர்மன் நவீன ஹோமியோபதி மருந்துக்களினாலும் மனோவசியத்தினாலும் உடல் மனதைச் சீராக்கி சிறப்புச்சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன உடல்பலம், மனோபலம் பெற்று திருப்தியான நீண்ட இல்லற சுகபோகம் அனுபவிக்கின்றார்கள்.*

எவரக்கும் தீங்கு இல்லாததும் பக்கவிளைவுகள் இல்லாததும் எல்லாமதத்தினர்களுக்கும் ஏற்ற மந்திர, ஐந்திர, வசியங்கள் வைத்தியங்கள் செய்துகொள்ள மட்டக்களப்பு கல்லடி குருசக்தி நிலையத்தின் பிரதம குருவிடம் வரமுடியாதவர்கள் கடல்கடந்த வெளிநாட்டவர்கள் பதிவு கடுகதித்தபால் முக்கியமாக உடனடி தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் தொடர்பு கொண்டு மருத்துவ மனோத்துவ ஆன்மீக அறிவுரைகளுடன் புனித பரிகாரப்பொருட்களை விஷேட கடுகதித் தபாலில் பெற்று கோரிக்கைகளை உடன் நிறைவேற்றிக்கொள்கிறார்கள்.

(இந்திய) ஹிமயமலை மஹாரிஷிகளின் சித்தர்களின் புராதன சூட்சும மருத்துவத்திலும் (ஜேர்மன்) ஹோமியோபதி (Homoeopathy) (சீன) அக்குப்பங்சர் (Acupuncture) போன்ற நவீன மாற்று மருத்துவங்களிலும் மருத்துவப்பட்டங்கள் பெற்ற இந்தியாவிலும் இலங்கை அரசாங்க சுகாதார அமைச்சின் தேசிய (National) (Medical Council) மருத்தவக் கவுன்சிலினால் சகல ரோகங்களுக்கும் சிகிச்சை அளிக்க 1948ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட டொக்டர் பதிவு இல. 61 சுகாதார அமைச்சின் மட்டக்களப்பு சித்த ஆயுர்வேத பாரம்பரிய மருத்துவ பாதுகாப்புச் சபையின் முன்னால் தலைவர்(President) இன்னால் சர்வதேச ரூசிவல் மாற்று மருத்துவ ஆராட்சியாளர் மஹாரிஷிகளின் இராஜவைத்திய பூசகர் பரம்பரை. மாந்திரிக மருத்துவ மனோதத்துவ(Psychotherpy) யோக சிகிச்சை நிபுணர். மட்டக்களப்பு-மலையாள-அராபிய மந்திர சித்தி யோக சக்தி!

*INTERNATIONAL TRADITIONAL MEDICAL RESEARCH & SPIRITUAL CHARITABLE SERVICES*

(யோகி பாபா) YOGI-DR.T.MYLVAGANAM.(யோகி டாக்டர் T.மயில்வாகனம் )

R.H.M.D.-D.Acu-(இலங்கை)P.I.S.M.(இந்தியா)

Registered By Ministry of Health, & Ministry of Hindu Religious & Cultural Affairs, Charitable Services

தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்
GURUSACKTHY CENTRE
RAMAKRISHNA PURAM ROAD
KALLADY- BATTICALOA(PO) (SRI LANKA).

ரெலிபோன்-பக்ஸ் (மாலை 6மணிதொடக்கம் 7.30வரை தியானநேரம்).
உள்நாடு 065-24872 காலை 9 இருந்து மாலை 5மணி வரை
வெளிநாடு 0094 65 24872 காலை 9 இருந்து இரவு 11 மணி வரை
ஈ மெயில்(E Mail) yogibaba@sltnet.lk

நேரில் ஆலோசனைகள் பெறும் நாட்கள் வெள்ளி, சனி - அவசர தேவைகளுக்கு
கடல்கடந்த வெளிநாட்டவர்களுக்கு விசேட தியானயோக ஆன்மீக அலைகள் கொஸ்மிக் வைவிரேஷன் மருத்துவம் வசியம்

---



**Wedding PHOTOGRAPHER**

27/23A, Madampitiya Road, Colombo - 15.
Hotline: 077 321345, Tele: 527933

Your Satisfaction Is My Success

---

**கணனிப் பொறியியல் பயிலுநர்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம்**

**Diploma In Computer Hardware Engineering**

**Duration: 1 Month Practicle. 2 Months Training**

**நன்மைகள்:**

அனுமதி இலவசம். ஒவ்வொரு மாணவரிலும், தனிப்பட்ட விசேட கவனம். பயிற்சி முடிவில் கணனிகளை பயிலுநர்களே அமைத்துக் கொள்ளவும் பழுது பார்த்துக்கொள்ளவும் உத்தரவாதம். இலகு தவணைக் கட்டண வசதிகள். பயிற்சி முடிவில் சான்றிதழ். இலவச *Internet E-mail* இணைப்பு வசதி.

விண்ணப்பங்கள் வாரத்தின் எல்லா நாட்களிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

உடன் தொடர்புகளுக்கு:-

**R.Solution, 09, Nelson Place, Wellawatte, Colombo-06.**
**Hot line: 077-793359**

---

# இலவசம் இலவசம் இலவசம்

## வெளிநாட்டில் பணிப்பெண் வெற்றிடங்கள்

வெளிநாட்டில் தொழில்புரியச் செல்லும் உங்கள் வாழ்க்கைச் சுமைக்குத் தோள் கொடுக்க

அனுமதி பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் இப்போது தயாராகவுள்ளது.

## குவைட்~டுபாய்~சவூதி

எமது நிறுவனத்தின் மூலமாகப் புறப்படும் உங்களுக்குகிடைக்கப்பெறும் சலுகைகள் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம் எமது நிறுவனத்தின் மூலமாக செலுத்தப்படும். (குவைட் – சவூதி)

அது மாத்திரமன்றி நீங்கள் வெளிநாடு புறப்படுவதற்கு முன்னரே நீங்கள் பணியாற்றச் செல்லும் வீட்டின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களை முன் கூட்டியே பெற்றுத் தருவோம்.

சேவைக் காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு உடனடி நிவாரணம் பெற்றுக் கொடுக்கப்படும்.

மேலும், வளைகுடா, குவைத் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ள சாரதிகளுக்கும் புதிய சாரதிகளுக்கும் வெற்றிடம் உண்டு.

அங்கீகரிக்கப்பட்ட ஒரு முகவர் மூலமாக சரியான முறையில் வெளிநாடு செல்ல

## ஸ்கை ட்ரவல் அன்ட் டுவர்ஸ்

அனுமதிப்பத்திர் இல. 1832

இல: 528 - A முதலாம் மாடி, மருதானை வீதி, கொழும்பு-10, ஸ்ரீ லங்கா.

தொ.பே: 074-723435, 074-723760, 074-724464.
பெக்ஸ்: 074-723435

---

## விதுஜா ஏசியன் சொப்

# VIDUJA ASIAN SHOP

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:- 031-3113510, 031-9928267, 079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய விடியோ பிரதிகள் வாடகை சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.

விதுஜா ஏசியன் சொப்

---

விளம்பரப் பகுதி

# பணிப்பெண் வேலைவாய்ப்புக்கள்

## மலேசியா/சிங்கப்பூர்

சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் தமிழ் பேசும் / ஏனைய பணிப்பெண்களுக்கான ஏராளமான வேலைவாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. தமிழ் பணிப்பெண்களுக்கு பாதுகாப்பான தமிழ் இல்லங்களிலேயே வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

நிபந்தனைகளும் விதிமுறைகளும்

- வயது - மலேசியா 25 – 40 வரை, சிங்கப்பூர் 20 – 40 வரை
- சம்பளம் - மலேசியா - RM - 500 ரூபா - 12,000 முதல்; சிங்கப்பூர் - S$ 220 - S$ 250 ரூபா - 11,000 முதல்
- உணவு, தங்குமிட வசதி, வைத்திய வசதி இலவசம்
- சேவைக்காலம் இரண்டு வருடங்கள்
- இரு வழி விமான டிக்கட் இலவசம்

நீங்கள் இதற்கு முன் வெளிநாட்டில் பணிபுரிந்த அனுபவமுள்ளவராகவும், ஆங்கிலம் அல்லது பிற மொழிகள் பேசக் கூடியவராகவும் இருந்தால் கூடுதலான சம்பளத்துடன் தேர்தெடுக்கப்பட்ட இல்லங்களில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு எம்மை நேரில் தொடர்பு கொள்ளவும்.

**உங்களது பாஸ்போட், பாஸ்போட் அளவிலான 3 கருப்பு வெள்ளை புகைப்படங்கள், 6 வர்ண புகைப்படங்கள், போஸ்காட் அளவிலான 2 வர்ண புகைப்படங்கள் சகிதம் நேரில் வரவும்.**

## ட்ரான்ஸ் கல்ப் பிரைவேட் லிமிட்டட்

TRANS GULF TGL GROUP Since 1990

இலக்கம் 47, இரண்டாம் மாடி, ஹொஸ்பிட்டல் வீதி, கொழும்பு 01.
(ஹில்டன் ஹோட்டலுக்கு அருகாமையில்)
தொலைபேசி இல: 321132, 329258

**உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாய் மாற்றிடும் நிரந்தர ஸ்தாபனம்**

WAZ ADS

---



## மலையாள மாந்திரிக வசியம்


உங்கள் வாழ்க்கையில் தொடர்ந்தும் தோல்வியா? நிம்மதியில்லையா? உங்கள் ஆசைகள் நிறைவேறவில்லையா? இதோ உங்களுக்கு ரிஷிகள் கையாண்ட மாபெரும் மலையாள மாந்திரிக சக்தி கவசம் என் கையில் உண்டு. கணவன்,மனைவி பிணக்குத் தீர்ந்து சுகபோக வாழ்வு பெற, பிரிந்த காதல் ஒன்று சேர, காதல் கைகூட, தீரா நோய் தீர, குழந்தைப் பாக்கியம் கிட்ட, திருமணம் நடக்க, கல்வியில் பெறுபேறு கிட்ட, குபேர வாழ்வு பெற, அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகக் கணிப்பு என்றுமே பிழைத்ததில்லை. நடப்பது, நடக்கப்போவது, நடக்க இருப்பது, இன்று,இந்த மாதம், இந்த வருடம் உங்களுக்கு எப்படி எனத் தெரிந்து அறிந்து செயல்பட ஜாதக ரீதியாகவும், கைரேகை ரீதியாகவும், காண்ட அடிப்படையிலும் அன்றன்றாட நிகழ்வுக்குத் தக்கவாறு அனுசரித்துச் செயற்பட மலையாள மாந்திரிக சித்தர் டாக்டர் P.K. **சாமி** (J.D.G.A.N) J.P அவர்களைச் சந்தியுங்கள். வெளிநாட்டவர்களுக்கு விஷேச சலுகை உண்டு. மாந்திரிக சக்திக்குப் பெருமிதம் எமது 39 வருட சேவையே! இவ்வரிசையில் நாம் ஒருவரே!

இனி என்னைப் பற்றி

அன்றன்றாடு அருள் சக்தி வழங்கிவரும் அம்மன் துர்க்கையின் அருள் அவ்வப்போது எனக்குக் கிடைக்கின்றது. இவைகளை ஒட்டியே இந்தச் சோதிட மலையாள மாந்திரிக நிறுவனம் ஒரு மாபெரும் P.K.SAMY ASSOCIATE (PVT) LTD வரையறுக்கப்பட்ட நிறுவனமாகச் செயல்படுகின்றது. இதையொட்டியே வாங்கும் பணத்திற்கு ரசீது வழங்குகின்றோம்.

★ அதி விசேஷமாக வெளிநாட்டவர்களுக்கு ஏனோதானோ என்றில்லாது அவர்களின் எண்ணங்களை எண்ணியவாறு செயல்திறனைக் காட்டியதனாலேயே அவர்களின் ஆயிரக்கணக்கான ஆசீர்வாதக் கடிதங்கள் என்னிடம் இருக்கின்றன.

★ உண்மைச் சேவை என்பதால் எனக்குப் போரசிரியர் பட்டம் தந்தார்கள். கலாநிதி பட்டம் கிடைத்தது. அகில இலங்கை சமாதான நீதவானாக நியமித்தார்கள். கருணாகர பூசணம் பட்டம் கிடைத்தது. பங்களாதேசத்தில் சோதிட ஆராய்ச்சித்துறையில் என்னை அங்கத்தவராகச் சேர்த்துக்கொண்டார்கள். இன்னும் எத்தனை எத்தனையோ பட்டங்கள். இதற்குக் காரணம் எனது உண்மையான, மனச்சாட்சிக்கு விரோதமற்ற சேவையே! இனி உங்கள் குறை என்ன?



**இத்துறையில் விசா, மாஸ்டர் கார்ட் வசதி மற்றும் இன்ரர்நெட், வெப் சைட்,ஈ மெயில், ஃபக்ஸ் வசதிகள் எம்மிடம் மாத்திரமே உண்டு.**

இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை. நுவரெலியாவில் மாத்திரமே கிளைக் காரியாலயம் உண்டு.

**கொழும்பில்**

162, கொட்டாஞ்சேனை வீதி,
மேபீல்ட் வீதி
(லிட்டில் ஃப்ளவர் பாலர் பாடசாலைக்கு முன்),
கொழும்பு-13.
தொலைபேசி: 466271, 466571, 342463, 466620, 431137, 466820
தொலைநகல்: 00941-344831

**நுவரெலியாவில்**

33, டெய்லி ஃபெயார் கொம்பிளெக்ஸ்,
கண்டி வீதி, நுவரெலியா.
தொலைபேசி: 052-22508, 35097, 23093, 23336, 23570
தொலைநகல்: 00945-235097
ஈ.மெயில்: drpksamy@sltnet.lk
வெப் சைட்: www.imexpolanka.com/drsami

அலசுவது-இராஜதந்திரி

# நரகத்தின் வாசல் திறக்கப்படுகிறதா?



ஈராக்கிற்கெதிரான ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்படுமானால் அது நரகத்தின் வாயிலைத் திறக்கும் செயலாகும் என வளைகுடா நாடுகள் எச்சரித்துள்ளன. ஆனால் அமெரிக்கா- பிரிட்டன் அந்த எச்சரிக்கையைப் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை.

சர்வதேச அளவில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டல் என்ற கோசத்தின் கீழ் இன்று ஈராக்கிற்கெதிரான பாரிய அளவிலான யுத்தமுன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஈராக்கிடம் உயிரியல் -இரசாயன ஆயுதங்கள் இருக்கின்றன. அந்த நாடு உலக பயங்கரவாதத்தைப் போசித்து வளர்க்கும் நாடு . அமெரிக்காவாலும், மேற்கைரோப்பிய நாடுகளாலும் இந்தக் குற்றம் சுமத்தப்படுகிறது.

சதாம் ஹுசைன் ஒன்றும் அமெரிக்காவிற்குப் புதியவரல்ல.

மக்கள் கிளர்ச்சி மூலம் 1958 அல் சர்வாதிகார ஆட்சி தூக்கியெறியப்பட்டது. புதிய ஆட்சி பதவியேற்று ஒரு வருடத்திற்குள் அந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான சதிப்புரட்சி நடைபெற்றுத் தோல்வியுற்றது.

1963 இல் ஹரீம் -ஹாசிம் தலைமையிலான ஆட்சி கவிழ்க்கப்பட்டு பாத் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. சதாம் ஆரம்பத்தில் பாத் கட்சியின் ஒரு சாதாரண அங்கத்தவர்தான். ஆனால் அந்தப் பாத் கட்சி கம்யூனிஸ்டுகள் மீது தீராத வெறுப்புக்கொண்டிருந்தது. 15000 கம்யூனிஸ்ட் கட்சியுறுப்பினர்கள் சுற்றிவளைக்கப்பட்டார்கள். அதில் 5000பேர் கொல்லப்பட்டுவிட்டனர். அமெரிக்காவே பாத் கட்சி தொடர்ந்து வீற்றிருக்க அனைத்து உதவியும் செய்தது.

சதாம் ஹுசைன் பதவிக்கு வருவதற்கு அது வழிவகுத்துக் கொடுத்தது.

அமெரிக்காவுக்குத் தனது எண்ணெய் நலன்களைப் பாதுகாக்க, வளைகுடாப் பகுதியில் ஆட்கள் தேவைப்பட்டார்கள்.

1979 இஸ்லாமியப் புரட்சி மூலம் அமெரிக்காவின் உற்ற நண்பனான ஈரானிய ஷாவின் ஆட்சி தூக்கியெறியப்பட்டதன் பின் அமெரிக்காவிற்கு இன்னுமொரு முகவராகத் தமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கக் கூடியவர் தேவைப்பட்டார்.

அவரே சதாம்.

1973 இல் எகிப்திய இராணுவம் இஸ்ரேலினால் சீர்குலைக்கப்பட்ட பின்னர் ஈரான் ,ஈராக் படைகளே பலம் பொருந்தியனவாக இருந்தன.

ஈரானியப் படைகள் 1979 மக்கள் கிளர்ச்சியால் ஆட்டம் காணச் செய்யப்பட்டன.

அதன் பின்னர்தான் ஈராக் மீது கவனம் திரும்பியது.

ஆனால் ஈராக் குவைத்தினுள் நுழைந்தது அமெரிக்காவினதும் மேற்குலகினதும் பொருளாதார நலன்களுடன் மோதுவதாக அமைந்தது.

அதன் பின்னர் நிரந்தரமான பிரசன்னத்தின் அவசியம் அமெரிக்காவால் உணரப்பட்டது.

பாலஸ்தீனர்களின் போராட்டம் அரபுத் தேசியவாதத்தின் சின்னமாகத் திகழ்வதால் அதனைப் பணிய வைப்பதற்கு அதன் மீது ஈவிரக்கமற்ற தாக்குதல் தொடுப்பதற்கு எரியல் சரோன் தகுந்த ஆளாகக் கருதப்படுகிறார். பாலஸ்தீனர்கள் சமாதானத்தின் பேரில் நியாயமான விட்டுக் கொடுப்பிற்குத் தயாராக இருந்த போதும் இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்பும், பாலஸ்தீனர்களின் இருத்தலை நிராகரிக்கும் செயற்பாடுகளும் முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்துள்ளன. இப்போதுள்ள அமெரிக்க ஜனாதிபதியின் தந்தையான புஷ்ஷின் காலத்தில் 1990களின் முற்பகுதியில் ஈராக்கிற்கெதிரான முதற் போர் நடைபெற்றது. இப்போது 3வது போருக்கான தயாரிப்புக்கள் நடைபெறுகின்றன.

ஒரு காலத்தில் அமெரிக்காவின் நண்பனாக இருந்த சதாம் குவைத்தை ஆக்கிரமித்ததன் மூலம் அமெரிக்கா சொல்வதையல்ல, தான் தீர்மானிப்பதையும் மேற்கொள்வார். அது அமெரிக்க நலன்களுக்குப் பாதகமாகவும் அமையக்கூடும் என்பதும்தான் அப்போது அமெரிக்காவிற்கு வெறுப்பை ஏற்படுத்தியது. இப்போது வேறு காரணங்களும் சேர்ந்துகொண்டன. இப்போது அவரிடம் இருப்பதாகச்சொல்லப்படும் உயிரியல் ஆயுதங்களும் ,இஸ்லாமிய அடிப்படைவாதப் பயங்கரவாதக் குழுக்களுக்கு ஆதரவளிக்கிறார் என்ற பாரதூரமான குற்றச்சாட்டும் அவர் மீது நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துகின்றன.



செச்சினியாவில் கைது செய்யப்பட்ட ஸிலாவிய இன முன்னாள் ஜனாதிபதி மிலோசெவிக்கை விட வட அமெரிக்கா, மேற்குலகினால் வெறுக்கப்படும் மனிதராக சதாம் காணப்படுகிறார்.

கடந்த கால் நூற்றாண்டு காலமாக யுத்தத்தையும், வறுமை-போசாக்கின்மையையும் ஒரு தசாப்தத்திற்கு மேலாக பொருளாதாரத் தடையையும் அனுபவித்துவரும் நாடு ஈராக்.

அத்தோடு சதாம் ஈராக்கிய சமூகத்தை ஏறத்தாள முழுவதுமே பால்வேறுபாடின்றி இராணுவமயமாக்கியிருக்கிறார்.

1990 இல் குவைத்தை ஆக்கிரமித்தபோது பாலஸ்தீன அரபுப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேறினால்தான் ஈராக் படைகள் குவைத்தை விட்டு வெளியேறும் என்று பிரகடனம் செய்தார்.

ஆப்கானிஸ்தானுக்குள் அமெரிக்கா நுழைந்ததற்கு நேரடியான நியாயங்கள் இருந்தன. சொல்லப்பட்டன.

ஆனால் ஈராக்கிற்குள் நுழைவதற்கு அப்படியான நியாயங்கள் எதுவும் இல்லை, எண்ணெய் சார்பொருளாதார நலன்களைத் தவிர.

ஐ.நாவின் பிரதிநிதியொருவர் யுத்தத்தைத் தவிர்ப்பதற்கு ஈராக் தன்னிடமுள்ள உயிரியல் அழிவு ஆயுதங்களை வெளிப்படுத்துவது நல்லது எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் இராஜதந்திரி ஹென்றி கிஸிஞ்சர் ஈராக் மீது போர் தொடுப்பதை அவ்வளவாக வரவேற்கவில்லை. செனட் காங்கிரஸின் ஆதரவும் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இதற்கிடையே பிரான்ஸ்-ரஷ்யா-சீனா போன்ற நாடுகளும் ஈராக் மீதான யுத்தத்தை வரவேற்கவில்லை.

ஈரான் தானும் தாக்கப்படலாம் என அஞ்சுகிறது. ஏற்கனவே இஸ்லாமிய உலகு மக்களின் இடம்பெயர்வு, வறுமை, போசாக்கின்மையால் திணறிக்கொண்டிருக்கிறது.

எதிர்காலத்தில் ஏற்படப்போகும் யுத்தம் நிலைமையை மேலும் பாரதூரமானதாக்கலாம்.

இதன்விளைவு யுத்தத்திற்கெதிரான, சகல விதமான பயங்கரவாதங்களுக்கும் எதிரான உலக அபிப்பிராயம் ஒன்று உருவாகலாம் .

உண்மையில் நரகத்தின் வாயிலைத் திறப்பதற்கான முயற்சிகளே நடைபெறுகின்றன.



## அதிரடி அய்யாத்துரை

தங்கட மறைந்த தலைவர்களுக்கு அஞ்சலிகூடச் செலுத்த ஏலாமல் போனதுதான் கூட்டுக் கட்சியினர் கண்ட மிச்சம். சிறி சபாரத்தினத்துக்கோ, பத்மநாபாக்கோ, மட்டுமில்லை அமிர்தலிங்கத்துக்குக் கூட நினைவுதினம் கொண்டாடச் சுதந்திரமில்லாதவை தமிழ் மக்களின்ர சுதந்திரத்தப் பெற்றுக் குடுக்கிறதுபற்றிக் கதையளக்கிறதுதான் வேடிக்கை. ஏன் சொல்லுறனெண்டால், லண்டனிலயெண்டாலும் அமிருக்கு பிறந்தநாளையாவது கொண்டாடலாமெண்டு வெளிக்கிட்ட கூட்டணிக்காரர், இப்ப பெரும் பிசகுக்க மாட்டியிருக்கினமாம். ரெண்டெழுத்தாரைக் காரசாரமா விமர்சிக்கிற 'ஹிந்து' ராமை பிரதம பேச்சாளராக் கூப்பிட்டுக் கொண்டாடியிருக்க, அவர் சம்பந்தப்பட்ட 'ஹிந்து' பத்திரிகை, இலங்கை அரசாங்கம் புலித்தடையை நீக்கினது பெருந் தவ றெண்டும், பிரபாகரன் ஈவிரக்கமில்லாத பயங்கரவாதியெண்டும் ஆசிரியர் தலையங்கம் தீட்டிப்போட்டு நிக்குது. இதவிடப் பெருந் தவறென்னவெண்டால் அங்க வெளியிட்ட மலரில வேற அமிரண்ணைக்குத் 'தமிழீழத் தலைவர்' எண்டு பட்டம் வேற குடுத்திருக்கினமாம். எப்பிடியிருக்கும் ரெண்டெழுத்தாருக்கு? ம்... புலிச்சாயம் பூசினவை ஊளையிட ஆசைப்படலாமோ?

அமிரின்ர பிறந்தநாள் நடந்த நேரத்தில லண்டனில இருந்தும் கலந்து கொள்ளப் போகேல்லையாம் ஜோசெப் எம்.பி. கலக்காதது மட்டுமில்லை, அது பிடிக்காததுபோலவும் தலைமைக்கு மேல முறைப்பாடுகளை அடுக்கியடுக்கி வன்னிக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறாராம். சம்பந்தர், சங்கரியார், மாவை யாரெல்லாம் தங்கட லண்டன் பயணங்கள ரெண்டெழுத்தாருக்கு வெறுமன ஒரு தகவலாச் சொல்லிப்போட்டு அனுமதி பெறாமலே மாறிட்டினமெண்டு ஒழுங்குப் பிரச்சினையும் கிளறுறாராம். இதுதான் தலைமைவிசுவாசம் பாருங்கோ!

கிழக்கு மோசடிகளில முழுகி எழும்பினவரெண்டு பெயரெடுத்த அந்த மௌனமான குருசாமிய திரும்பவும் அரசாங்க அதிபராக்கச் சொல்லி ரெண்டெழுத்தார் பணிப்பில ஜோசெப் எம்பி தலைமையில மட்டக்களப்பு கூட்டமைப்பு எம்பீக்கள் பிரதமரோட கதைச்சவையாம். பிரதமருக்கும் நல்ல அபிப்பிராயமில்லாட்டாலும் வற்புறுத்தலுக்கு இணங்கிட்டாராம். 11ம் திகதி புதன் கிழமை அமைச்சரவையில பேப்பர் போட்டு 15ம் திகதியோட திரும்பவும் தர்பாருக்கு வரப்போறாராமெண்டு நம்பகமான தகவல். போனமுறை ஈ.பி.டி.பியைப் பிடிச்சு எக்ஸ்டென்ஷன் வாங்கினவர் இந்த முறை மறுவழத்தால வந்திருக்கிறார். காலைப் பிடிச்சுக் காரியஞ் சாதிக்கிறது சிலபேருக்கு கைவந்த கலை. ம்... காலைப் பிடிக்கிறவை காலை வாராமலிருந்தால் சரி.

சங்கரியார் யாரையாவது சங்காரம் செய்ய நினைச்சால் செய்யாமல் விடமாட்டாரெண்டு சாதிச்சுக் காட்டிப்போட்டார். யாழ்ப்பாண அரச அதிபரை ஒருமாதிரி நெம்புகோல் போட்டுக் கிண்டியெறிஞ்சிட்டார் மனிசன். கொழும்பு அமைச்சுக்கு அவசரமா மாத்தியிருக்கு ஆளை. தங்கட செருக்கையும் செல்வாக்கையும் இப்பிடி அற்ப விசயங்களுக்கும் தனிப்பட்ட கோபதாபங்களுக்கும் விரயமாக்கினமே தவிர உருப்படியா என்னத்தச் செய்யினம் எம்பியா வந்தெண்டு கேக்கிறியளோ? உத எம்பியா ஆக்கக்கயெல்லே யோசிச்சிருக்க வேணும்?

எவரெவரோ என்னென்னத்திலயோ கவனத்தில இருக்க, எங்கட புரட்சிகரக் கட்சிப் பிரேமைத் தலைவர் மட்டும் சட்டம் படிக்கிறதுக்கு முனைப்பாயிருக்கிறாராம். லோக் கொலிஜ் புகுமுகச் சோதினைக்குப் பிரசன்னமாகியிருந்தாராம். கூட்டுக் கட்சிகளில சட்டம் படிச்சவைதான் ஆதிக்கம் செலுத்திறதக் கண்டபிறகு, தானும் இந்தா சட்டம் படிக்கிறன் பாரெண்டு புறப்பட்டிட்டாராக்கும். புரட்சிகர முடிவுதான். படிப்ப விட்டுட்டுப் போராட்டத்துக்கு வந்த தோழர்கள்தான் பாவம்!

நீங்கள் பேசிப் பாருங்கோ நான் காசைப் பாக்கிறனெண்டு, சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கிற கையோட அமெரிக்கா பறக்கிறார் பிரதமர். வெறுமனே பேச்சு நடத்திறமெண்டு ஒரு துடக்க விழாவச் சோக்காட்டிப் போட்டு உலக நாடுகளிட்ட உண்டியல் குலுக்க நினைக்கிறார். பூசையை நடத்திப் போட்டே படத்தை விக்கிறதுக்கு சமாதானமென்ன ரஜனிப் படமே...?

# பின்லேடனின் அடுத்த தாக்குதல் எங்கே எப்போது?

செப்டம்பர் 11 ம் திகதி உலக வரலாற்றில் மறக்க முடியாத தினம். அமெரிக்கர்களுக்கு மட்டுமல்ல சர்வதேச சமூகம் முழுவதும் ஏதோ ஒரு வகையில் செப்டம்பர் பதினொன்றை நினைவு கூருகின்றன.



உயிரழிவு, பொருளாதார சேதம், இவற்றுக்கப்பால்... சுதந்திர வர்த்தக மையக் கட்டடங்கள் மீதான தாக்குதல் சர்வதேச சமூகத்தை ஓரணியில் திரட்டியிருக்கிறது என்ற உலகளாவிய மாற்றம் கடந்த ஒரு வருட காலத்தில் நடந்து முடிந்திருக்கிறது.

அமெரிக்க நகரங்கள் மீதான தாக்குதல்கள் வெறித்தனமான பயங்கரவாதத்தின் வெளிப்பாடு என ஒரு சாரார் வாதிடும் அதேவேளை, மூன்றாம் உலக நாடுகளில் அமெரிக்கா அரங்கேற்றி வரும் கொடுமைகளுக்கு வழங்கப்பட்ட நியாய பூர்வமான பதிலடி என இந்தத் தாக்குதல்களை அங்கீகரிப்பவர்களும் அதிக எண்ணிக்கையில் இருக்கவே செய்கிறார்கள்.

எவ்வாறெனினும், தன் மீதான தாக்குதல்களின் பின்னர் ஆப்கானிஸ்தான் மீது அகோரமாகப் போர் தொடுத்தது அமெரிக்கா. பின்லேடனைப் பிடிக்க முடியாவிட்டாலும், ஆப்கானிஸ்தானில் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டியது.

நியூயோர்க் வர்த்தக நிலையங்கள் உலக இயக்கத்தின் மையங்கள் என்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி, செப்டம்பர் 11 ன் பின்னர் நடாத்திய அனைத்து அழிவுகளையும் பயங்கரவாதத்தின் பெயரில் நியாயப்படுத்திக் கொண்டது அமெரிக்கா. ,

எது எப்படியாக இருந்தாலும் இத்தகைய பாரிய தாக்குதல் ஒன்று நடத்தப்படுவதற்கு முன்னரே அமெரிக்க அதிகாரிகளுக்கு இது குறித்து அறிவுறுத்தப்பட்டதாகத் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்கா மீது அல் கைதா தீவிரவாதிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டு வருவதாகத் தலிபான் அரசின் வெளிவிவகார அமைச்சராகவிருந்த வகீல் அஹமத் முதாவாகீல் வாஷிங்டன் நிர்வாகத்தையும், ஐ.நா. அதிகாரிகளையும் தனது தூதுவர் ஒருவர் மூலமாக ஒரு வாரம் முன்பாக எச்சரித்திருந்தார் எனக் கூறப்படுகின்றது.

வகீல் அஹமத் முதாவாகீல் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவர் வழங்கிய தகவலை அமெரிக்க உளவுப் படையினர் தீவிரமாக எடுத்துக் கொள்ளாததால் வந்த வினைதான் உலக வர்த்தக மையம் தாக்கப்பட்டதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகின்றது.

அல் கைதா உட்பட வெளிநாட்டு பயங்கரவாதிகளின் நடவடிக்கை தலிபான் அமைச்சர் வகீல் அஹமத் முதாவாகீலுக்கு எரிச்சலூட்டியதாக 'தி இன்டிபென்டன்ட்' நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.


அமெரிக்காவிலுள்ள விமானிப் பயிற்சி நிலையங்களில் இஸ்லாமியப் பழமைவாதிகள் பெருமளவில் சேர்ந்துள்ளதாக வந்த இரகசியத் தகவல்களை அமெரிக்காவின் எப்.பி.ஐ. மற்றும் சி.ஐ.ஏ. நிறுவனங்கள் அவ்வளவு தீவிரமாக எடுத்துக்கொள்ளவில்லை என்றும் அச் செய்தி கூறுகின்றது.

உஸ்பெக்கிஸ்தானிலிருந்த இஸ்லாமிய இயக்கங்கள் மூலமே அல் கைதா தாக்குதல் தொடர்பான தகவல் வகீல் அஹமத் முதாவாகீலுக்குக் கிடைத்தது. தலிபான்கள் மூலம் அல்ல எனவும் அந்த நாளேடு தெரிவிக்கிறது.

மீண்டும், அவ்வாறானதொரு தவறை விடக் கூடாது என்பதற்காக இந்த செப்டம்பர் 11 ல் அமெரிக்காவில் பாதுகாப்புக்கள் கடுமையாகப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு வருடத்தின் பின்னரும் பல அமெரிக்கர்கள் பயத்துடனேயே செப்டம்பர் 11 ஐ எதிர்கொள்வதாக ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

## ஒருபடி விருந்து




# ஷெரீன் வில்லியம்ஸைப் பின்தொடரும் தாடிக்காரர்

உலகின் முதல்தர டென்னிஸ் வீராங்கனையான ஷெரீனா வில்லியம்ஸை அளவுக்கு மீறி சைட் அடித்த நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தியுள்ளனர்.

ஜேர்மனியில் பிறந்து அமெரிக்காவில் வசிக்கும் அல்பட் ஸ்ட்ரோமியர் என்ற 34 வயது நபருக்கு ஷெரினா மீது வகை தொகையற்ற காதல். பல வருடங்களாக ஷெரீனாவின் பின்னால் அலைகிறார்.

ஷெரீனா வில்லியம்ஸ் விளையாடும் போட்டிகளைக் காண இந்த நபர் பல்லாயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்து வாஷிங்டன் முதல் ஐப்பான் வரை சென்றிருக்கிறார்.

சமீபத்தில் அரிசோனாவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஷெரீன் தங்கியிருந்த போது அங்கு வந்த அல்பட் ஸ்ரோமியர், தனக்கு ஷெரீனைப் பார்க்க



வேண்டும் என்று கூறியிருக்கிறார். அவரை அனுமதியின்றிக் காண முடியாது என ஹோட்டல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உடனே அல்பட் ஹோட்டல் ரிஷப்சனில் வைத்தே தனது ஆடைகளைக் களைய ஆரம்பித்தார். வேறு வழியின்றிப் பொலிஸாரை வரவழைத்து அல்பட்டைப் பிடித்துக் கொடுத்தனர். இந்தச் சம்பவத்தின் பின்னரும் கூட அல்பட் ஷெரீனாவைப் பின் தொடர்வதை நிறுத்திக் கொள்ளவில்லை.

ஷெரீனா வில்லியம்ஸின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க வேண்டாம் என இவர் டெனிஸ் நிருவாகிகளால் பல முறை எச்சரிக்கப்பட்ட போதும் அவர் கேட்பதாக இல்லை.

# பார்த்த ஞாபகம் இல்லையோ...? 16




***பி.பானுமதி-*** தென்னாட்டுத் திரையுலகில் இவருக்குத் தனியானதோர் இடமுண்டு. இவர் ஒரு குணச்சித்திர நடிகை மட்டுமல்ல, படத்துறையின் பல்வேறு துறைகளில் சுடர்விட்டுப் பிரகாசித்திருக்கிறார். இவர் ஆரம்ப காலத்தில் தெலுங்குப் படங்களிலேயே நடித்து வந்தார். ஸ்வர்க்க சீமா, வரவிக்ரயம், மாலதிமாதவம், தர்மபத்தினி, பக்திமாலா, கருட கர்வபங்கம், கிருஷ்ணபிரேமா என்பன அவர் நடித்த தெலுங்குப் படங்களுள் சில. 'கிருஷ்ண பிரேமா' படத்தில் நடித்துக் கொண்டிருந்த போது, அதன் உதவி டைரக்டர் ராமகிருஷ்ணா மீது பானுமதிக்கு பிரேமை. தனது குடும்பத்தின் பலத்த எதிர்ப்பையும் மீறி, 1943 - இல் ராமகிருஷ்ணாவை மணந்து கொண்டார். அப்பொழுது 'தாசில்தார்' என்ற தெலுங்குப் படம் வெற்றி பெறவே, தெலுங்குத் திரைவானில் பானுமதி நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றார். பின்னர் தமிழ் சினிமா பக்கம் தலைகாட்டத் தொடங்கினார். 'பரணி பிக்சர்ஸ்' படக் கம்பெனியையும் ஆரம்பித்து, படத் தயாரிப்பிலும் ஈடுபட்டார். பரணி என்பது அவரின் மகனின் பெயர். 1949 - இல் வெளிவந்த 'நல்ல தம்பி' மிகவும் பிரபலமான ஒரு படம். இதற்கு கதை-வசனம் அறிஞர் அண்ணா; அதன் கதாநாயகி- பி.பானுமதி, "நடிப்புக்கு இலக்கணம் வகுத்த நடிகை" என்று பின்னாளில் அறிஞர் அண்ணாவினால் பாராட்டப் பட்டவர். இப் படத்தில்தான் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் "மனுஷனை மனுஷன் ஏச்சுப் புழைச்சது அந்தக் காலம்- மடமை நீங்கி நமதுடைமை கோருவது இந்தக்காலம்" என்பது போன்ற பல சீர்திருத்த பாடல்களைப் பாடி நடித்தார். அண்ணா தமக்குப் பிடித்தமான உலகப் பேரழகி "கிளியோ பாட்ரா" நாட்டிய நாடகத்தை இப் படத்தில் இடம்பெறச் செய்து, பானுமதியை "கிளியோ பாட்ரா" வாக நடிக்க வைத்தார். என்.எஸ்.கே.யின் 'கிந்தனார்' காலட்சேபமும் இப் படத்திலேயே இடம் பெற்றது.

'கோசிகன் பிரதர்ஸ்' என்ற கதையை ஜெமினி நிறுவனத்தினர் 'அபூர்வ சகோதரர்கள்' என்ற பெயரில் தயாரித்த போது எம்.கே.ராதாவுக்கு ஜோடியாக பானுமதியே நடித்தார்.

இதே கதையை 'நிஷான்' என்று இந்தியில் படமாக்கிய போது ரஞ்சனுடன் இவரே நடித்தார். இதே கதையை பானுமதி சிறிது மாற்றி எழுதி, சண்டிராணி என்ற படத்தைத் தயாரித்து, தானே சண்டி, சம்பா என்ற இரட்டை பெண் வேடங்களிலும் நடித்து, பாடி, டைரக்ட் செய்து வெளியிட்டார். இவருக்கு ஜோடியாக நடித்தவர் முன்னாள் ஆந்திர முதலமைச்சர் காலஞ்சென்ற என்.டி.ராமராவ். இந்நாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் பெரியம்மா ஸ்ரீ வித்தியாவதியும் இதில் நடித்தார். பானுமதியின் நடிப்பாற்றலை ஒவ்வொன்றாகச் சொல்வதைவிட அவர் நடித்த படங்கள் சிலவற்றைக் கூறினால் அதுவே அவரது திறமையை எடுத்துக்காட்டப் போதுமானதாகும்.

பி.யூ. சின்னப்பாவுடன் 'ரத்னகுமார்', எம்.கே.தியாகராஜ பாகவதருடன் 'ராஜமுக்தி' ஏ.நாகேஸ்வரராவுடன் 'லைா மஜ்னு', 'காதல்', சிவாஜி கணேசனுடன் அமரர் கல்கியின் 'கள்வனின் காதலி' மற்றும் 'அம்பிகாபதி' எம்.ஜி.ஆருடன் 'காஞ்சித் தலைவன்', 7 மொழிகளில் தயாரான 'மலைக்கள்ளன்', 'தாய்க்குப் பின் தாரம்', 'மதுரை வீரன்', கலர் படமான 'அலிபாபா'வும் 40 திருடர்களும், (மேல் உள்ள படத்தினைப் பாருங்கள்) எனப் பல்வேறு படங்களிலும் நடித்துப் பகழ்பெற்ற பி.பானுமதி சமீபத்தில் இந்திய அரசினால் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டார்.



***ஜி.முத்துக் கிருஷ்ணன்***

இவர் ஒரு தி.மு.க. உறுப்பினர்! அக் கட்சியின் மேடைப் பேச்சாளர். 'வளையாபதி' என்ற திரைப்படம் அவரைக் கதாநாயகனாக்கியது. இவருக்கு ஜோடியாக நடித்தவர் எஸ். ஜானகி என அழைக் கப்பட்ட சௌகார் ஜானகி. இப் படத்தில் நகைச்சுவை நடிகர்களான ஏ.கருணாநிதி, புளிமூட்டை இராமசாமி ஆகியோரும் நடித்துள்ளனர். இப் படத்திற்கு வசனம் எழுதியதோடு, சில பாடல்களையும் இயற்றிக் கொடுத்தவர் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன். அவருடன் சேர்ந்து கண்ணதாசனும், கே. டி. சந்தானமும் பணிபுரிந்தனர். 'வளையாபதி' படத்தைப் பற்றிப் பேசும் யாரும் அதில் டி. எம். சௌந்தரராஜனும், ஜமுனாராணியும் பாடியுள்ள "குலுங்கிடும் பூவிலெல்லாம் தேனருவி கண்டதனால், வண்டு காதலினால், நாதா தாவிடுதே... இன்பம் மேவிடுதே..." என்ற பாடலை இசைக்காமல் விடுவதில்லை. அத்துடன் கவி. கா. மு. ஷெரிப் எழுதிய ஒரு 'கோரஸ்' பாடலும் இசையால், கருத்தால் பாராட்டப் பெற்றது. பாடல் இதுதான், "ஜாதியிலே நாங்க தாழ்ந்தவங்க, ரொம்பத் தாழ்ந்தவங்க, ஆனா, நாங்கள்தான் இல்லேன்னா எந்த வேலைதான் ஆகுமுங்க..." முத்துக்கிருஷ்ணன் வேறு சில படங்களில் துணைப் பாத்திரங்களில் நடித்துள்ளார். சிவாஜியின் 'தூக்குத் தூக்கி', கே. ஏ. நடராஜன், மாதுரிதேவி ஜோடியாக நடித்து, ஜி. இராமநாதன் இசையமைத்து, கண்ணதாசன் கதை வசனம் எழுதிய 'ஜமீன்தார்', 'புதுயுகம்', எஸ். பாலச்சந்தரின் 'கைதி' ஆகியவை, அவற்றுள் குறிப்பிடத் தக்கவை.



## தண்ணீரில் சைக்கிள்

தண்ணீருக்கு மேலாகச் சைக்கிள் ஓட முடியுமா என்று கேட்டால் முடியாது என்று ஒற்றைச் சொல்லில் பதில் சொல்லத்தான் நமக்கெல்லாம் தெரியும். ஆனால் முடியும் என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார் இந்தக் கொரிய நாட்டுப் பிரஜை. பலகையில் சிறிய படகு ஒன்றைத் தயாரித்து அதில் சைக்கிளைப் பொருத்தி படகின் இழுப்பு விசைக்கு ஏற்ப சைக்கிளின் மிதிப்பை இணைத்திருக்கிறார். இவர் சைக்கிளை மிதிக்கும் வேகத்தில் படகு செல்லும். சைக்கிளில் அமர்ந்து கொண்டே ஆற்றில் பயணம்!

## ஏமாற்றம்

நீடித்து நிலைக்கும் அபிவிருத்திக்கான புவி உச்சிமாநாடு தென்னாபிரிக்காவின் ஜொஹன்ஸ்பேர்க் நகரில் கடந்த வாரம் நடந்து முடிந்தது. ஒரு சில நாடுகள் தவிர்ந்த உலகின் பெரும்பாலான நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு சூழல் பாதுகாப்பு மற்றும் உலகளாவிய வறுமை ஒழிப்பு தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்தனர். இந்தப் புவி உச்சிமாநாடு வறிய மக்களின் மேம்பாட்டுக்காகவன்றி பணக்கார சமூகத்தை மேலும் வளமுள்ளதாக மாற்றும் கபட நோக்கம் கொண்ட ஒரு முயற்சி எனப் பரவலான கண்டனங்களும் எழுந்துள்ளன. ஆபிரிக்காவில் பட்டினியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பிரதிநிதிகள், உலகமயமாக்கலுக்கு எதிரான அமைப்புகள், நிலமற்ற மக்களின் கூட்டமைப்பினர் என, முதலாளித்துவத்துக்கு எதிரான, அல்லது முதலாளித்துவத்தால் நேரடிப் பாதிப்புக்களை எதிர்கொண்ட மக்கள் மாநாட்டு மண்டபத்துக்கு வெளியே ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினார்கள். தென்னாபிரிக்காவின் பின் தங்கிய பகுதிகளில் இருந்து ஜொஹன்ஸ்பேர்க் நகருக்கு வந்த நிலமற்ற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதையே காணகிறீர்கள்.

## தப்பு

திருடுவது மனிதனுக்கு மட்டும்தான் கை வந்த கலை என்றில்லை. இந்தக் குரங்கும் திருடித்தான் தன் சீவியத்தை நடத்தி வந்தது. ஆனால், பல நாள் திருடி ஒரு நாள் அகப்பட்டது. பெய்ஜிங்கின் தென் கிழக்குப் பகுதியான டியான் ஜின் பொலிஸார், கடைத் தொகுதி ஒன்றில் உணவுப் பொருட்களைத் திருடிச் சாப்பிட்டு வந்த இந்தக் குரங்கைப் பிடித்துக் கையில் விலங்கு பூட்டித் தடுத்து வைத்திருக்கிறார்கள். வழக்கு விசாரணையெல்லாம் கிடையாது. நேராக மிருகக் காட்சிச்சாலைக் கூண்டுக்கு அனுப்பத் திட்டமிட்டிருக்கிறார்கள் பொலிஸார்.





## எச்சரிக்கை


உலகில் அதிக அளவிலான தற்கொலைத் தாக்குதல்கள் நடைபெறும் நாடாக இஸ்ரேல் மாறியுள்ளது. அதி நவீன பாதுகாப்பு ஏற்பாடுகளையும், மொசாட் போன்ற உலகின் முதல் தர உளவு நிறுவனங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தாலும் கூட, இஸ்ரேலியப் படைகளால் தமது நாட்டுக்குள் இடம்பெறும் பாலஸ்தீன தற்கொலைத் தாக்குதல்களை முழுமையாக நிறுத்த முடியவில்லை.அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து சமீபத்தில் முன்வைத்த சமாதானத் திட்டங்களைப் புறக்கணித்துள்ள பாலஸ்தீனப் போராட்டக் குழுக்கள் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி வருகின்றன. பதிலுக்கு பாலஸ்தீனக் குடியிருப்புகள் மீதும் பொருளாதார நிலைகள் மீதும் தாக்குதல் நடத்துகிறது இஸ்ரேல்.


இஸ்ரேலுக்குள் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில் இப்போது தீவிர பாதுகாப்பு நடைமுறைகள் அமுல் செய்யப்படுகின்றன. கெமராக்கள் பொருத்தப்பட்டு சந்தேகத்துக்குரியவர்கள் மிகக் கவனமாக அவதானிக்கப்படுகிறார்கள்.

தற்கொலைதாரிகள் இனங்காணப்பட்டால் அவர்களது உடலில் உள்ள குண்டுகளைச் செயலிழக்கச் செய்ய றோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இஸ்ரேல்- பாலஸ்தீன எல்லையில் உள்ள ஹய்ஃபா என்ற இடத்தில் இஸ்ரேலியப் படையினர் கண்மூடித்தனமாகச் சுட்டதில் பலர் காயமடைந்தனர். அவ்வாறு காயமடைந்த ஒருவர் எழுந்து செல்ல முடியாமல் வெகு நேரமாக நிலத்தில் விழுந்து கிடந்தார். அவரது உடலில் குண்டு இருக்கலாம் எனச் சந்தேகம் கொண்ட இஸ்ரேலியப் படையினர் குண்டுகளைக் கண்டிடறியும் இயந்திரம் ஒன்றின் மூலம் காயமடைந்த பாலஸ்தீனியரைப் பரிசோதிப்பதையே இங்கு காண்கிறீர்கள். வெடிபொருட்கள் உடலில் இருப்பதைக் கண்டறிந்தால் இந்த இயந்திரம் ஒலி எழுப்பும். அப்போது அதனைத் தூரத்திலிருந்தே வெடிக்கச் செய்ய முடியும்.

# தகவல் பெட்டி




ஷபா ராய்
படம்: கதாநாயகி

# காதோடு சொல்லுகிறோம்

**ப**ன்னிரெண்டாம் வகுப்பை ஆங்கிலத்தில் பெயராகக் கொண்ட அந்தப் படத்தில் நாயகனும், நாயகியும் புதுமுகங்கள். நாயகனே இயக்குநர். ஒரு காட்சியில் உதட்டோடு உதடு வைத்து 'கிஸ்' அடிக்க வேண்டும். அதை நடிகை ஒப்புக் கொள்வாரா என்று யோசித்த ஹீரோ, ஷாட்டில் திடீரென்று கொடுத்து விடலாம் என முடிவு செய்து அதன்படி காட்சி ஓடிக் கொண்டிருக்கும் போது நடிகைக்கு எதிர்பாராமல் முத்தம் கொடுத்துத் திகைக்க வைத்துவிட்டார். புன்னகை மன்னனையே தூக்கிச் சாப்பிட்ட அளவுக்கு அந்த 'கிஸ்' வந்திருக்கிறதாம்.

**கௌ**ளஸ் நடிகை பட வாய்ப்புகள் சரிவர அமையாததால் தனக்கு கால்ஷீட் பார்க்கும் மனேஜரை மூன்றாவது தடவையாக மாற்றியுள்ளார். அட்ரசைக் கொடுத்துவிட்டு பெங்களூரில் செட்டில் ஆனால் எப்படி வாய்ப்புக் கிடைக்கும்? என அவருக்கு வேண்டியவர்கள் புலம்புகிறார்கள். அதுவும் சரி, இங்கு இருந்தால்தானே வாய்ப்புக் கிடைக்கும்? கதை சொல்லக் கர்நாடகாவுக்கா போக முடியும்?

**ம**லையாள இயக்குநர் இயக்க, 'வில்' நடிகர் நடிக்கும் 'கொடுங்கோலன்' படம் பூஜை போட்டு ஆறு நாள்கள் படப்பிடிப்பும் நடந்தது. அந்தப் படத்தின் கதையும், இன்னொரு படத்தின் கதையும் ஒரே மாதிரி இருப்பதாகப் படத்தை டிராப் செய்து விட்டுப் புதுக்கதை செய்தார்கள். 'வில்' நடிகர் இப்போது பிஸியாகிவிட்டதால் கதையைக் கேட்டுவிட்டு முதலில் சரி என்று சொன்னவர் இப்போது இந்தக் கதையும் சரியில்லை என்று சொல்லி இழுத்தடிக்கிறாராம். இதனால் இயக்குநருக்கு நடிகர் மீது கோபம் வந்து 'மூட்அவுட்' ஆகிவிட்டார்.

## "சதை கூடி விட்டது என்ன செய்யலாம்?"

### — மும்தாஜ் —

கொத்துக் கொத்தாய்ச் சதை, என்ன செய்வது இதை? இதுதான் மும்தாஜின் இப்போதைய கிலோ கணக்குக் கவலை. சென்னையில் உள்ள டாக்டர்களை நாடி ஆலோசனை கேட்டாராம். அவர்களும் கண்ட மருந்தைக் கையில் கொடுத்துச் சாப்பிடச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மருந்தைச் சாப்பிட்டுக்கொண்டே விருந்துக்கும் ஓ.கே. சொல்லிக் கொண்டிருந்ததால் அம்மணி குமமணி ஆகிவிட்டார். சீச்சீ இந்த மாத்திரை புளிக்கும் என்று நரியார் மாதிரிப் புலம்பிய மும்தாஜ் இப்போது சித்த மருத்துவத்தில் குணப்படுத்த முடியுமா என்று ஆலோசித்து வருகிறாராம். விளைவு? டி.வி.யைத் திறந்து மரத்தடிச் சித்தர் முதல் மாளிகைச் சித்தர் வரை கொடுக்கும் அட்வைஸ்களைக் காது கொடுத்துக் கேட்டு வருகிறார். இதிலும் முடியவில்லை என்றால் மரத்தடி ஜோசியர்களைப் பார்த்து மந்திரித்துத் தொலைப்பாரோ?

## மல்லுக் கட்டுகிறார்கள் முன்னணி நடிகைகள்!

'ஓ போட்ட' நடிகைகளின் வரவால் இளமை துள்ளல் நடிகை, மற்ற நடிகைகள் எல்லோரும் கவலைக்கு ஆளாகி உள்ளனர். அவர்களோடு மல்லுக்கட்டும் வேலையிலும் மும்முரமாக இறங்கியிருக்கிறார்கள், சில முன்னணி நடிகைகள்!


மாதவன்-மீராஜாஸ்மின்
படம்: ரன்

## 'சிம்ரன் கூப்பிட்டால் போகமாட்டியா?"

## நிருபர் மீது கமல் பாய்ச்சல்

சிம்ரன் என்றவுடன் கமல் பெயர் நினைவுக்கு வரவில்லை என்றால் எப்படி? அண்மையில் கமலைப் பேட்டியெடுப்பதற்காகப் போயிருந்த நிருபர் ஒருவரிடம் "ஆமாய்யா... நான் சிம்ரனை வச்சிருக்கேன். நீ சிம்ரன் கூப்பிட்டா போகமாட்டியா?" என்று எதிர்க் கேள்வி கேட்டாராம் நிருபரிடம். நிருபரும் விடாமல் "நானா நற்பணி மன்றம் வச்சி நடத்தறேன். அவங்க கூப்பிட்டு நான் போனா சம்பவம். நீங்க போனா செய்தி. தலைவன் என்ன செய்யறானோ, அதைத் தொண்டனும் ஃபாலோ பண்றான். அதனால ஒழுக்கமா நடந்துக்கங்க" என்று அட்வைஸ் பண்ணியிருக்கிறார். மேலும் எரிச்சலான கமல், "நான் ஊர் மேயறேன்னு எழுதறீங்களே... நீங்க இமய மலைக்கு போயிருக்காருன்னு நினைச்சிட்டு இருக்கிற ஒருத்தரு கூடதான் இப்படிக் கூத்தடிக்கிறாரு அவரைப் பற்றி எழுதுங்களேன்" என்று எடக்கு மடக்காக மடக்க, எழுந்து வந்து விட்டாராம் நிருபர். அப்போ கமல் சொல்றது சரிதானுங்களா இமய மலைக்குப் போறவரே?


விக்ரம்-சினேகா
படம்: கிங்

- 'சேது' படத்தைத் தயாரித்த நர்மதா புரொ... 'கும்மாளம்' படத்தை வெளியிட இருக்கிறது. ... சங்கவி, ஷமிதா ஷெட்டி நடிக்கும் 'சதா' என... கிறது. இதில் ராஜூசுந்தரம் ஆக்ஷன் ஹீரோ... றார்.
- சின்சியர் ஆர்ட்ஸ் என்னும் பட நிறுவனம் ... என்ற திகில் படத்தைத் தயாரித்து வருகிறது. ... அனைவரும் புதுமுகங்கள். இப் படத்தை மு... வருகிறார். படத்தை ஆகஸ்ட் 15-இல் வெளியி...
- டான்ஸ் மாஸ்டரின் சின்ன மகளான ஜென... என்று அழைக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.
- பூஜையோடு நின்று போன 'கோட்சே' படத்... இருக்கிறார்கள்.
- 'நியூ' படத்தில் டைரக்டர் சூர்யாவுக்கு ஜோ... கிறார்.
- விஜய் நடிப்பில் சுந்தர் தியேட்டர் தயாரிக்... என்று பெயரிட்டிருக்கிறார்கள்.
- மீன் குழம்பு ரஜனி விரும்பிச் சாப்பிடு...
- 'ஜெமினி' தெலுங்குப் படத்தின் ... ஸ்டுடியோவில் நடைபெறுகிறது.
- மாதவனை வைத்து மீண்டு... இருந்த திட்டத்தை ஒ... பாலசந்தர்.
- டி.வி.சீரிய... ரவளிக்கு... சம்பளம்... யிரம்...

## 'மாறன்' படத்தைத் தொடர்ந்து...

'மாறன்' படத்தைத் தொடர்ந்து இன்னொரு படத்திலும் ஒல்ட் கெட்டப்பில் நடிக்கிறார் சத்தியராஜ். அண்மைக் காலமாக சத்தியராஜ் நடித்த எந்தவொரு படமும் வெற்றிபெறாத நிலையிலும் மாறன் படத்தில் சத்தியராஜுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.



ஸ்ரீகாந்த்-சினேகா

## ஆசை காட்டி மோசம் செய்த கிரண்

'வில்லன்' படத்தின் இயக்குநருக்கும் கிரணுக்கும் இடையில் அதிகரித்த நெருக்கம் காணப்படுவதாக பொலிவுட் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது. படத்தில் வாய்ப்பளித்துவிட்டு இயக்குநர்தான் கிரணின் 'ஆறுதலை' வேண்டி நிற்பதாகக் கூறுகிறார்கள். சமீபத்தில் சென்னையில் உள்ள தன் பங்களாவுக்கு வருமாறு கிரணுக்கு அன்பான அழைப்பு விடுத்திருக்கிறார் இயக்குநர். வருவதாகச் சொன்ன கிரணுக்கு அன்று வேறொரு எதிர்பாராத 'அப்பொய்மண்ட்'.

இயக்குநருக்கு பூட் கொடுத்து விட்டு மும்பாய் பறந்தார் கிரண். வழிமேல் விழி வைத்துக் கிரணுக்காகக் காத்திருந்த இயக்குநர் குடிபோதையில் புலம்பிக் கொண்டிருந்தாராம்.

## "திருமணம் செய்யாமல் குழந்தை பெற்றுக்கொள்வது தப்பா?"

### இது ரம்யாவின் கேள்வி!

நடிக்க வந்து 25 ஆண்டுகள் ஆகியும் திரையுலகில் இன்னும் 'என்றும் 16'ஆகவே விளங்கி வருகிறார் நடிகை ரம்யா கிருஷ்ணன். இவருடன் நடித்த நடிகைகள் திருமணமாகி, திரையுலகுக்கு குட்பை சொல்லிக் கொண்டிருக்க, இவர் மட்டும் இப்போதும் இளமையாக நாயகியாக, வேடம் போட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

அவர் தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலிருந்து... முதல் கேள்வியே **"அவரது இளமையின் இரகசியம் என்ன"** என்பதுதான். "சஸ்பென்ஸ்.... வெளியே தெரிந்தால் என் இளமை போய்விடும். (சிரிக்கிறார்) வேளா வேளைக்குச் சாப்பிடுவேன். சாப்பிடும் நேரம் தவறமாட்டேன். என்னதான் பிஸியானாலும் உடற்பயிற்சி செய்கிறேன். 15 வயதில் இருந்தே இதைக் கடைப் பிடிக்கிறேன்."

சினி விசிட்

**கே: இளமை இருப்பதினால்தானே வாய்ப்புக் கிடைக்கப் பெறுகிறீர்கள்?**

ப: என் இளமைக்காகத்தான் வாய்ப்புக் கிடைக்கிறது என்று நான் நினைக்கவில்லை. படத்துக்கு என்னைப் போட்டால் அந்தப் பாத்திரத்துக்கு நான் பொருத்தமாக இருப்பேன் என்றுதான் எனக்கு வாய்ப்புத் தருகிறார்கள். இளமைப் பருவம் உள்ள நடிகைகள் வேறு யாரும் இங்கு இல்லையா என்ன?

**கே: ஒரு பேட்டியில் திருமணத்தை வெறுக்கிறேன் என்று சொல்லியுள்ளீர்களே...?**

ப: அப்படிச் சொன்னதாக ஞாபகமில்லை. திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்று சொல்வார்கள். திருமணம் என்பது அவரவரின் சொந்த விஷயம். அப்படி ஒன்று வேண்டும் என்பது கட்டாயம் என்றும் எண்ணவில்லை. தலையில் என்ன எழுதியிருக்கோ அதன்படி நடக்கும் என நினைப்பவள் நான். கடைசிக் காலம் வரை வாழ ஒரு திருமணம்தான் உகந்தது என்ற எண்ணமும் என்னிடம் இல்லை. அதில்லாமலும் வாழ்ந்து காட்டலாம் என்பது எனது கருத்து.

**கே: ஒரு காலத்தில் இந்தி நடிகை ரேகா (ஜெமினி கணேசனின் மகள்) திருமணம் செய்யாவிட்டாலும் குழந்தை பெறலாம் எனச் சொன்னதைப் போல் புரட்சிக் கருத்தா இது?**

ப: நான் என் மனதிலுள்ளதை வெளிப்படையாகச் சொன்னேன். இதை ரேகா சொன்னதுடன் ஒப்பிடவோ, புரட்சிக் கருத்து என்று பட்டம் சூட்டவோ வேண்டாம். ரேகா சொன்னதில்தான் என்ன தப்புக் கண்டுபிடித்தீர்கள்? திருமணம் செய்வது எதற்காக? திருமணம் என்ற சட்ட கூடு இல்லாமல் இங்கு யாரும் குழந்தைகள் பெறவில்லையா? ஜாதி சம்பிரதாயம் பார்த்துக் குடும்பம் நடத்துபவர்களை விட, இதை ஒன்றும் பார்க்காமல் சந்தோஷமாக வாழ்பவர்கள் ஏராளம். சொல்லப் போனால் மனப் பொருத்தம் ஒன்றே போதும்.

**கே: இப்போதும் கவர்ச்சி வேடங்களைப் பின்பற்றுகிறீர்களே?**

ப: துரதிருஷ்டம் என்று சொல்லலாம். தெய்வப் படங்களில் மட்டும் சாரி. அணிந்து நடிக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன்.



## நாயைக் கண்டு பயப்படும் சிம்ரன்

மும்பைக்குச் சற்றுத் தள்ளி சிம்ரன் ஒரு அழகான பண்ணை வீடு அமைத்திருக்கிறார். ஓய்வு நேரங்களில் (அப்படி ஒன்று அவருக்குக் கிடைக்கிறதா?) அங்குதான் தங்குகிறார். அங்கு காவலுக்கு ஒரு நாய் வளர்க்கிறார் சிம்ரன் தங்கை ஜோதி. ஆனால், சிம்ரனுக்கு நாய்களைக் கண்டாலே பிடிக்காதாம். சிம்ரன் பண்ணை வீட்டுக்கு வருகிறார் என்றால் நாயை வேறு இடத்துக்குக் கொண்டு போய் விடுவார்களாம்!

## நாயகி மீது மெல்ல மெல்லச் சாயும் 'லேசா லேசா' தயாரிப்பாளர்

விக்ரம்சிங், 12 பி- படத்தின் தயாரிப்பாளர். பல தயாரிப்பாளர்கள் வாலிப வேட்டை நடத்திக் கொண்டிருக்கையில் இவர் மட்டும் சினிமா என்பது நல்ல தொழில், அதை நல்லவிதமாக 'ட்ரீட்' பண்ண வேண்டும் என்று வேதாந்தம் பேசினார். "வடநாட்டிலிருந்து இப்படி ஒருவரா?" என்று வியந்து போனார்கள் நடிகைகள் ஆனால் இப்போது விக்ரம் சிங்கும் வேட்டையில் இறங்கிவிட்டார். இப்போது அவர் தயாரித்துக் கொண்டிருக்கும் 'லேசா லேசா' படத்தின் நாயகியிடம் மெல்ல மெல்லச் சாய ஆரம்பிக்க... நடிகைக்கு ஏக குஷியாம். சமீபத்தில் இருவரும் வெளிநாடு 'டூர்' அடித்து விட்டுத் திரும்பி இருக்கிறார்களாம்.

## லைலாவின் சிரிப்புக்கு மவுசு குறைகிறது

மினி சினி

**கா**ணாமற் போனவர்கள் லிஸ்டில் கடைசியாகத் தன்னைச் சேர்த்துக் கொண்டவர் லைலா. 'த்ரீ ரோசஸ்' படப்பிடிப்பில் சண்டை போடும்போது காலில் அடிபட்டு, தன்னை ஈன்றெடுத்த சொந்தப் பூமிக்குப் போய்விட்டார் ரெஸ்ட் எடுக்க. அஸ்ணி எப்போ காலியாவா? திண்ணையில் படுக்கலாம் என்று காத்திருந்த சிலர் லைலாவின் இடத்தில் ஸ்ட்ராங் பவுண்டேஷன் போட்டுவிட்டார்கள். இப்போது மீண்டும் பழைய இடத்திற்கு வந்திருக்கும் லைலா அதற்குள் தன் இடத்தைப் பறித்துக் கொண்ட நடிகைகள் குறித்து எரிச்சலுடன் பேச ஆரம்பித்திருக்கிறார். எவள் வந்தாலும் என் சிரிப்புக்கு இணையாகுமா என்று தானே பெருமையடித்துக் கொள்கிறார். ஆனாலும் புதிய கள்ளின் போதையில் பேஸ்த் அடித்திருக்கும் தயாரிப்பாளர் கூட்டம் லைலா யார் அது என்கிறார்கள் லைலாவிடமே. அய்யோ பாவம்.

## 'நீ வரும் பாதையெல்லாம்'

புதிய கதையம்சத்துடனும் இளமைத் துடிப்புடனும் தயாராகி வருகிறது. 'நீ வரும் பாதையெல்லாம்' படப்பிடிப்பு காட்சியின் ஒரு பகுதியில் கம்ப்யூட்டர் சென்டர் முழுவதும் அழகான ஆண்கள், பெண்கள் கூட்டம் நிறைந்திருந்தது. புதுமுகம் விமல், ஸ்ரீமன் கம்ப்யூட்டரில் 'சாட்டிங்' செய்து கொண்டிருக்கின்றனர். அப்போது அங்கு வந்த காயத்ரி ஜெயராம் விமலைப் பார்த்து ஏதோ யோசித்தபடி நிற்க, விமல் "ஹலோ" சொல்கிறார்.

காயத்ரி ஜெயராம் வெட்கத்துடன் பார்க்கிறார். புரியாமல் ஸ்ரீமன் பார்த்துக் கொண்டிருக்கிறார். "என் ஃபிரண்டுக்கு மெடிக்கல் செலவுக்காக உடனே செயினை கழட்டிக் கொடுத்து உதவினீங்க. நான் அதை நாளைக்குத் திருப்பித் தந்திடுறேன்" என்கிறார் விமல்.

"பரவாயில்லை...அந்தச் செயின் தொலைஞ்சு போச்சுன்னு வீட்ல சொல்லி விட்டேன்... உங்க கூட தனியா பேசணும்" என காயத்ரி ஜெயராம் கூறுகிறார்.

"எதுவா இருந்தாலும் நாளைக்கு பேசிக்கலாம்" என விமல் கூற, காயத்ரி ஜெயராம் வேதனையோடு செல்கிறார்.

இப்படியொரு காட்சியை இயக்கினார் புவி. இவரே இப் படத்தின் கதை, திரைக்கதையை எழுதி இயக்குகிறார். இப் படத்தின் படப்பிடிப்பு பாதி முடிவடைந்து விட்டது. இதுவரை வெளிவராத புதுக்கதையை இரசிகர்களுக்குத் தர எந்தவித இடையூறும் இல்லாமல் படத்தைத் தயாரிக்கின்றனர்.

முகப்பில் ஸ்ரீகாந்த் ரம்பா



ரம்யா கிருஷ்ணா

## இது உனக்கு அல்ல..

என் கண்களுக்குள்- உன்
முகம், அந்த ஒரே முகம்
மட்டும் தான் என்றால்
நீ நம்பவே மாட்டாய்.

உன்னை எனக்குத் தெரியும்
நீ நல்லவள்
நமது நட்பைப் பார்க்கும்
ஒவ்வொரு கண்ணுக்கும்- பொறாமைதான்

உன் அழகிய உதடுகளும்
உன் புன்னகையும்
என் மனவானில் அடிக்கடி
மாரிகாலமின்னலாய் வந்து போகிறது.

ஒரே சந்திப்போமே
இப்படி சிந்திக்கவா
அடிக்கடி ஒய்யாரமாய் சிரிப்போமே
இப்படி சிதைந்த போகவா?

என்னை சிறகுடைந்த
கிள்ளை போல்
துன்புறுத்த-உனக்கு
யார் சொல்லித் தந்தது.

யாரென்றும் தெரியாது?
உன்னை கண்டவுடனே
கனைகட்டிய நமது நட்பை
காற்றிலே பறக்க விட்டது யார்?

சந்திக்கும் போதெல்லாம்
நெகிழ்ந்து நெகிழ்ந்து
பேசும் உன் ஜாடை
இப்போது எங்கே இருக்கிறது- சொல்

உன்னை வஞ்சித்தேன்
என்றா நினைக்கின்றாய்
நான் மனதால் அழுவது
உனக்குத் தெரியாதா

சரி உன் கைகளால்
ஒரு சொட்டு தண்ணீர்
கிடைக்குமா- கொதிக்கும்
என் மனதை குளிர வைக்க

இன்பமாய் நகர்ந்த நாட்களை
மீட்டிப் பார்க்க என்ன
தவம் செய்வேன். எப்போது என்று
சொல்- தவங் கிடக்கிறேன்.

எம்.எச்.எம். செய்னுதீன், அக்கரைப்பற்று.

## தரிசனம்

உன் வார்த்தைகள்
ஊதுவர்த்தியாக
மாற்றமானதும்,
என் உருவம்
மெழுகு வர்த்தியாக
உருகி விட்டன...?

மொத்தத்தில்
நீயும், நானும்
நெருப்பாகி விட்டோமா...?

உன் காதல் பற்றிய
கணங்கள்- என்
நரம்பின் தளர்வை
சுவாலையாக்கிப் போனது.
நான் - உன்
பாதங்கள் படும்
மண் துகள்களுக்கே...
உடைந்து.....உடைந்து.....
உயிரைப் பியக்கிறேன்...?

அடர்ந்த வனாந்தர
மூங்கில் காடும்
உராய்வில் அழிவுறும்...
உனது உமலும்
நீளமானதும் வெந்து
சனனிக்கிறேன்...

என் கண்கள்
இப்போதெல்லாம்
மகாவலி சுவடு
நோக்கி அழுகின்றன...

நின்று போன
நம்மூர் ரயில்களைப்
போல்- உன்
பிரிவுகள் -என்
இதய அழுத்தத்தையும்
நிறுத்திக் கொண்டது.

குப்பை மேட்டில்-
சந்தோஷச் சலிப்புப்பட்டு
சிறகடித்து குளிக்கும் கோழியாய்....
உன் குறும்புத்தனங்களும்,
கூத்துக்களும்...
கூடுகட்டி- என்னுள்
களரிப்படுகிறது.

போதி மரப்
போதனைகளின்
ஆசைத் துறவாய்... உன்
மொழிகளின் ராஜ்யத்திலும்
சோக மகிமை
கரையோடுகின்றது.

என்...
வாழ்க்கை
இப்படித்தான் கழிகிறது...

உன் தீப்பார்வையை
சேமித்து- உதட்டு
உத்தியானத்துடன் நீ...
என்ற சிகரெட்டை
பற்றிக் கொண்ட படியே...?

கோ. நாதன், பொத்துவில்.

## தேன் கிண்ணம்

## இழக்கின்ற போதே புரிகின்ற அருமை

என்னை யார் யாருக்கெல்லாம்
பிடிக்கிறது? உன்னைத் தவிர!
என்று சொல்லத்தான்
ஆசை! ஆனால்-
என்னை யார் யாருக்
கோவெல்லாம் பிடிக்கிறது
உன்னைத் தவிர!
என்று ஆதங்கப்பட வைத்து
விட்டாய்!
அறிவு என்பது எல்லா
விடயத்திலும் சிந்திக்கும் தானே!
நம் காதலில் மட்டும்
ஏன் உன் மூளையை
மூடி விட்டாய்?
என்னையும் சேர்த்து...
தமிழில் வார்த்தைகளுக்கா
பஞ்சம்?
முகஸ்துதிக்காகவாவது
என் சம்மதப்படி தமிழிலுள்ள
வார்த்தைகளை எடுத்துக்
கொட்டிவிடு போலியாக!
இந்த நாம் படும் மனம்
சாவிலாவது சந்தோசப்படட்டும்!
ஒரு காதல் பிறக்கின்றபோதே
மயானத்தில் ஒன்றோ, இர
ண்டோ
கல்லறைக்கான இடங்கள்
ஒதுக்கப்பட்டு விடுகிறது.
இப்போது-
காதல் என்பது
யௌவனப் பயிர் வாடாமல்
இருக்க ஊற்றும் நீராகிவிட்டது!
கல்யாணம் என்னும்
அறுவடை வந்ததும்
காதல் நீரை மறந்து
விடுகின்றனர்.
காதல் நீருக்கே கண்ணீர்
துடைக்கும் நிலை!
இருக்கின்றபோதே உணராத
தன்மை!
இழக்கின்ற போதே
வருகின்ற அருமை
நிலையானது!

ஏ.எப்.எம். நியாட்,
முள்ளிப்பொத்தானை.

## புது விடியலின் பூகோளப்புனைவுகள்

பூகோளத்திரளில் எதுவும் எப்போதும்
பூகம்பம் போல் நிகழ்ந்து விடலாம்
அந்த கார இருளுக்குள் எதிர்பாராத
சூரிய கீற்றுக்களின் எழுச்சி
பெரும் புயல்காற்றின் சீற்றத்துள்
புல் நுனிகளில் வெண் பனிப் பூக்கள்
வேர் உலர்ந்துவிட்ட விருட்ச கிளைகளில்
இளந்துளிர்களின் அசைவுகள்

பூகம்பத்தின் இடர்பாட்டிற்குள்ளும்
சிட்டுக் குருவிகளின் நிர்மாணப் பணிகள்
வற்றிவிட்ட ஆழ் சமுத்திரப் பாறையில்
நீச்சலடிக்கும் விண் மீன்கள்
வரண்டு போன பாலைவனத்தில்
நுரைததும்பி ஓடும் நதிகளின் வீச்சம்
எரிமலையின் தீப்பிளம்பிற்குள்
குளிர்காயும் பனிப்பாறைகள்

கல்லறை சமாதிகளில்- துயில் எழுந்து
சூரிய நமஸ்கார மானிட ஜீவன்கள்
வேட்டுச் சத்தங்கள் ஓய்ந்து
வெண்புறாக்களின் சிறகடிப்பின் ஓசைகள்
வீட்டு முற்றத்து பங்கருக்குள்
குதூகலமாய் கும்மியடிக்கும் குஞ்சுகள்
நீர் நிரலில் தூவான தூரலின்
நிஜமான ஓவியங்கள்
பூகோளத்திரளை புரட்டிப் பார்த்த
புத்தி ஜீவிகளின் சமாதான திறவுகள்
காலமாறுதலில் புதுக்கோலங்கள்- இவை
புதுவிடியலின் பூகோளப் புனைவுகள்.

பிரான்சிஸ்-கிருபாகரன்.

## அவர்களைத் தவிர

பக்கத்து வீட்டுப்
பெண் மீது கண்வைத்தேன்.
கோபத்தில் துள்ளினார்
பெண்ணின் தந்தை.
படித்திருந்தும் எனக்கு
அறிவில்லையாம்.

சுற்றுலா சென்றபோது
செலவழித்த பணத்திற்காய்.
அப்பா திட்டினார்.
படிச்சதுதான் மிச்சம்
மண்டைக்குள் ஒன்றுமில்லை.

ஏதோ கோபத்தில்
தங்கையைத் திட்டினேன்
அவள் திருப்பிச் சொன்னாள்
அண்ணா பட்டதாரியென்று
பெயர்தான்: பகுத்தறிவில்லை.

எனது படிப்பையும்
பட்டத்தையும்
எல்லோரும் கவனிக்கிறார்கள்
நேர்முகப் பரீட்சை
வைப்பவர்களைத் தவிர.

கே. ஆர் ரஜீவன், வவுனியா.

## உரசிப் பார்க்கிறேன்

காதல் சந்தையிலே
புதுக் கற்பனைகளின்
கவர்ச்சி விளம்பரங்கட்கு
விற்பனையாகும் கன்னியருள்
என் கண்ணிறைந்து
காணாமல் போனவளுக்காக
என்னிதயம்
கண்வளராது
கண்ணிறால் வரைந்த கடிதமிது
பெண்ணே! உன்னை நான்
கண்ணே கற்கண்டே
உயிரே உலகே என்றெல்லாம்
புழுகி எழுதமாட்டேன்.
மண்ணே! மயிரே!
புதிரே! பதரே என்று எழுதிப்
பகைக்கிறேன்
ஏனத் திகைக்காதே!
உண்மை உளிகளால் உன்னைச்
செதுக்கிறேன்.
நிலவைப் பிடித்துக் கட்டிலில் வைக்க
வானவில்லை எடுத்துச் சேலைகட்ட
நட்சத்திரங்களைக் கோர்த்து
நகை சாத்த
மேகங்களை அடைத்து
மெத்தை போட இத்தனைக்கும்
நானொன்றும்
வித்தைகள் கற்ற வித்துவானல்ல
கையிலிக்குக் கையசமுண்டு.
கைத்தறிச்சேலை கனரகமுண்டு
பொன்னகை போதாதென்றால்
புன்னகை பூத்த அகமுண்டு
பஞ்சு மெத்தைக்கும் பஞ்சமென்றால்
என் நெஞ்சு மெத்தை போதாதோ?
இன்னும் என்ன?
என் கல்லான காதலியே! உன்னை
ஒரு கல்யாணப் பெண்ணாக்க
எண்ணித்தானே
இந்த உண்மை உளிகளை- உன்னில்
உரசிப் பார்க்கிறேன்
உறுத்துகிற தென்றால்

வெறுத்து விடு
ஏற்குமென்றால்- என்னை
எடுத்து உடுத்திவிடு.
ராணி மகாலிங்கம், சாவகச்சேரி.

## பேனா நண்பர்கள்



பெயர்: A.L.A.Raheem
வயது: 25
முகவரி:
P.O. Box 9259,
Holiy Makkah,
K.S.A.
பொழுது போக்கு:
ரி.வி, பத்திரிகை,
கிரிக்கெட்.



பெயர்: எஸ்பிரபாகரன்
வயது: 18
முகவரி:
பாலமுனை,
மண்டூர்.
பொழுது போக்கு:
வானொலி, ரி.வி,
கிரிக்கெட்.



பெயர்: P.Kamal
வயது: 23
முகவரி:
த.பெ.இ. 376A,
Oldfield lane North,
Green Ford, London,
UB6 8PU, U.K.
பொழுது போக்கு:
Internet, கிரிக்கெட்.

## நினைத்து, நினைத்து சிரிக்க

"குஜராத்துல பூகம்ப அழிவ ஏற்பட்டப்ப உன் மனசு எப்படி துடிச்சதுன்னு சொல்லு பார்ப்போம்?"

"நீங்க அங்க இல்லையேன்னு துடிச்சது சார்"



ஒரு ஆபீஸ்ல இன்டர்வியுவுக்காக நிறையப் பேர் வந்து ஹால்ல காத்திட்டிருந்தாங்க. அப்ப முதலாளி ஹாலுக்கு வந்து "எனக்கு பிடிக்காத ஒரே ஒரு விஷயம் ரெக்கமெண்டேஷன் எம்.எல்.ஏ. மினிஸ்டர் சி.எம். அல்லது பி.எம்.ஏன் ஜனாதிபதிகிட்டிருந்தே சிபாரிசுக் கடிதம் வாங்கி வந்திருந்தாக் கூட நான் வேலைக்கு சேர்க்க மாட்டேன். அப்படி யாராவது இருந்தா தயவு செய்து இப்பவே வெளியே போயிடுங்க"ன்னாரு. ஒரே ஒருத்தன் எழுந்து "எக்ஸ்யூஸ்மி சார், நான் உங்க மிஸஸ் கிட்டிருந்து சிபாரிசுக் கடிதம் வாங்கிட்டு வந்தேன். வெளியே போகவா?"ன்னான். "இவனைத் தவிர பாக்கி எல்லாரும் வெளியே போங்க"ன்னாரு முதலாளி.

"சாண்ட்ரா புல்லக்" இவர் பிரபல ஹாலிவுட் இளம் நடிகை. கவர்ச்சி நடிகையும் கூட. அவர் தனது ஆண் நண்பருடன் (காதலர்) ரியோ டிஜெனிரோவில் உள்ள கோபகபானா கடற்கரைக்கு உல்லாசப் பயணமாகப் போயிருந்தார்.

அந்தக் கடற்கரையில், ஹாலிவுட் நடிகையான அவரே ஆச்சரியப்படும்படி, அங்கிருந்த பிரேசில் நாட்டுப் பெண்கள், கடற்கரையில் காட்சி அளித்தாங்க.

அதாவது பிரேசில் நாட்டுப் பெண்கள் மேலாடை கூட இல்லாமல் தங்கள் உடல் அழகை வெட்ட வெளிச்சமாகக் காட்டிக்கொண்டு, உல்லாசமாக உருண்டு புரண்டு கொண்டிருந்தாங்களாம்.

அவர்கள் மத்தியில் சாண்ட்ராவும், அவருடைய காதலரும் நடந்த போனபோது, அத்தனை பெண்களும் அவர்கள் இருவரையும் பார்த்துக் கேலியாக சிரித்தாங்களாம்.

இப்படித் தானும் தனது காதலரும், எல்லாப் பெண்களோட ஒட்டு மொத்த கேலிக்குள்ளான செய்தியை அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் பேட்டியாகக் கூறினார்.

"அப்படி அத்தனை பெண்களின் கேலிக்கு உள்ளானது ஏன்?"என்று கேட்டதுக்கு,

"நானும் என் காதலரும் உடையணிந்திருந்ததுதான் அவர்கள் கேலிக்குக் காரணம்!" என்று சொன்னாங்களாம்.

ஒரு அழகிப் போட்டியில் முதலாவதாக வந்த பெண்ணிடம், நடுவர் ஒருத்தர் ஒரு சிக்கலான கேள்வியைக் கேட்டார். அதாவது, "ஒருவன் மிகவும் ஏழ்மையானவன். ஒருவன் மிகவும் பணக்காரன். இவர்கள் இருவரும் உங்கள் மேல் ஒரே மாதிரியான அன்பை வைத்துள்ளார்கள். இதில் நீங்கள் யாரை மணப்பீர்கள்?" இது கேள்வி.

இதுக்கு அந்த உலக அழகி சொன்ன புத்திசாலித்தனமான பதில், "பணக்காரனைத் திருமணம் செய்து கொண்டு, அந்த ஏழைக்கு நிறையப் பணம் கொடுப்பேன்"

## கவிதை நெஞ்சங்களுக்கு!

இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக தமிழ்நாட்டுக் கவிஞர்களின் காத்திருத்தல் பற்றிய மூன்று கவிதைகளை இங்கு தருகிறோம்.

### மீள மீளக் கொல்லல்

எவ்வளவு நேரம் வெளியில் நிற்பது?
மஞ்சள் குரோட்டன் இலைகளில்
பட்டுத் தெறிக்கிற வெயிலையும்
இன்றுதான் குருத்துவிட்ட ஆற்று வாழையையும்
திரும்பத் திரும்ப எத்தனை தாம் பார்ப்பது?
சுவருக்கு மேலால் தெரிகிற பிரதான சாலையில்
எத்தனை வாகனங்கள்!
இரைச்சல், புகை

நீ வருவதாகச் சொன்ன ஆட்டோ தான் எங்கே?
மிக அலுத்துப் போயிற்று என் அன்பே இன்று
எரிச்சலில்
படாரெனக் கதவை இழுத்தடைத்து
அறைக்குள் சென்று வீழ்கிறேன் கட்டிலில்
எதிரே நிற்கிற நிலைக்கண்ணாடியில்
பழமாய்ச் சிவந்த எனதிரு விழிகளும்

நேற்றிரவென் துயில்
சிதைந்து தான் போயிற்று,
அன்று காலை வருவதாய்
நீயே வந்து சொல்லிப் போன பின்
எவ்விதம் நான் துயில்தல் இயலும்?
இரவு முழுக்க என்னென்ன அதிசயங்கள்?
அறைச் சுவர்கள் பூப்பூத்தது ம்
பளிங்கு அருவிகள் சலசலத்ததும்
ஜன்னலின் வெண்திரைகள் விலத்தி
உட்புகுந்த மென்பனிக் காற்று
ஈரப்பூக்கள் வெளிகளிடை எனைக்
காவிச் சென்றதும் மற்றும்

எதை எழுதுவது எதை விடுவது?
இன்னும் எங்கு போய்த் தொலைந்தாய் நீ?
கால்கள் தாவாமல்
இருப்புக் கொள்ளாமல்
விடிய விடியவும் விடிந்த பிறகும்
என்ன ஒரு அவஸ்தையிது Chel ?
கடிகார முட்களோடு நகர்ந்து நகர்ந்து
என் கண்களின் கூர்மை மங்குது பார்.
எங்கோ ஊர்கிற நாறு ஆட்டோ இரைச்சலில்
நீ வருவது எதுவென நான்
எப்படித் தெரிவது?

மிகத் தொலைவான
அண்மித்த ஒலிகளையெல்லாம் நான்
இன்றுதான் செவிமடுக்கிறேன்.
வாசலில் நிற்கிற விளாட்டு மாவிலும்
அயல்வீட்டு மரங்களிலும்
பெயர் தெரியாத இத்தனை குருவிகள்
கிச்சு கிச்சென எழுப்புகிற ஒலிகள்
ஏன் எனக்குக் கேளாதிருந்தன?
நீ வருவதெனில் மட்டுமா என்
புலன்களில் துளிர்க்கிறது உயிர்?

நீ வருவதாய்ச் சொன்ன நேரமுங் கடந்து
அதிகமாய்ப் போனது இரு மணி நேரம்.
என் புல்லின் நுனியில் தேங்கி மினுங்கிய
கடைசித் துளி நம்பிக்கையும்
உலர்ந்திற்று மெல்ல.
இன்னமும் நீ வரவில்லை தான்.
வரவேயில்லை தான்.
எங்கே என் அறைக்குள் பூத்த பூக்கள்?
எங்கே என் நெஞ்சு அசைந்த அருவி?
எங்கே எனை மிதக்க விட்ட காற்று?

-என். ஆத்மா.

### இடைவேளை

கால நகத்தின்
கோரப் பிராண்டலில்
இடம்பெயர்ந்த எனது செதில்கள்
பல்கிப் பெருகிப் பல்லிளிக்கும்.

என்மீது விழுந்த
கடைசிப் பார்வைச் சொட்டும்
தாகித்து என்னுள்ளே
தற்கொலை புரியும்.

கைதவறி உடைந்த
இதயத் துண்டுகள்
என்னில் முகம் பார்த்து
எக்காளமிடும்.

உனது எதிர்பார்ப்பில் மூழ்கி
மூச்சிரைக்க வெளிவந்த
என் கைகளில்
வெறுமைச் சிப்பி வேடிக்கை
காட்டும்.

இறந்த காலமும் எதிர்காலமும்
கூடிப் பேசி
எனது நிகழ்காலத்தை
நிறமிழக்கச் செய்யும்.

-நாசர்.

## சிறப்புக் கவிதை

### காத்திருப்பு


பின் மாலைதான் எனினும்
நள்ளிரவின் சாயல் பூணும் வீதி
விளக்குக் கம்பங்களோ
தலைகுனிந்து ஒளிக் கண்ணீர்
வடித்தபடி.
தெருமுனையில் ஓரிரு முகங்கள்
தெரியும்; மறையும்
நீ இல்லை.
நிமிடங்கள் நெருப்புச் சொட்டுக்கள்
உன் செருப்போசை கேட்க
கல்லான அகலிகையாய்க்
காத்திருக்கும் சூனியம்.
விழித்திரையில் உன்
முக பிம்பம் ஏந்தவென்று
இமைத்தல் மறந்தன கண்கள்.
இன்று நீ வரவில்லை;
இருப்பினும் என்
அடுத்த காலையும்
பிறக்கும் அலங்கரித்தவாறே.
நாளையேனும் நீ வருவாயெனும்
நம்பிக்கையில்
நாட்கள் நகரும்
காரட் கட்டிய கழுதையைப் போல.

- உமாமகேஸ்வரி.



## கால்களின் அழகைக் காக்க....

பெண்களின் அழகில் முக்கிய பங்கு வகிப்பது கால்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. முக்கியமாகக் கால்களின் உயரத்தைப் பொறுத்தே பெண்களின் உயரமும் அமைகின்றது. இன்றைய பெண்களின் உயரம் படிப் படியாகக் குறைந்து வருவதை நாங்கள் பார்க்கலாம். நூற்றுக்கு 45 சதவீத பெண்கள் இன்று குள்ளத் தோற்றத்திலே இருக்கிறார்கள்.



இந்த சதவீதம் போகப் போக அதிகரிக்கும் நிலை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் காலத்தின் கோளாறா அல்லது நமது வாழ்க்கை முறையின் மாறுபாடுகளா என்பது தெரியவில்லை.

குள்ளமாக இருப்பதை மறைப்பதற்காக இன்றைய நவநாகரீகப் பெண்கள் 'ஹீல்ஸ்' பாதணிகளை அணிகின்றனர். இதனால்பெருத்த ஆபத்துகள் ஏற்படும். சீக்கிரம் செல்ல ஓடுவார்களேயானால் தடுக்கி விழலாம். மேலும் புடைவை கட்டிக்கொண்டு செல்லும் பொழுது செருப்பு மட்டுமே பளிச் சென்று தெரியும். ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் உயரத்தின் அளவைக் கூட்ட முடியாது. ஆகவே உங்கள் வீட்டில் பெண் குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கு உணவில் கல்சியம் சக்தி கிடைக்கும் உணவுகளைக் கொடுத்து, தினமும் சைக்கிள், வாக்கிங், ரன்னிங் என்று ஒரு மணி நேரம் பயிற்சி எடுக்கச் சொல்லுங்கள். இதனால் உயரப் பிரச்சினை தீரும். மற்றொரு முக்கிய பிரச்சினை கால்கள் இரண்டிலும் அளவுக்கு அதிகமாக முடிகள் முளைத்து ஆண்களைப் போன்ற தோற்றம் அளிப்பது துணிகளால் கால்கள் மறைக்கப்பட்டு இருந்தாலும், பொது இடங்களில் சில சமயத்தில் கால்கள் சற்று வெளியே தெரிய நேரிட்டாலும் தோழிகளிடத்திலும் மற்றவர்களிடமும் கூனிக் குறுக வேண்டி இருக்கின்றது. இதைப் போக்க கஸ்தூரி மஞ்சளை நன்கு அரைத்துப் பன்னீரில் ஊறவைத்து, தொடை முதல் கால்வரையில் பூசி, அரை மணி நேரம் பொறுத்துக் குளித்தால் முடிகள் அனைத்தும் கொட்டி கால் பளிச்சென்று தோன்றும்.

உடலின் எடை கூடக் கூட காலின் தாங்கும் சக்தி குறையும். இதனால் மூட்டு வலி ஏற்பட்டுவிடும். இந்த மூட்டுவலி மூட்டின் தேய்மானத்தாலும் மூட்டில் உள்ள எண்ணெய்ப் பசை குறைவதாலும்தான் ஏற்படுகின்றது.

சிலருக்குக் கால்களில் அடிக்கடி வீக்கம் ஏற்பட்டு யானைக்கால் போன்று தோற்றமளிக்கும். பப்பாளி இலையை அரைத்துப் பற்றுப் போட்டு வந்தால் வீக்கம் குறையும்.

சிலருக்கு ஆங்காங்கு இரத்தம் கட்டிக் கொள்ளும். சுளுக்கும் இருக்கும். இவர்கள் உப்பு, புளி, மஞ்சள் இவை அனைத்தையும் ஒன்றாகக் கலந்து சூடு ஏற்றி இதமான சூட்டில் பற்றுப் போட்டால் இரத்தக் கட்டி, சுளுக்கு மறையும்.

அழகுக்கு விரோதியே தூக்கம் தான் எனவே மதியத்தில் அதிக நேரம் தூங்கக் கூடாது. ஆனால் 15 நிமிடம் முதல் 30 நிமிடம் வரையில் மட்டுமே தூங்கினால் அது இரவில் 8 மணி நேர தூக்கத்திற்குச் சமம்! அப்படி தூங்கும் பொழுது கால்களுக்கு அடியில் தலையணை ஒன்றை வைத்துக் கொள்ளுங்கள். இதனால் இரத்த ஓட்டம் சீராக ஓடி, கால்களில் புத்துணர்ச்சி ஏற்படும்.

கால்கள் பளிச்சென்று மின்ன வேண்டுமா? வேப்பிலைக் கொழுந்தை அரைத்து எலுமிச்சம் பழச்சாறுடன் கலந்து, குளிப்பதற்கு முன் கால்களில் தடவி வந்தால் கால்கள் பளிச்சென்று மாறுவதுடன் நோய்களும் அண்டாது.

## ஐஸ்கிறீம்.... ஐஸ்கிறீம்....



இன்று குழந்தைகளிடையே அதிகம் விற்பனையாவது ஐஸ்கிறீம். இது இத்தாலியில் 1778 ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள்தான் ஐஸ்கிறீமில் பாதாம் வாசனை, சாக்லேட் வாசனை, ஸ்ராபெர்ரி வாசனை எனப் பல வாசனைகளைக் கலந்து முதன் முதலாகத் தயாரித்தார்கள்.

1940 ம் ஆண்டளவில் குல்பி ஐஸ்கிறீம்தான் எங்கும் இருக்கும். இந்த ஐஸ்கிறீமும் ஒரு கட்டை டப்பாவில் அடைத்து விற்கப்படும். காலம் மாற மாற நிறைய வகையான ஐஸ்கிறீம்கள் வந்துவிட்டன.

தற்போது விஞ்ஞான நுட்பத்தைப் புகுத்தி ஐஸ்கிறீம்கள் உருவாக்கப் படுகின்றன. ஐஸ்கிறீம் தயாரிப்பதில் உலகின் மிகப் பெரிய நிறுவனம் யூனிலிவர். இங்கிலாந்தில் ஐஸ்கிறீம் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று உள்ளது.

பந்தியில் இனிப்பு, காரம் ஆகியவற்றை வைப்பதைப்போல அமெரிக்கர்கள் ஐஸ்கிறீம் வைப்பார்கள்.

ஐஸ்கிறீமை எப்போதாவது சாப்பிடலாம். அடிக்கடி சாப்பிடக் கூடாது. இது மருத்துவ ரீதியான உணவு அல்ல.

முறையாகத் தயாரிக்கப்படாத ஐஸ்கிறீம் சாப்பிடுவதால் பல பாதிப்புகள் வருகின்றன.

அவற்றுள் முகிய்மானவற்றை பார்க்கலாம்.

பொதுவாக எதையும் அதிகக் குளிர்ச்சியாகவோ, சூடாகவோ சாப்பிடக் கூடாது. மிதமாகத்தான் பயன்படுத்த வேண்டும். ஐஸ்கிறீம் சாப்பிடும் போது உடலின் சீதோஷ்ண நிலையில் ஏற்படும் மாற்றங்களால் உறுப்புகள் பாதிப்படைகின்றன. குளிர்ச்சியாகப் பல்லின் மீது படுவதால் பல் எனாமல் பாதிக்கப்படும். நாக்கின் மீது படுவதால் உடனடியாக சுவையரும்புகள் பாதிக்ககப்படுகின்றன.

தொண்டைக்குள் ஐஸ்கிறீம் நுழையும் போது நோய்த் தொற்றுக்கள் ஏற்படுகின்றன. தொண்டையை அடுத்துள்ள மூச்சுக் குழல் திடீர் குளிர்ச்சியால் பாதிக்கப்பட்டுச் சுருங்கும்போது மார்பு இறக்கம் எற்படும். ஐஸ்கிறீம் வயிற்றுக்குள் செல்லும்போது குடற் காய்ச்சல் எனப்படும் டைபாய்டு நோய் வரும். தவிர, தொண்டைக் கரகரப்பு, சளி, சைனஸ், தும்மல், ஜலதோஷம் போன்றவை வரும். அலர்ஜி ஆஸ்துமா உள்ளவர்களின் மூச்சுக் குழல் இறுகுவதால் பாதிப்பு அதிகரிக்கும். ஐஸ்கிறீமிலுள்ள கலர் பொருட்கள் ஒத்துக்கொள்ளதா போது குழந்தைகளுக்கு அலர்ஜி உண்டாகும்.

நீங்கள் விரும்பிச் சாப்பிடும் ஐஸ்கிறீமால் இத்தனை சிக்கல்களா என்று பயந்து ஐஸ்கிறீமைச் சுத்தமாக மறந்து விடாதீர்கள். அளவாகச் சாப்பிட்டு வந்தால் கொழு கொழு என்று வளரவும் ஐஸ்கிறீம் உதவும்.



## பிரிட்னி மனநோயால் அவதிப்படுகிறார்?

காதல் தோல்வியினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கும் உலகப் புகழ் பெற்ற பொப்பிசைப் பாடகி பிரிட்னி ஸ்பெயர் கடுமையான மன அழுத்தம் காரணமாக ஒரு வகை மன நோய்க்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சமீபத்தில் மெக்சிக்கோவில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றின் போது 4 பாடல்களை மட்டுமே பாடிய பிரிட்னி இரசிகர்களிடம் மன்னிப்புக் கோரிவிட்டு மேடையை விட்டு நகர்ந்து சென்றார்.

ஆத்திரமடைந்த இரசிகர்கள் பிரிட்னி ஒரு ஏமாற்றுக்காரி என கூக்குரலிட்டனர். உள்ளூர் இசை நிகழ்ச்சிகளிலும் இவ்வாறான பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பிரிட்னியின் மனநிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருவதால் மருத்துவ உதவியை நாடுமாறு அவரது குடும்பத்தினர் வற்புறுத்தத் தொடங்கியுள்ளனர்.

ஜெஸ்டின் டிம்பர்லேக் என்ற இளைஞருக்கும் பிரிட்னிக்கும் இடையிலான காதல் இந்த ஆண்டு ஆரம்பத்தில் முறிந்தது. இதனையடுத்து போதைக்கு அடிமையான பிரிட்னி பிரிட்டிஷ் இளவரசர் வில்லியமுடன் காதல் கொண்டிருப்பதாகச் சில காலம் கிசுகிசுக்கப்பட்டார். பிரிட்டிஷ் அரச மாளிகை இந்தத் தகவலைத் திட்டவட்டமாக மறுத்த போதும் வில்லியமும், பிரிட்னியும் மிக நெருக்கமாக இருக்கும் புகைப்படங்கள் கடந்த நாட்களில் லண்டன் பத்திரிகைகளில் வெளியாகின.



குறொஸ் றெஜிட் என்ற திரைப்படத்தில் பிரிட்னி நடித்தார். அந்தத் திரைப்படத்தின் கதாநாயகனுடன் நிஜ வாழ்வில் பிரிட்னி 'அந்த' மாதிரியான தொடர்புகளைக் கொண்டிருந்ததாக இணையத் தளம் ஒன்று தகவல்' வெளியிட்டுள்ளது. ●


### செல்வாஸின் 7 சல்வார் பரிசுப் போட்டி



நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்** Aj

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

**உண்மை–நேர்மை–வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 21-09-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

### இந்த வாரம் யாருக்கு சல்வார்? பேலியகொடை வாசகிக்கு அதிஷ்டம்!


இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

ரி. ரஞ்சனி
81/41, நீர்கொழும்பு வீதி, பேலியகொடை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





எல்லா உயிரும் இன்ப மெய்துக.
எல்லா உடலும் நோய் தீர்க.
எல்லா உணர்வும் ஒன்றாத லுணர்க.
'தான்' வாழ்க.
அமுதம் எப்போதும் இன்ப மாகுக.

சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

# தீவு... தீவு... தீவு!

**டோ**ங்கா பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவன் லெகாம்பை என்ற இளைஞன். இவன் மீன் பிடிப்பதில் வல்லவன். தன் இன மக்களுக்கு அவ்வப்போது தன்னால் ஆன உதவிகளைச் செய்வான். அதனால் லெகாம்பையை டோங்கா இனத்தவர் மிகவும் நேசித்தனர்.

ஒருநாள்-

வழக்கம் போல் கடலில் மீன் பிடிக்கச் சென்றான் லெகாம்பை. அப்போது பயங்கரமான சூறாவளிக் காற்றில் அவன் படகு மாட்டிக்கொண்டது. படகை மீட்க, எவ்வளவோ போராடினான் லெகாம்பை. அவனால் ஒன்றுமே முடியவில்லை. கடைசியாகப் படகு ஒரு பெரிய கருப்புப் பாறையில் மோதிச் சுக்குநூறாக உடைந்தது. கடலில் விழுந்த லெகாம்பை அந்தக் கறுப்புப் பாறையைப் பிடித்துக் கொண்டான். சட்டென்று புயற் காற்று அடங்கி அமைதியானது. மெதுவாக அந்தப் பாறையின் மீது ஏறி அமர்ந்தான். என்ன ஆச்சரியம் 'சர்' என்று வானுலகை நோக்கி அந்தக் கறுப்புப் பாறை பறக்க ஆரம்பித்தது. அதிர்ந்து போனான் லெகாம்பை. அப்புறம்தான் தெரிந்தது அது ஒரு கடல் ஆமை என்று!

கடல் ஆமை மேலே மேலே பறந்து செல்லச் சோர்ந்து போனான் லெகாம்பை. ஒரு வழியாக வானுலகத்தை அடைந்தது கடல் ஆமை. வானுலக மன்னன், லெகாம்பையைப் பார்த்துச் சொன்னான். "நான் உன்னைப் பத்திரமாக உன் நாட்டிற்கு அனுப்பி வைக்கிறேன். ஆனால், இரண்டு கட்டளை. ஒன்று நீ கடல் ஆமையின் மீது ஏறி அமர்ந்ததும் இறுகக் கண்களை மூடிக் கொள்ள வேண்டும். என்ன நடந்தாலும் கண்களைத் திறந்து பார்க்கக் கூடாது. இரண்டாவது என் ஆமைக்கு உங்க நாட்டில் விளைந்த ஒரு தேங்காயும், நீங்கள் தென்னோலைகளில் முடையும் பாய் மிகவும் அழகாக இருக்கும்; அதில் ஒன்றும் கொடுக்க வேண்டும். இது நீ எனக்குக் கொடுக்கும் அன்புப் பரிசு" என்றான். லெகாம்பையும் 'சரி' என்று சம்மதித்து ஆமையின் மீது ஏறி அமர்ந்தான். கண்களை இறுக்கி மூடிக் கொண்டான்.

வானுலகில் இருந்து பறந்து கீழே வந்த ஆமை கடலுக்குள் பாய்ந்தது. லெகாம்பைக்கு மூழ்கி விடுவோமோ என்று மிகவும் பயமாக இருந்தது. சுறா, திமிங்கிலம் போன்ற மீன்கள், "லெகாம்பை, உன்னைக் கொல்லப் போகிறோம்" என்று பயங்கரமாகக் கத்தியபடி கிட்ட வந்தன.

ஆனால், லெகாம்பை கண்களைத் திறக்கவே இல்லை. அலைகள் ஒரு பக்கம் புரண்டு எழுந்து அவனைப் பயமுறுத்தின. எதையும் சட்டை பண்ணாத லெகாம்பை கண்களைத் திறக்கவே இல்லை. தன்னுடைய தீவுக்கு வந்து சேர்ந்தான் லெகாம்பை. அவனை இரண்டு நாட்களாகக் காணாமல் கவலைப்பட்ட தீவுவாசிகள் அவனைக் கட்டித் தழுவி நலம் விசாரித்தனர். அவர்களைக் கண்ட மகிழ்ச்சியிலும், தன் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்ற ஆவலில் கடல் ஆமையை மறந்தான்.

இரண்டு நாட்களுக்குப் பின் தான் லெகாம்பைக்கு கடல் ஆமை பற்றிய நினைப்பே வந்தது. பதறிப்போன லெகாம்பை ஓடி வந்தான். கடற்கரையில் இவன் வருவான்.... வருவான் என்று காத்திருந்து கடல் ஆமை இறந்து கிடந்தது. துடி துடித்துப் போனான் லெகாம்பை.

"ஐயோ! வானுலக ராஜாவுக்கு நான் எப்படி பரிசுப் பொருட்களை அனுப்பி வைப்பேன். இனி இந்தத் தீவுக்கு என்ன கஷ்டம் வரப்போகிறதோ தெரியவில்லையே. கடல் ஆமையைச் சாகடிச்சிட்டேனே," என்று புலம்பி அழுதான்.

உடனே ஆழமாகக் குழிதோண்டி அதற்குள் ஆமை, தேங்காய், பாய் இவற்றைப் போட்டு மூடிவிட்டு, தன் வேலைக்காரன் ஒருவனை ஆமையின் கல்லறைக்குக் காவல் வைத்தான்.

வருடங்கள் சென்றது. அவர்கள் வசித்த சமோவா தீவின் செழிப்பு போயிற்று. பசுமையான தீவு பாலைவனமாக மாறியது. தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்து அழிந்தன. நொந்து போன டோங்கா இனத்தவர் "இனி இந்தத் தீவில் நாம் வாழ்வதால் பயன் என்ன?" என்றனர். அப்போது லெகாம்பை நடந்த விஷயத்தைக் கூறினான். "என்னால்தான் இந்தத் தீவிற்கு வறட்சி வந்தது. உங்களை மீண்டும் செழிப்பான தீவுக்குக் கொண்டு செல்வது என் கடமை" என்று கூறினான்.

கடல் ஆமையைக் காவல் காத்த காவலன் மட்டும் அப்படியே இளமையாக இருப்பதைக் கண்ட மக்கள் ஆச்சரியப்பட்டனர். லெகாம்பை மற்றும் தீவுவாசிகள் வயதானவர்களாக ஆகிவிட்ட போதும் அந்த காவல்கார இளைஞனின் இளமையைக் கண்டதில் இருந்து கடல் ஆமையிடம் ஏதோ மந்திர சக்தி உள்ளது, லெகாம்பை சொல்வது. உண்மைதான் என்று உணர்ந்தனர்.

மறுநாள்-

லெகாம்பை, தீவுவாசிகள் அனைவரையும் அழைத்து வானுலக அரசனுக்கு யாகம் நடத்தி, தான் செய்த தவறை மன்னிக்கும்படி கெஞ்சினான். "நான் ஒருவன் செய்த குற்றத்திற்குத் தீவு மக்கள் அனைவரையும் தண்டிக்க வேண்டாம்; வேண்டுமானால் என் உயிரை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சி அழுதான். லெகாம்பையின் நல்ல மனதைக் கண்ட வானுலக அரசன் அசரீரியாகப் பேசினான். "கடல் ஆமையைத் தோண்டி எடுத்துப் படகில் வைத்துக் கொண்டு செல்லுங்கள். நான் உங்களுக்கு ஒரு புதிய தீவைக் காட்டுவேன்" என்று குரல் கேட்டது.

சந்தோசமடைந்த டோங்கா இனத்தினர் கடல் ஆமையைத் தோண்டி அதன் ஓட்டை எடுத்துப் படகில் வைத்துக் கொண்டு, தீவுவாசிகள் அனைவரும் படகு போன போக்கில் சென்றனர். சில நாட்களுக்குப் பின் ஒரு தீவை அடைந்தனர். அந்தத் தீவைக் கண்ட டோங்கா இனத்தவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அழகிய தென்னை மரங்களும், செழுமையும், அழகும் வாய்ந்த அந்தத் தீவின் அழகில் மனதைப் பறி கொடுத்தனர்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **21.09.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **462**
தினமுரசு வாரமலர்
த.பெ. இல. 1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 459

பரிசுக்குரியவர்:
-செல்வி. ஆர். சுவஸ்திகா,
பிரதானவீதி, கலஹா 2420

### பாராட்டுக்குரியவர்கள்;

| | |
|---|---|
| **க. பிரசாந்த்,** ரகுமானா பாத், நீர்கொழும்பு. | **அஹ்மத்ஷா ஏ. ஜஸ்லான்,** தில்லையடி மு.ம.வி, புத்தளம். |
| **டிஸ்னி ஹென்றிக்,** பாத்திமாபுரம், கல்முனை. | **என். வியஸ்டினேஷ்,** கல்லூரி வீதி, திருகோணமலை. |
| **எஸ். சிவானியா,** ஆர்.பி. பிரிவு, ரம்பொட. | **ஜே. சரவணராஜ சர்மா,** கன்னாரத் தெரு, கொழும்பு. |
| **ஜோ. சாமலின்,** லொயிட்ஸ் அவனியூ, மட்டக்களப்பு. | **சி. சதீஷ்,** பலாங்கொடை. |
| **எஸ். மஆத்,** கிழக்கு வீதி, அக்கரைப்பற்று. | **க. கீர்த்திகா,** வேலணை ஆத்திசூடி பாடசாலை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. கிட்ட கிட்ட நடந்தால் எட்டி எட்டிப் போவன் அவன் யார்?
2. நன்றிக்கு வாலை ஆட்டும் நல்ல நண்பன். வேண்டாதவர்க்கு எமனும் கூட அவன் யார்?
3. ஓடியாடி வேலை செய்த பின் ஒரிடத்தில் மூலையில் ஒதுங்கிக் கிடப்பான். அவன் யார்?
4. தண்ணீருக்குள் கிடப்பான் குழம்புக்குள் மணப்பான் அவன் யார்?
5. புல்லுக்குச் சுமையாவான் முயலுக்குத் தாகம் தீர்ப்பான் அது என்ன?
6. வெட்டிக் கொள்வான் ஆனாலும் ஒட்டிக் கொள்வான் அவன் யார்?
7. சிக்காத கல் எங்கும் விற்காத கல் அது என்ன?
8. இரட்டைக்குழல் பீரங்கியில் வெடி மருந்து வைத்து வெடிப்பான் அது என்ன?
9. கறுப்புத் தோட்டத்தில் வெள்ளை விதைகள் அறிவுக்கு விருந்தாகும் அடுத்த நாள் புதிதாகும் அது என்ன?
10. தலைக்கு மேல் உயரம் தாகம் தீர்ப்பதில் சிகரம் அவன் யார்?

**விடைகள்.**

1. நிலா 2. நாய்
3. துடைப்பம் 4. மீன்
5. பனித்துளி 6. கத்தரிக்கோல்
7. விக்கல்
8. மூக்கு- பொடி- தும்மல்
9. கரும்பலகை- எழுத்து
10. இளநீர்



## பல்லி வாலைத் துண்டிப்பது ஏன்?

**எ**திரிகள் துரத்தும் போது ஒவ்வொரு விலங்கும் ஒரு மாதிரியான எதிர்ப்பைக் காட்டும். முள்ளம்பன்றி பந்து போலச் சுருண்டு படுத்துக்கொள்ளும் சில வகைப் பூச்சிகள் துர்நாற்ற திரவத்தை எதிரியை நோக்கிப் பீச்சியடித்துத் தடுமாற்றத்தை உண்டு பண்ணும். சில வகை உடும்புகள் தங்களது தலைப் பகுதியைச் சிலிர்ப்பிக் கொண்டு எதிரியை எச்சரிக்கும். பச்சோந்திகள் நிறம் மாறி விடும். இந்த எல்லாவற்றிலும் வித்தியாசமானது பல்லிதான். பல்லி தனது வாலைத் துண்டிப்பதன் மூலம் எதிரியைத் திசை திருப்பும். எதிரியின் அந்தத் தடுமாற்ற நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு வேகமாகத் தப்பி ஓடிவிடும். இப்படி பல்லிகள் வாலைத் தன்னிச்சையாகத் துண்டித்து விட்டாலும் மீண்டும் அதற்கு வால் முளைத்து வளர்ந்து விடுகிறது. ஒரு வருடத்திற்குள் பல்லியின் வால் வளர்ந்து முழுமை பெற்று விடுகிறது. பல்லிகள் முட்டையிட்டே குஞ்சு பொரிக்கின்றன. ஒரு பல்லி 6,7 முட்டையிட்டாலும் அவற்றிலிருந்து ஒரு சிலதான் பொரித்துக் குஞ்சுகளாக வெளிவருகின்றன. பல்லிகளின் விருப்பமான உணவு பூச்சிகள் தான். ஆனால் இலைகளைத் தின்னும் பல்லிகளும் இருக்கின்றன. இராட்சதப் பல்லிகள் சிறு பறவைகளையும், விலங்குகளையும் கூடப் பிடித்து விழுங்கிவிடுகின்றன. ஆர்டிக் பகுதி தவிர உலகின் எல்லாப் பகுதிகளிலும் பல்லிகள் உள்ளன. குளிர்ச்சியான பனிகாலத்தைப் பெரும்பாலும் தூங்கியே கழிக்கும் பல்லிகள் கோடை காலத்தில்தான் சுறுசுறுப்பாகின்றன. ஐரோப்பாவில் பச்சை நிறத்தில் கூடப் பல்லிகள் உண்டு.




## நீங்கள் உங்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பொருட்களைக் கண்டுபிடித்தவர்கள்.

| பொருள் | கண்டறிந்தவர் | ஆண்டு | நாடு |
|---|---|---|---|
| கடிகாரம் | ஏ.எல். பிறிகேற் | 1792 | பிரான்ஸ் |
| சைக்கிள் | கே. மக்மிலான் | 1839 | ஸ்கொட்லாந்து |
| தையல் இயந்திரம் | ஐ.எம். சிங்கர் | 1851 | அமெரிக்கா |
| தீப்பெட்டி | ஜே.ஈ.லுண்ட்ஸ்ரோம் | 1855 | சுவீடன் |
| சினிமா | ஜே. லூம்மியர் | 1895 | பிரான்ஸ் |
| தொலைக்காட்சி | ஜோன் லொயிக்பயர்ட் | 1926 | ஸ்கொட்லாந்து. |
| கம்ப்யூட்டர் | வானடேஸவ் | 1976 | அமெரிக்கா |
| பியானோ | கிறிஸ்ரோபோறி | 1711 | இத்தாலி |

தொகுப்பு:
எம். ஜெயபிரகாஷ், கொழும்பு.


## இந்த வாரப் புதிர்



இங்குள்ள 13 சதுரங்களையும் கையை எடுக்காமல் ஒரே கோட்டால் இணைக்க வேண்டும். கோடு, ஒரு சதுரத்தை ஒரு முறைக்கு மேல் தொட்டுக் கொண்டு செல்லக் கூடாது.

## அறிவுத் தேடல்

சென்றவாரப் புதிரின் விடை:



# ரசனை

ஒரு தேக்க வாழ்விலிருந்து விடுபட்டு வெளியே வந்துவிட்ட மகிழ்ச்சி வவுனியாக் குளக்கட்டில் நடந்துகொண்டிருக்கையில் எனக்கு வந்தது.

முன்பு இளைஞனாக இருந்த காலத்தில் இந்தக் குளத்தைப் பார்த்து உவந்து குளக்கட்டில் நடப்பது எனக்குப் பொழுதுபோக்காக இருந்தது. அதற்குப் பிறகு, இந்தச் சச்சரவுகள் நாட்டில் எழுந்து ஆமி, பொலிஸ் என்ற திகிலோடு அலைந்ததால் இந்தப் பக்கமே கால் வைக்கப் பயமாக இருந்தது.

இப்போது இந்தச் சூழல் மாறி நிம்மதியான நிலைமையில் நாடு உள்ளதால் இந்த இடத்திற்கு நான் உலா வந்தேன்.

இங்கே எனக்கு முன்னே ஒரு 'சப்பை மாடு' குளக்கட்டில் போய்க்கொண்டிருக்கிறது. அந்த மாட்டைப் போலவே குளத்தின் சூழலும் என் பார்வைக்குக் கேவலமான நிலையில் தெரிகிறது.

வாரியடிக்கிற ஆடி மாதக் காற்றுக்கு முன்பெல்லாம் இந்தக் குளக்கட்டில் நடந்து ஒழுங்காகப் போக முடியாது. சிலவேளை பலத்த காற்றில் தள்ளப்பட்டுக் குளக்கட்டிலிருந்து பள்ளத்திற்கு இறங்கி ஓடி, கீழே நிற்கிற அந்த இலுப்பை மரத்தைக் கூட நான் கட்டிப்பிடித்துக்கொண்டு நின்றிருக்கிறேன்.

அது என் சின்ன வயதுக் காலம்.


"காத்து என்னைத் தள்ளி விழுத்துதம்மா..."

உரக்கக் கத்திக் கொண்டு என் அம்மாவுக்கு இவ்வாறாகச் சொல்லியிருக்கிறேன். சோனாவாரியடித்துக் குளம் நிரம்பி வான் பாயவும், இந்தக் குளத்துக்கு அம்மா என்னைக் கூட்டிக்கொண்டு அடிக்கடி குளிக்க வென்று வருவா. உடுப்புக்களைச் சவுக்காரம் போட்டுத் துணி துவைக்கும் கல்லில் சட்டையைக் கும்மித் துவைத்துத் தர, அவைகளை வாங்கிக் கொண்டு போய் குளக்கட்டுக்குக் கீழே புற்றரையில் நான் வெயிலில் காயவைப்பேன். பட்டம் விடுமாப்போல் அம்மா கழுவிக் கொடுக்கும் துணிகளைக் கட்டின் மேல் நின்றபடி காற்றில் அலையடிக்க விடுவதுமுண்டு. அங்கு குளிக்க வரும் ஆடைப் பஞ்சமுள்ளவர்கள் அந்த விதமாகப் பிடித்து உடைகளை உடன் காயவிட்டு உடுத்துவதையும் நான் கண்டிருக்கிறேன்.

இந்தக் குளத்தில் தூண்டில் போட்டு மீன் பிடிப்பார்கள், நடுக்குளத்துக்கு வள்ளத்தில் சென்று மீன் பிடிக்கும் வலைஞர்களையும் நான் காண்பதுண்டு.

எனக்கு நன்னீர் மீனில் 'விரால்' கறி மிகப் பிடிக்கும். அந்த மீனில் நடுக்கண்டமாக வெட்டிய துண்டாகப் பார்த்தெடுத்துப் போடவேணும். இல்லாவிட்டால் "சோறு சாப்பிட மாட்டேன்" என்று அம்மாவோடு அடம்பிடிப்பேன். இந்தக் குளத்தில் ஜப்பான் மீன்தான் அதிகம். அதனாலே குளம் வான் பாய்ந்தாலும், மற்றவரைப் போல மீன் வேட்டைக்கு நான் இங்கு வருவதில்லை. இருந்தாலும் குளத்தில் தண்ணீர் நிரம்பி வான்பாய, அதைப் பார்க்க நான் வருவேன். பலபேர் இரும்புப் பட்டம் கையில்கொண்டு மீன் பாயவும் குறிப்புப் பார்த்து வெட்டுவார்கள். அதைப் பார்ப்பதில் எனக்கொரு பொழுது போக்கு அங்கே கிடைக்கும். இவைகளெல்லாம் நடந்தது எப்போது? குளத்தில் தண்ணீர் இருப்பதே தெரியாத வண்ணம் தாமரை இலைகளும், மலர்களும், மொட்டுகளும் நிறைந்திருந்த அக் காலத்தில். ஆனால், இப்போது;

தண்ணீரில் ஊறியபடி பிளாஸ்டிக் பொருட்கள், ஷொப்பிங் பை, குப்பைகளே அங்குமிங்கும் குவிந்து கிடக்கின்றன. அதற்குள் ஒரு காகிதத் துண்டையும் நான் கண்களால் காணவில்லை.



நீ. பீ. அருளானந்தம், கல்கிசை

குளம் தூர்ந்து போகிறதோ? என்று எனக்குள் ஒரு ஐமிச்சம். மடுவங்கரைப் பக்கம் பார்வையைச் சுழல விடுகின்றேன். அந்த நிலங்களிலெல்லாம் புதிதாக வீடுகள், கட்டடங்கள் எழும்பியிருக்கின்றன. முன்பு அந்த இடம் விளாத்திக் காடாய்க் கிடந்தது. இப்போது மருந்துக்கென்றாலும் ஒரு மரம் அங்கிருப்பதாய் தெரியவில்லை.

என் விழிகள் ஏமாற்றத்தில் சோர்ந்து போய்விட்டன. தாழ்ந்துவிட்ட பார்வையில் அந்தச் சாம்பல் குளத்தில் மலர்ந்திருந்த கமல மலர்கள் மீண்டும் என்னை உற்சாகப்படுத்தின. நான் மகிழும் பூவாகினேன்.

கொஞ்சத் தூரம் இன்னும் நடக்கிறேன். எதிரே குளத்துக் கட்டில், குளித்து முடித்துவிட்டு ஒரு பெண் மேலேறி வருகின்றாள். சீலையை முறுக்கி இரு கைகளிலும் பிடித்துக்கொண்டு முடிக்கற்றையை உதறினாள். தூவானம் மாதிரி என் பக்கமும் தண்ணீர் தெறித்தது.

நான் மறுபக்க ஓரம் நடக்கிறேன். ஆண்கள் குளிக்கும் பக்கம், கல்லின் மேல் ஒரு கிழவர் இருந்துகொண்டு, குளிக்குமுன் உடலை உஷ்ணமேற்றிக்கொள்வதற்காக்கும்... சுருட்டுப் பிடிக்கிறார். குபு குபுவென்று வெளியே புகையை விடுகிறார். பொச்சுச் சுருட்டை முன் பற்களால் நன்னிவிட்டு அதைத் துப்பினார். பின்பு பத்திரமாகக் குறைச் சுருட்டைக் கல்லின் மேல் வைத்துவிட்டு, கோவணத்துடன் தண்ணீரில் இறங்கினார். இப்போது கனைத்துக் காறித் துப்பிக்கொண்டு நீரினுள் உடலை அமுக்கி எழுந்தவாறு முழுகத் தொடங்கினார்.

கொஞ்சத் தூரம் போய் நின்று இதையெல்லாம் பார்த்துக் கழித்துவிட்டு இன்னும் சிறுநடை நடக்க... கலங்கலில்லாத தண்ணீர்க் கரையில் நின்றுகொண்டு ஒரு சிறுவன் தூண்டில் போட்டு மீன் பிடிக்கிறான். அப்படி மீன் பிடிப்பதிலே எனக்குக் கொள்ளை ஆசையுண்டு. அந்தக் கட்டிலிருந்து கீழிறங்கி அவனிடம் போகப் படிகள் இல்லை.

'சப்பாத்துக் கால் சறுக்குமோ? சிறுவயதிலிருந்தே இதெல்லாம் எனக்குப் பழக்கம்... என்றாலும் இப்போதைய என் வயதுக்கு?'

அதையும் நான் பெரிதாக நினைக்கவில்லை. கட்டிலிருந்து கீழே இறங்கிவிட்டேன்.

"தம்பி! நான் பிடித்துத் தரவா?"

தூண்டிலும் கையுமாக நின்ற சிறுவன் என்னைக் கீழும் மேலுமாகப் பார்க்கிறான். என் உடை, நடை, பேச்சு அவனுக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. ஒன்றுமே பேசாது தூண்டில் கோலை என்னிடம் கொடுத்துவிட்டான். குட்டையான அந்தத் தடி அவன் வயதுக்குச் சரி... எனக்குப் பொருந்தவில்லை. என்றாலும் நான் அதைக் கொண்டு வீசினேன். மிதப்புக் கட்டை கணக்கான தூரத்தில் தண்ணீரின் மேல் விழுந்தது. விட்டுவிட்டு மிதப்புக்கட்டை தண்ணீரில் தாழ, சுண்டி வெளியே ஒரு இழுவை.

"அப்பிடீல்லை... மேல சுண்டி இழுங்கோ..."

அவன் சொன்னான். அது மாதிரியே அடுத்த முறை இழுத்துப் போட்டதில் மீனும் துடிதுடித்தபடி வந்து தரையில் விழுந்தது. மீன் வாயில் கொழுவியிருந்த கொக்கியைக் கழற்றி, மீனை ஒரு ஷொப்பிங் பையில் அவன் போட்டான். தகர டப்பாவிலிருந்து புழு ஒன்றை எடுத்துக் கொக்கியில் பிடித்து தகுந்த வகையில் செருகிவிட்டான். தண்ணீரில் மீண்டும் அதை வீசிவிட்டு மிதப்புக்கட்டையை ஜாக்கிரதையாய் பார்த்துக்கொண்டு அவனுடன் பேச்சுக் கொடுத்தேன்.

"மீனைச் சொதி வைப்பீங்களா?"

"குழம்புதான் வைப்பம்..."

இதற்குள் தூண்டிலை இழுத்தேன். மீண்டும் ஒரு சிறுமீன். அதையும் பையில் கழற்றிப் போட்டுவிட்டு அவன் புழுவை எடுத்துக் கொக்கியில் செருகினான்.

"ஊசியைக் கண்டா நாக்கிளிப் புழு முகத்தைத் திருப்புது..."

அவன் அந்தக் கொக்கியின் மீதே கண்ணாயிருந்துகொண்டு எனக்கு இதைச் சொன்னான். நான் தூண்டிலை வீசிய தடவையெல்லாம் வீண் போகவில்லை. பொட்டும் பொடியுமான மீன் அகப்பட்டாலும், என் கைராசியாக்கும் அவனுக்கு நிறைய மீன் கிடைத்தது. வெயில் சுரீர் என்று உறைத்தது. மண்டை வெடிப்பது போலிருந்தது. என் காற்சட்டைப் பையிலிருந்து இருபது ரூபாய்த் தாளை எடுத்து அவன் கையில் கொடுத்தேன். அவன் வாங்கிக்கொண்டு சிரித்தான்.

மீண்டும் குளக்கட்டிலேறி நடக்கையிலே... அங்கே முன்பு குளித்துக்கொண்டிருந்த கிழவர் நடந்து போய்க்கொண்டிருந்தார். அவரும் என்னைப் பார்த்தார். என்னுடன் கதைக்க விரும்புகிறவர் மாதிரி எனக்குத் தெரிந்தார்.

"இந்தக் குளம் தூர்ந்து போகிற மாதிரித் தெரியுது... உள்ளேயும் துப்புரவாக்கி, கட்டையும் கொஞ்சம் மண் போட்டு உயர்த்தினால் எப்படி..?" நான் சொல்ல ஓரிருமுறை காறிப் பாதையின் ஓரமாக எச்சிலைத் துப்பிவிட்டு அவர் சொன்னார்,

"அப்பிடிச் செய்யேலாது. கட்டை உயர்த்தினா அங்காலைப் பக்க வீடெல்லாம் தண்ணீரில தாழும்..."

அவர் சொல்ல ஒரு முறை அந்தப் பக்கம் பார்த்தேன். அது உண்மைதானென்று நானும் உணர்ந்துகொண்டேன். மீண்டும் அவர் தொடர்ந்தார்.

"சிறுபோகத்துக்குத் தண்ணீர் திறந்துவிட்டதால, குளத்திலயும் தண்ணீர் வத்துது... எங்கள மாதிரி வசதியில்லாத ஆட்களுக்குக் குளிக்கிறதுக்கும் கஷ்டம்...". அவர் மெதுவாக நடந்து வந்தார். அவரை விட்டுவிட்டு நான் விரைவாக நடக்கத் தொடங்கினேன். குளத்துத் தொங்கலிலே, தண்ணீருக்குள் நின்று தலைகாட்டுகிற மருதடிப் பக்கமாகக் கொஞ்சம் போலப் பெடிப்பயல்கள் நின்றுகொண்டு கும்மாளமிட்டுக் கொண்டு நீச்சலடிக்கிறார்கள். ஒவ்வொருவரும் இவ்விரண்டு பிளாஸ்டிக் போத்தல்களைச் சிறிய கயிற்றுத் துண்டின் இரு பக்கங்களிலும் கட்டி, இடையில் பிடித்துக்கொண்டு கையைக் காலை அடித்துத் தண்ணீரில் நீச்சல் பழகுகிறார்கள்.

அவர்களைத் தண்ணீருக்குள் தாழவிடாமல் அந்தப் பிளாஸ்டிக் போத்தலின் உள்ளேயிருக்கும் காற்று மிதக்க வைத்துக்கொண்டிருந்தது.

"எல்லாமே பிளாஸ்டிக் உலகம்..." நான் இதை வேதனையுடன் நினைவு படுத்திக் கொண்டே குளக்கட்டிலிருந்து இறங்கி, வலப் பக்கமாகப் போகும் வீதியில் நடக்கத் தொடங்கினேன். நெற்பயிரெல்லாம் அழகாகத் தெரிந்தன. அந்த அழகெல்லாம் சேர்ந்து அவ்விடத்தில் குளிர் வாசனையடித்தது. இதனால் அந்த நெற்கழனிகளைத் தாண்டி வீட்டிற்கு வந்து சேர எனக்குக் கனநேரமாகியது.

இரவுச் சாப்பாடு முடிந்ததும் நான் அண்ணனுக்கு உலாப் போனதுபற்றி ஒன்று விடாமல் சொன்னேன். நான் ரசித்த காட்சி என்ற புத்தகம் படிப்பது போல் அத்தனையும் சுவைபடச் சொன்னேன். அசுவாரசியமாக அவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார் அண்ணா. குளத்தடி வீடுகளைப்பற்றிக் கதை வந்ததும், "அங்கிருக்கும் யாராவது தங்கள் காணி வீட்டை விற்றால் வாங்கிவிட வேண்டும்..." என்றார்.

நான் நினைப்பதொன்று, அவர் நினைப்பது வேறொன்றாக இருந்தது. நான் பேசாது இருந்து விட்டேன். அதற்குப் பிறகு கதையை அவர்தான் ஆரம்பித்தார்.

தனது இரும்புக் கடை வியாபாரம், பழைய இரும்புகளைக் கொள்வனவு செய்து விற்பதில் கிடைக்கின்ற லாபம் என இரும்புக் கதைகளாகவே விரிந்தது. அவருடைய ரசனையில் அவர் உருகிக்கொண்டிருந்தார். அவருடைய இரும்பு உலகத்தினுள் நுழைய முடியாத ஒரு மனிதனாக நான் நின்று தவித்துக்கொண்டிருந்தேன். என் நிலையை அவர் அறியார் என்பது எனக்கு நிறையவே விளங்கிற்று. என்றாலும், அவர் சொல்வதையெல்லாம் கேட்பது போல் பாசாங்குசெய்து, கோழித் தூக்கம் போட்டேன்.

---

# "சமாதானக் கதவுகளுக்கப்பால்..."

"சேர்! அவங்க சொல்ற மாதிரி ஏதுமில்லை..."

"எதைக் காரணமாகக்கொண்டு சொல்றீங்க?"

பளிச்சென்று நேர் வார்த்தைகளைப் புரிந்து கொண்டாலும் பட்டென்று பதில் சொல்வதற்குச் சங்கடமாக இருந்தது.

"நீங்க பொதுவானவர் என்பதால, நாங்களும் ஒரு நம்பிக்கையில..."

"எதையும் மறைக்காமல் தெரிந்த உண்மைகளைத் தைரியமாகச் சொல்லலாம். இந்த விஷயத்தில பலாத்காரமோ, அல்லது மிரட்டல்களோ ஏற்படாதவாறு நான் துணையிருப்பேன்."

சிறு நம்பிக்கையின் பின்னர், வழக்கத்தையும் மீறி, கூட்டத்தினர் நெருக்கிக்கொண்டு அருகே செல்வதற்கு முயற்சித்தனர். உடன் பாதுகாப்பிற்கென வந்திருந்தவர்கள் குறுக்கிட்டுத் தடுத்திட, சகலதையும் அவதானித்துக் கொண்டவர் 'எவரையும் தடுக்க வேண்டாம்' எனச் சைகையால் கட்டளையிட, தடுக்க வந்தவர்கள் விலகிக்கொண்டு, கவனிப்பில் வேகத்தைக் காட்டினர். நீண்ட காலத்தின் பின் அப்படியொரு நிகழ்வு அப் பிரதேச மக்களுக்கு ஏற்பட்டதில் உள்ளூர ஏகப்பட்ட மகிழ்ச்சி.

"அவதானித்த வகையில் இழப்புக்கள் என்பது இருவருக்கும்தான். நான் மதத்தினால் வேறு பட்டிருந்தாலும், மக்களின் துன்ப துயரங்களைப் புரிந்துகொள்ளக் கூடிய மனச்சாட்சி உள்ளவன். இங்கே ஒருசாராரின் கைகள் மாத்திரம்தான் ஓங்கிக் காணப்படுகின்றது. அதனால், நியாயம் கிடைக்காது என்ற கற்பனையெல்லாம் தேவையில்லை..."

மௌனமாகக் குழுமியிருந்தவர்களை சற்று ஆழமாக நோட்டமிட்டார், அவர்களின் உள்ளத்தை வெற்றிகொண்ட பெருமிதத்தில்,

"என்னை உங்கள் சகோதரனாக, நண்பனாக நினைச்சுச் சொல்லுங்க..."

பலரும் முண்டியடித்துக்கொண்டு அவசரப்பட்டமையினால், அவ்விடத்தில் இரைச்சல்களுடன் பரபரப்பே மிகைத்திருந்தது.

"பயப்படாதீங்க... மற்றவர்களை மாதிரி நான் அவசரப்பட்டுப் போகமாட்டேன். ஆறுதலாக இருந்து பிரச்சனைகளை அறிந்து, நல்லதான தீர்வை ஏற்படுத்திவிட்டே போவேன்... இது உறுதி!"

மீண்டும் பழைய நிலைமைகள்தான்.

"அவசரப்படாதீங்க... முதல்ல உங்கள் பிரச்சனை... எல்லோரும் ஒரே நேரத்தில... எனக்கு எதுவுமே சரியா... ஒவ்வொருத்தராக... முதல்ல கொஞ்சம் அமைதியாக இருங்க..."

நீண்ட சிரமத்தின் பின்னர் அவ்விடம் சற்று அமைதியானது. எதிரே நின்ற வயது முதிர்ந்த பெண்ணொருவரை அருகே அழைத்தார்.

"நாங்களெல்லாம் நல்லாத் தூங்கிக் கொண்டிருந்தோம். நேரம் சரியாத் தெரியேல்லை... அடிக்கிற மாதிரியும்... ஆட்கள் ஓடுறமாதிரியும் எல்லாப் பக்கத்தாலும் கேட்டுது... டக்கென்று பயத்தினால் வெளியே வரவில்லை. நெருப்பு வைச்சுக் கொண்டு வாறாங்க... எல்லோரும் ஓடித்தப்புங்க... என்ற குரல் கேட்டதும். அப்பிடியே போட்டது போட்டபடி பின்பக்க 'செத்தை' யைப் பிரிச்சுக்கொண்டு எல்லைப் புறத்திலிருந்து ஊர்ப்பக்கமாக ஓடினோம்..."

"ஓடும் போது யாராவது விரட்டிக் கொண்டு வாற மாதிரி...?"

"அந்த அவசரத்தில எதையும் கண்டு கொள்ள முடியேல்லை சேர்... தவிர எங்கும் கும்மென்ற இருட்டு வேற..."

வன்செயலில ஈடுபட்டவர்களைக் கண்டவர்கள் யாராவது...?"

"........"

சிறிது நேரம் ஏற்பட்ட மௌனத்தின் பின்னர், அவர் அழைத்து வந்த ஊடகவியலாளர்களை நோட்டமிட்டார். அவர்கள் அவசரமாகக் குறிப்பெடுத்துக்கொண்டிருந்தார்கள். "உங்களுக்கு ஆதரவான குரல் கேட்டுத்தான் பாதுகாப்புத் தேடி ஓடினீங்க... ஒருவேளை குழப்ப வேண்டும் என்று யாராவது விசமிகள் அப்படிச் செய்திருந்தால்...?"

"கடைசியா அவங்கட பக்கமிருந்த நாலைந்து பேரைக் காணவில்லையென்று இந்தப் பக்கத்தால தேடி வந்தாங்க... நான் பார்த்தேன்..."

சொன்னவரின் மீது அனைவரினதும் பார்வைகள் லயித்தன.

"வந்தவர்களை அடையாளம் காட்ட முடியுமா? அவர்கள்தான் குழப்பம் செய்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் ஏதும்..."

"........"

"நீங்க தைரியமாக முன்வந்து நடந்த உண்மைகளைச் சொன்னால்தான் என்னால் முறையான நடவடிக்கைகளை எடுக்க முடியும்... எந்த ஆயுதக் குழுக்களுக்கோ, அடாவடித்தனம் புரிந்தவர்களுக்கோ யாரும் பயப்படத் தேவையில்லை. சகலதுக்கும் நான் பொறுப்பு நிற்பேன். நீதியான செயற்பாடுகள்தான் எனக்கு வேண்டும்..."

அவர் பேச்சின் தெளிவும், உறுதியும், அங்கிருந்தவர்களுக்குச் சற்றுத் தைரியத்தைக் கொடுத்தது.

"மற்றத் தரப்பாருடன் பேசிவிட்டுத்தான் இங்கு வந்திருக்கிறோம். இனிமேல் எந்தச் சேட்டைகளுக்கும் இடமில்லாதவாறு சகலரும் இணைந்ததான, முறையான புரிந்துணர்வுக்கு உடன் வழியமைக்க வேண்டும்..."

"வீடுகளை எரிக்கும் போது தூரத்திலிருந்து பார்த்தேன்... சரியான வெளிச்சமில்லாததால் முகத்தை அடையாளப் படுத்த முடியவில்லை..."

"நாங்கள் கொழும்பிலிருந்து சேரோட ஏற்பாட்டிற்கு அமைவாகக் கூடவே வந்திருக்கிறோம். ரெண்டு பக்கமும் பலத்த சேதங்கள்தான். யாருக்கும் யாரையும் சரியாக அடையாளம் கூறத் தெரியவில்லை. ஆனால், இதற்கெல்லாம் ஒரு ஆரம்பம் இருக்கு. அதில் நிச்சயம் ஒருத்தர் அல்லது பலர் சம்பந்தப்பட்டிருப்பார்கள். நல்லா யோசித்துப் பாருங்க..." கூட வந்திருந்த பத்திரிகையாளர்களுள் மூத்தவர் சொன்ன விஷயம் யதார்த்தமாகவே இருந்தது.

"அதைச் சம்பந்தப்பட்டவர்களே பார்த்திருக்கலாமே... வீணாக ஏன் மற்றவர்களும்..."

"அப்பிடியில்லைசேர்! தேவையில்லாத தகவல்களைக் கொடுத்து எங்கட ஆட்களுக்கு வீணாக அடித்து..."

முடிவுறாத அந்த வார்த்தைகளின் பின்னால் மர்மம் இருப்பதை அனைவரும் உணர்ந்துகொண்டனர். தான் ஒரு முக்கியஸ்தர் என்பதை ஒதுக்கி, நட்புடன் எதிரே நின்றவர் தோள்களில் கை வைத்து,

"யார் அடிச்சாங்க..? நான் இருக்கேன். தைரியமாச் சொல்லுங்க..?"

"வீணாக எங்களுக்கு அடிச்சதும், அவங்களை ஏவிவிட்டு இதையெல்லாம் செய்ததும், நாங்க உண்மையை முறை



தி. இளையவன், திருகோணமலை

"........"

"நோ... இதை நான் நம்பவே மாட்டேன். ஆரம்பப் பிரச்சனை உங்களுக்குத் தெரியும். தைரியமாச் சொல்லுங்க..."

"நான் சொல்றேன் சேர்..." அனைவரையும் தள்ளிக் கொண்டு வயதான ஒருவர் முன் வந்தார்.

"சேர்! அவங்கட மாடுகள் எங்கட பயிர் பச்சைகளைத் தின்பதும், நாங்கள் அதைப் பிடித்துக் கட்டுவதும், பின்னர் அவர்கள் தேடிவந்து விஷயத்தை அறிந்து தக்க ஏற்பாடுகளைச் செய்து தங்கட மாடுகளை அவிழ்த்துக்கொண்டு போவதும் வழக்கமானது. நாலு நாளைக்கு முன்னரும் அப்பிடித்தான் நடந்தது. ஆனால், எங்கட ஆட்கள் பிடித்துக் கட்டி வைத்த மாடுகளை அன்று இரவே யாரோ களவாணிப் பயல் எடுத்துக்கிட்டுப் போயிட்டான். உடனே அதற்கு வழியில்லாமல் போனதும், அதனால வாய்த் தர்க்கம் வளர்ந்து, இறுதியாக இப்படி..."

"அக்கிரமங்களும், அநியாயங்களும் அதிகமாகிப் போனதால்தான் எங்கட ஆட்களும் விளைவுகளைப் பற்றி யோசிக்காமல்..."

எவ்விதமான எதிர்ப்புக்களோ, சலசலப்புக்களோ இல்லாமையினால் பிரச்சனையின் அத்திவாரத்தைச் சகலரும் அறிந்துகொண்டனர். முடிவெடுக்க வேண்டிய பொறுப்பில், சிக்கலான நிலையில் 'அவர்'.

"யாராயிருந்தாலும் சரியே... அடக்குமுறைகளும், அநியாயங்களும், அடாவடித்தனங்களும் நிறுத்தப்பட வேண்டியதே... சம்பந்தப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுச் சட்டத்தின் முன் நிறுத்தப்படல் வேண்டும். எதற்கும் யாரும் பயப்படத் தேவையில்லை. சகலதுக்கும் நானே பொறுப்பு. ஆக வேண்டியவை கண்டிப்பாக நடக்கும். உங்களுக்கு ஏற்பட்ட நட்டத்திற்கான இழப்பீடுகள் ஒரு மாதத்திற்குள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வேன். இனிமேல் .எது நடந்தாலும் தைரியமாக முறையிடுங்கள். இனிமேல் நடப்பவைகள் எல்லாமே நல்லதாகவே நடக்கட்டும்."

மந்திரத்திற்குக் கட்டுப்பட்டவர்கள் போல் அனைத்தையும் செவிமடுத்து சிறியதொரு நம்பிக்கைத் துளியுடன் சலசலத்துக்கொண்டனர்.

"மற்றவர்கள் தரும் வாக்குப் போலில்லை. நீங்கள் தைரியமாகச் செயற்படலாம்... நிச்சயம் உங்களுக்கு இவரால் உதவிகள் கிடைக்கும்." கூடவந்த மூத்த ஊடகவியலாளர் மீண்டும் பேசினார்.

"முதலில் 'அந்த அதிகாரி'யை இடம் மாற்ற வேண்டும்"

ஒருவரிலிருந்து தொடங்கிய அந்தக் கோரிக்கை கண்ணிமைக்கும் நேரத்தில் பலத்த கோஷமாக ஒலிக்கத் தொடங்கியது.

மக்களின் இறுதி முடிவையுணர்ந்து கொண்டவர், உடன் வந்திருந்த தனக்கு வேண்டப்பட்டவர்களுடன் தனிமையில்...

"சரி... நீங்க சொல்றபடியே நடக்கும். ஆனால், எனக்கு ரெண்டு கிழமை 'ரைம்' தரவேண்டும்..."

சந்தோஷத்தில் கூச்சலிட்டுக் குதூகலித்துக் கொள்ள ஊடகவியலாளர்களும் புன்னகைத்துக் கொண்டனர்.

மறுநாள் செய்திப் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும், வானொலிகளிலும் தலைப்புச் செய்தியாக அச் சாதனை புகழப்பட்டது.

ஆனால், இரண்டு வாரங்களின் பின்னர் சம்பந்தப்பட்ட 'அந்த அதிகாரி' இடமாற்றம் பெற்றிருந்தார். அவரினால் பாதிக்கப்பட்டவர்கள் எவருமே அறிந்துகொள்ள முடியாத மாவட்ட அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்ட பதவி உயர்வுடன்.

யிடச் சென்றதும், சாட்டுக்காகக் கேட்டுப் பின்னர் பொருட்படுத்தாமல் விட்டதும் யாரென்று கண்டிப்பாக நீங்களும் அறிஞ்சுகொள்ளத்தான் வேணும் சேர்!"

மறு வார்த்தைக்கு இடைவெளி கொடுத்துச் சுற்றி நின்றவர்களை ஏறிட்டார். அனைவரும் மௌனமாக நிற்க, தொடர்ந்தார்.

"சேர்... நீங்க 'அந்த அதிகாரி'யை மாத்திரம்... 'அவர்' இல்லாவிட்டால் எப்பவுமே இங்கே பிரச்சனை இருக்காது. எல்லாம் 'அவர்' வந்த பிறகுதான் நிலைமை மோசமாயிருக்கு..."

எதிர்பாராத வகையில் 'அவர்' பெயர் அங்கு அடிபட்டதும், 'அவர்' சற்றுத் தடுமாறிப் போனார். ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் குறிப்பெடுத்துக்கொண்டிருந்தார்கள். மிகவும் தேவைப்பட்டவருக்கு எதிராக எப்படி...?

# ஒரு கைதியின் கதை

## 19

எழுதுவது

சபா

“யாருடன் பார்த்தேன் என்று சொல்லவில்லையே!”

“இந்தக் கழுதையுடனா?”

“வேண்டாம், அபிதா! இப் போது எதுவும் பேச வேண் டாம்...” என்றான் சந்திர மோகன்.

“இவள் பெயருக்கு கெஸ்ட் ஹவுஸை வாங்கிக் கொடுத்தி ருக்கும் பத்திரங்களில் எல்லாம் உங்களைப் போலவே சந்திர மோகன் கையெழுத்துப் போட்டி ருக்கிறான் என்று சொல்லப் போறீங்களாப்பா?”

“அபிதா! இவன் உன்னை ரொம்பக் குழப்பியிருக்கிறான் என்று நினைக்கிறேன். எல்லா வற்றுக்கும் என்னால் விளக்கம் தர முடியும்... வா முதலில் இங்கிருந்து போகலாம்... இவன் உன்னைக் கடத்தி வைத்து என்னை மிரட்டிச் சில காரியங் களைச் சாதித்துக் கொண்டான். வற்புறுத்தி மிரட்டி உயிர்ப் பயம் காட்டி அச்சுறுத்தி இவன் செய்த செயல்கள் செல்லாது என்று சட்டம் சொல்வது இவனுக்குத் தெரியாது...”


“மே ஐ கம் இன்?” என்ற குரல் கேட்டு அனைவரும் திரும்பினர்.

கிருஷ்ணதாஸ்!

அவரைப் பார்த்ததும் சந்திர மோகன் ஒரே பாய்ச்சலாக சோபா வின் பின்னே தாவினான்.

காதம்பரி மிரண்டு எழுந்தாள்.

“ராஸ்க்கல்... நீ எங்கே போனாலும் இன்று உன்னை விடப் போவ தில்லை...” என்று கிருஷ்ணதாஸ் உறுமினார்.



கையில் துப்பாக்கியை எடுத் தார்.

“கிருஷ்ணா சார். வேண்டாம். வேண்டாம்...” என்று பரமேஷ்வர் பதறினார்.

“நீ பேசாமல் இருய்யா...” என் றார் கிருஷ்ணதாஸ் மிரட்டலாக. “நீ கண்டவளோடு கூத்தடித்து காஸெட் எடுத்ததால்தானே இந்தப் பயலை நான் முதலில் விடுவிக்க வேண்டி வந்தது? அதற்கப்புறம் என்னென்ன நடந்து விட்டது பார்த்தாயா? டேய் எழுந்திருடா...”

கிருஷ்ணதாஸ் ரிவால்வர் முனையை மேலும் கீழுமாக ஆட்டி னார்.

சோபாவில் அமர்ந்திருந்த காதம் பரி அச்சத்தில் தப்பான காரியம் செய்தாள். துப்பாக்கி முனை பார்த்த திசையில் அவள் இருக் கக்கூடாது என்ற பதைப்பில் துப்பாக் கிக்கு நேரே கையை வீசி வீசி ஆட் டிக் கொண்டே “வேண்டாம் வேண் டாம்” என்று ஆட்டிக் கொண்டு வந் தாள்.

கிருஷ்ணதாஸ் பதறினார். சந்திர மோகனுக்கு அவளும் உடந்தை என்ப தால் தான் பரமேஷ்வர் பற்றி காஸெட் எடுக்க முடிந்தது. அதே காரணத் திற்காகத்தான் இந்த இடத்திற்கு பொலி ஸைக் கூப்பிட்டு சரணடையத் திட்டம் வைத்திருக்கிறான் என்று அவர் முழுமையாக நம்பினார். அதனால் சந்திரமோகனைக் காப்பாற்று வதற்காக அவர் கவனத்தைத் திசை திருப்பவே அவள் அப்படி ஓடி வருகிறாள் என்று அவர் நினைத்து விட்டார்.

வேகம், அவசரம், பதற்றம் எல்லாமாகச் சேர்ந்து கொண்டன.

கூடவே தோற்றுப் போய்விடக்கூடாது என்ற பரபரப்பும் தொற்றிக் கொள்ள எந்த யோசனையும் செய்யாமல் ரிவால்வரின் விசையை இழுத்து விட்டார்.

குபுக் என்று தோட்டா விடுபட்டது. அடுத்த நொடி... காதம்பரி பிரேக் அடித்தது போல் நின்றாள். அவள் விழிகள் பெரிதாய் விரிந்தன. ரவிக்கையையும், புடவையையும் மீறி நெஞ்சுப் பகுதியில் சிகப்பாய் ரத்தப் பூ பூத்தது.

அப்படியே கீழே அவள் சரிந் தாள்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதும், கிருஷ்ணதாஸின் அடியாட்கள் உடனே அங்கு பிரசன்னமாயினர்.

கிருஷ்ணதாஸ் அலட்சியமாக அவர்களை விலகச் சொன்னார்- ரிவால்வரை ஆட்டி.

உடனே அவர்கள் புகை போல் மறைந்தார்கள்.

காதம்பரி கண்ணெதிரே சுருண்டு விழுந்ததைப் பார்த்ததும்-

அபிதா அரண்டு போனாள்.

பரமேஷ்வர் பாய்ந்து அவளை ஒரு மறைவிடத்திற்குத் தள்ளினார்.

கிருஷ்ணதாஸ் இரண்டடி எடுத்து வைத்து சந்திரமோகனை நெருங்கி விட்ட நிலையில்,

அபிதா தன் அப்பாவை உத றிவிட்டு அவரிடமிருந்து ஒரே திமிற லாகத் திமிறித் தப்பித்து, கிருஷ்ண தாஸின் மீது பின்புறமிருந்து பாய்ந்தாள்.

அபிதா பாய்ந்த வேகத்தில் கிருஷ் ணதாஸ் குப்புற விழுந்தார். அவர் கையிலிருந்த ரிவால்வர் எகி றியது. வழுக்கி சோபாவுக்கு அடியில் சென்று மறைந்தது.

சந்திரமோகன் தாவிக் குதித்து கிருஷ்ணதாஸின் அருகில் வந்து இறங்கினான்.

அவர் காலரைப் பிடித்து நிமிர்த்தினான். அவன் கண்களில் அனல் பறந்தது.

“அன்றைக்கு மல்லையாவை என் கண்ணெதிரில் கொன்றீர்கள்... இன் றைக்குக் காதம்பரியை... மனித உயிர்கள் உங்களுக்கு அவ்வளவு மலிவாகப் போய்விட்டதா?”

நடப்பதையெல்லாம் பார்த்துப் பரமேஷ்வர் கலவரம் அடைந்தார். அவசரம் அவசர மாக வாசல் கதவைச் சாத்தி இரண்டு தாழ்ப்பாள்களையும் போட்டார்.

“இன்னும் உங்கள் புத்தி மாறவில்லை. சென்ற முறை கொலை செய்து தப்பி விட் டீர்கள்...இந்த முறை பொலிஸ் வரும்போது நீங்கள் தப்ப நான் விடப் போவதில்லை...” சந்திர மோகன் கிருஷ்ணதாஸின் இரு கைகளையும் முறிப்பது போல் புரட்டி முதுகுப் பக்கம் வைத்துக் கட்டப் பார்த்தான்.

கிருஷ்ணதாஸ் திமிறித் திரும்பினார். அவர் வயதுக்கு அபார வேகம். திரும்பிய வேகத்தில் அவர் கையில் கூர்க் கத்தி இடம் பெற்றி ருந்தது. அதை அவர் வீசிப் பாய்ச்சினார்.

மிகக் கடைசித் தருணத்தில் சந்திரமோகன் தன் முகத்தைப் பின்னுக்கு இழுத்துக் கொண்ட போதிலும் கத்தியின் கூர் முனை அவனுடைய முகவாயில் ஒரு நீளமான கீறல் போட்டது.

“உன் முகத்தை துண்டம் துண்டமாகக் கிழிக்காமல் விட மாட்டேன்.”

கிருஷ்ணதாஸ் கத்தியை மறுபடி வீசினார்.

சந்திரமோகன் கழுத்தை மில்லி மீட்டர் இடைவெளியில் கத்தி தவற விட்டது.

சந்திரமோகனின் கைகளை அவர் அழுத்திப் பிடித்திருந்த வேகத்தில் அவன் கண்களில் முதன் முறையாக ஒரு அச்சம் வந்தது. அவன் திமிறினால் நிச்சயம் அவரு டைய கத்தி அவன் முகத்தைச் சிதைத்து விடும் அபாயம் இருந்தது.

சந்திரமோகன் சரேலென அவரை நெம்பித் தள்ளப்பார்க்க.

கிருஷ்ணதாஸ் அதிக ஆத்திரத் துடன் கத்தியை முழு வேகத்தில் அவன் மீது செலுத்த முயற்சி செய்து கையை ஓங்க-

ரிவால்வர் வெடித்தது.

கிருஷ்ணதாஸின் ஓங்கிய கை ஓங்கியபடி நின்று போனது. அவர் கையிலிருந்த கத்தி விரல்களிலிருந்து பிடிப்பு இழந்து நழுவியது. அவருடைய வெறித்த விழிகளில் ஒரு திடுக்கிடல் தெரிந்தது.

கழுத்தின் பக்கவாட்டிலிருந்து ரத்தம் குமுறி வந்தது.

சந்திரமோகன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

கிருஷ்ணதாஸின் கையிலிருந்து விடுபட்டு சோபாவுக்கடியில் ஓடி யிருந்த துப்பாக்கியை இரண்டு கைகளாலும் பிடித்து நின்றிருந்தாள் அபிதா.

சந்திரமோகன் கிருஷ்ணதாஸைப் புரட்டி விட்டு எழுந்தான்.

“என்ன காரியம் செய்தாய் அபிதா!” என்று பரமேஸ்வர் அலறிக்கொண்டு அவளை நெருங் கிய நேரம் சந்திரமோகன் மறுபுற மிருந்து அவள் மீது மோதினான்.

அபிதாவின் கையிலிருந்த ரிவால்வரை சந்திரமோகன் பறித் தான். சட்டை நுனியால் அதில் பதித்திருந்த கைரேகைகளை அவன் துடைத்தான்.

வாசல் கதவு படபடவென்று தட்டப்பட்டது.

சந்திரமோகன், பரமேஷ்வரையும் அபிதாவையும் இழுத்துக்கொண்டு அடுத்த அறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டபின்,

கிருஷ்ணதாஸைச் சுட்ட துப்பாக் கியை இரு கைகளாலும் பற்றி அதை பரமேஷ்வரின் நெஞ்சுக்கு நேரே உயர்த்தினான்.

(அடுத்த வாரம் கைதியின் கதை முற்றும்)

# ஆறு மனமே ஆறு!

## மணமாகாமல் குழந்தை-4

கமலாவின் கூற்றிலிருந்து அவள் விரக்தியின் விளிம் பில் வாழ்க்கை நடத்தினாள் என்பதும், எதற்கும் தயாராகத் தன்னை மாற்றிக் கொண்டாள் என்பதும் தெரிந்தது.

கமலாவுக்குக் குழந்தை கிடைக்கும் வரையும், குழந்தை கிடைத்து மூன்று மாதம்வரையும்தான் கஸ்டங்களை அனுபவித்துள்ளாளே தவிர அதன் பின்பு பொருளாதார கஸ்டம் இருந்ததாகத் தெரியவில்லை.

பிற்பகல் 6.00 மணியாகி விட்டதால் அன்றைய அமர்வை அத்துடன் நிறுத்தி எமது அலவலகத்தில் பெண்கள் தங்கும் அறையில் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து பொறுப்பாக உள்ளவரிடம் ஒப் படைத்தேன்.



அடுத்த நாள் காலை 8.30 மணிக்கு மீண்டும் கமலாவை ஆற்றுப்படுத்தல் மையத்திற்கு அழைத்திருந்தேன். முதல் நாள் கமலாவிடம் காணப்பட்ட சோர்வு, பதற்றம் இன்று தென்படவில்லை. தன்னை அழகுபடுத்தியிருந்தாள்.

“கமலா! நீங்கள் மண்டப முகா மிலிருந்து மதுரை மாவட்டத்திலுள்ள முகாமிற்கு வந்த பிறகு உங்கள் அக் காவோ அத்தானோ தேடிவரவில்லையா?” என்று பேச்சை ஆரம்பித்தேன்.

“ஒரு தரம் மட்டும் அக்காவுடைய புருஷன் வந்தார். ஆயிரம்ரூபா எனக்குக் கொடுத்து என்னை மன்னித்து விடு கடைசிவரையும் நடந்ததை யாரிடமும் கூறிவிடாதே என்று சொல்லிவிட்டுப் போனவர்தான். இதுவரை சந்திக்க வில்லை” என்று சொன்னாள் கமலா.

“நீங்கள் இருக்கும் முகாமில் உங் களைப் பதிவு செய்து விட்டீர்களா? கியூ பிரிவு மற்றும் முகாம் பொலிஸ் காரர்களை எப்படிச் சமாளித்தீர்கள்” என்று கேட்டேன்.

“தாசில்தார் அலுவலகத்தில் வேலை செய்யும் எமது முகாமுக்குச் சம்பளம் போடுகிற ரகுபதி சாரும், கியூ பிரிவில் எமது முகாமில் வேலை செய்யும் சங் கர் சாரும், முகாம் பொலிஸார் கண்ணன் சாரும் எனக்கு உதவினார்கள். எனக்குத் தேவையானவற்றை அவரிடம் பலதடவை பெற்றுள்ளேன்” என்றாள் கமலா.

(கமலா பற்றி வெளியில் விபரம் சேகரிக்கும் போது கமலாவுக்கு அதிகா ரிகளுடன் தவறான தொடர்புகள் இருந்த தாகத் தகவல்கள் கிடைத்திருந்தன.)

“கமலா! நீங்கள் சில முகாம் அதிகா ரிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்தி ருந்தீர்கள் என்று நான் அறிந்தது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்” என்று மெதுவாகக் கேட்டேன்.

சலனத்துடன் சற்றுத் தலைகுனிந்த கமலா நிமிர்ந்து “உண்மைதான்” என்றாள்.

“அண்ணா” என்று என்னை அழைத்த கமலா தொடர்ந்தாள். “நீங்களே சொல் லுங்கள். தனியாக அகதி முகாமில் வசிக்கும் என்னைப் போன்றவர்களை இந்த அதிகாரிகள் சீண்டிப் பார்ப்பதும், பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள வழி தெரியாமல் அவர்களின் ஆசைக்கு இணங்குவதும் தவிர்க்க முடியாத தாகிவிடுகிறது. இணங்காவிட்டால் அதிகாரத்தைப் பயன்படுத்தி முகாம் பதிவை வெட்டுதல், கொடுப்பனவை நிறுத்தி வைத்தல், ரேஷன் பொருட்களை நிறுத்துதல் அல்லது விசாரணை என்று அடிக்கடி அலுவலகம் அழைப்பது, இப் படிப் பல சிக்கல்களை இந்த முகாம் அதிகாரிகள் செய்வார்கள். உதவியில்லா மல் கைவிடப்பட்ட என்னைப் போன்ற பலர் அகதிகள் முகாமில் இந்திய அதிகா ரிகளின் ஆசைக்குத் தவிர்க்க முடியாத நிலையில் இணங்குகிறார்கள். இந்த நிலையில் நான் என்ன செய்யமுடியும்?”

உண்மைதான். பொதுவாக, தமிழ் நாட்டில் வாழும் இலங்கை அகதிகள் முகாமிலுள்ள அதிகாரிகள், எமது பெண் கள் உடையணியும் முறையாலும், சரள மாகப் பேசிப் பழகுவதாலும், உபசரிப்ப முறையாலும் கவரப்பட்டுத் தவறான கண்ணோட்டத்துடன் எம் பெண்களைச் சீண்டுவதும், இச்சையுடன் பார்ப்பதும், வழிந்து வழிந்து பேசுவதும், பின்னால் அலைவதையும் காணக்கூடியதாக உள்ளது. இதுவும் நமது தலைவிதி.

“சரி கமலா! உங்கள் அகதி முகாம் வாழ்க்கை மிகத் துயரமும், மன அழுத்த மும் நிறைந்ததாகவே இருந்துள்ளதை நினைக்கும் போது மிகக் கவலையடைகி றேன். உங்களுக்கு நடந்த மாதிரி இனி எந்தப் பெண்ணுக்கும் நடக்கக் கூடாது என்று நினைக்கிறேன். இந்தத் தீராத போராட்டமும், அகதி வாழ்க்கையும் எத் தனை ஈழத்துப் பெண்களை அலைக் களித்துச் சின்னாபின்னமாக்கி விட் டது” என்றேன். கமலா தலையாட்டினாள்.

“கமலா! ஐந்து வயதாகும் உங்கள் மகனைப் பாடசாலையில் சேர்த்துவிட் டீர்களா?” என்று கேட்டேன்.

“ஓம், முகாமிலே ‘ஒப்பர்’ என்ற தொண்டு நிறுவனம் நடத்துகிற பாட சாலையில் சேர்த்திருக்கிறேன்” என் றாள்.

### எஸ்.பி.லெம்பட் வங்காலை

அமைதியாக இருந்த கமலாவிடம் “சரி கமலா! உங்கள் முகாமின் பின்னா லிருந்த பற்றைக்குள் நீங்கள் போட்ட உங்கள் சிசு இறந்து பிறந்ததா? பிறந்து இறந்ததா? குழந்தை எத்தனை மணிக்குப் பிறந்தது?” என்று கேட்டேன். கமலா தலை குனிந்தாள்.

“கமலா! கமலா! கமலா!” மூன்று முறை அழைத்த பிறகுதான் கமலா நிமிர்ந்தாள். அழுதாள். முகம் வியர்த்து இருந்தது.

“இவ்வளவும் நடந்து முடிந்துவிட் டது. கடினமான வாழ்க்கைப் பாதையைக் கடந்து வந்து விட்டீர்கள். இனி, ஒரு புதிய வாழ்க்கையை அமைத்துக் கொள் ளும் நோக்கத்துடன் என்னிடம் வந்துள் ளீர்கள். துணிந்து சொல்லுங்கள். மனம் திறந்து பேசுங்கள். உங்கள் பிரச்சனை களை முழுமையாக அறிந்தால்தானே நான் உங்களுக்கு உதவ முடியும்” என்று கமலாவை ஊக்கப்படுத்தினேன்.

தொடர்ந்து வரும்...

## ஏக பிரதிநிதிகளாக நாம் மட்டுமே ஏற்றுக்கொண்டோம்!

## நிலை மாறும் சங்கரியின் தடுமாறும் தத்துவங்கள்!

புலிகள் இயக்கம்தான் தமிழ் பேசும் மக்களின் ஏக பிரதிநிதி. கடந்த தேர்தல் காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக் கட்சிகளுக்கு இதுவே வாய்ப்பாடமாக இருந்தது!

தெருவுக்குத் தெரு, மேடைக்கு மேடை முழங்காதவர்களில்லை! பத்திரிகை அறிக்கைகளுக்கும் குறைச்சல் இருக்கவில்லை! தேர்தல் முடிந்தது! தேவை தீர்ந்தது! வெட்க துக்கம் துறந்து, சகல வழிகளிலும் முயன்று பதவி நாற்காலிகளைப் பிடித்துக் கொண்டனர்.

தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு விட்டனர். புலிகள் இயக்கத்தை ஏக பிரதிநிதியாக அங்கீகரித்து விட்டனர். என்றெல்லாம் தமிழ் கூட்டமைப்புக் கட்சிகள் அனைத்தும் சுருதி பிசகாமல் உரத்துப்பேசிக் கொண்டன! முன்னைய நாட்களில் தாம் புலிகளைத் திட்டித் தீர்த்தமைக்கும், வெட்டிச் சரித்தமைக்கும் பாவ விமோசனம் பெற்றுக்கொண்டன! திடீரென ஐரோப்பிய வானொலி ஒன்றில் கடந்த வாரம் சுருதி மாறி ஒரு குரல் ஒலித்தது. அது வேறு எவரது குரலுமல்ல. அன்றொரு பேச்சும் இன்றொரு பேச்சுமாய் அடிக்கடி நிறம் மாறிக்கொள்ளும் கூட்டணியின் சங்கரியார் குரல்தான்.

நீங்கள் புலிகள் இயக்கத்தை ஏக பிரதிநிதியாக ஏற்றுக்கொள்கிறீர்களா? என்ற கேள்விக்குச் சங்கரி இப்படிப் பதில் கொடுத்திருந்தார்! "நாங்கள் மட்டும்தான் புலிகளை ஏக பிரதிநிதியாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம்! இதை ஏற்றுக்கொள்ளாதவர்களும் இருக்கிறார்கள். மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? இல்லையா? என்பதை மக்களிடம்தான் கேட்கவேண்டும்!"

மக்களின் சார்பாக இருந்து கருத்துக் கூறிய சங்கரி இப்போது மக்களின் கருத்து வேறு! தமது கருத்து வேறு! என்று கதை விட்டிருக்கிறார்! முழுத் தமிழ் இனமும் ஏற்றுக்கொண்டு விட்டதாக முழங்கியவர்கள் இப்போது தமது கூட்டமைப்பு மட்டும்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று கூறிக் குத்துக்கரணம் அடித்திருக்கிறார்! என்ன ஆச்சரியம்! புலிகளின் பெயரைச் சொல்லி வாக்கெடுத்து ஒரு வருடம் கூடத் தாண்டவில்லை. அதற்குள் இப்படியா? என்று பலரும் விசனப்பட்டுக் கொண்டனர். இது புலிகளுக்கு இழைக்கும் துரோகம் என்று ஒரு சாராரும், மக்களுக்கு இழைக்கும் துரோகம் என்று மற்றொரு சாராரும் பேசிக்கொண்டனர்.

சங்கரியைப் பொறுத்த வரை கூட்டணிக்கே துரோகம் இழைத்தவர்! மக்களை விற்போமோ? விடுவோமோ? என்று அடிக்கடி மிடுக்கெடுத்து தத்துவம் பேசும் சங்கரி நிலை மாறி, தடுமாறி உளறித்தள்ளிய வரலாறுகள் ஏராளம்! 83 இல் பாராளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்துப் பதவி துறந்தவர்கள் கூட்டணியினர்! இது விடயமாக 98 இல் சங்கரி விட்ட அறிக்கை சங்கரிக்கே ஞாபமில்லாமல் போகலாம்.

ஆனால் மக்களுக்குத் தெரியும்! 83 இல் தாம் பாராளுமன்றத்தை பகிஷ்கரித்தமை மாபெரும் தவறு என்று சங்கரி வருத்தம் தெரிவித்து அறிக்கை விட்டிருந்தார்! 83 இல் அமிர்தலிங்கத்திற்குப் பதிலாக சங்கரி கூட்டணியின் தலைவராக இருந்திருந்தால் சத்தியப் பிரமாணம் எடுத்து 77 இல் பெற்றுக்கொண்ட தமிழீழ ஆணைக்குத் துரோகம் இழைத்திருப்பாரோ என்னவோ தெரியாது! சங்கரி விட்ட அறிக்கை கூட்டணிக்கு இழைத்த மாபெரும் துரோகம்!

கூட்டணிக்கே துரோகம் இழைத்த சங்கரி புலிகளுக்குத் துரோகம் இழைக்க மாட்டாரா? விரும்பியதைப் பேசிட யாருக்கும் சுதந்திரம் உண்டு! ஆனால் நேரத்திற்கு நேரம் மாறி மாறித் தேவை கருதிக் கருத்துக் கூறுவது கருத்துச் சுதந்திரம் அல்ல.

### ஊடறுப்பான்

புலிகள்தான் ஏக பிரதிநிதிகள் என்று போலிப் புன்னகையோடு புலுடா விட்டபடி வேட்டியை மடித்துக் கொண்டு வோட்டெடுக்க வந்த சங்கரி இப்போது தன் தேவை முடிந்தது என்று தலை கீழாக நிற்பது முறையோ? பொன் விழாக்கண்டு புளித்துப்போன போலி அரசியல்வாதிகள் இவர்கள்! வரலாறு முழுவதும் வடுக்களை ஏந்திக்கொண்டு மக்களின் பெயரால் வயிறு வளர்த்தது போதாதென்று இப்போது புலிகளின் பெயரால் வயிறு வளர்க்க வந்துள்ளார்கள். எல்லோராலும் எல்லோரையும் ஏமாற்ற முடியுமோ?...

சங்கரியார் இதற்கு மறுப்புத் தெரிவித்தாலும் ஆச்சரியமில்லை! ஏனெனில் அடிக்கடி தடுமாறும் அவரின் வரலாறே அப்படித்தான்! முழுப்பூசணிக்காயைச் சோற்றில் புதைக்க முடியுமோ?... ■

## மலையகத் தமிழருக்கு

## பொருளாதாரத் தடைநீக்கம் எப்போது

இந்த நாட்டின் பொருளாதாரத்தில் பிரதான பங்கைக் கொண்டிருக்கும் மலையக மக்கள் தங்களுக்கான நிரந்தரமான பொருளாதார அமைப்பைக் கொண்டிருக்காததால் தொடர்ந்தும் மற்றவர்களிடம் கையேந்தும் நிலைமையேதான் காணப்படுகிறது.

தேயிலை, இறப்பர் பெருந்தோட்டங்களில் பணி புரிந்தால்தான் கூலி கிடைத்து உயிர் வாழலாம் என்ற நிலைமை தொடர்கின்றது. அவர்கள் நோயுற்றவர்களாக, வயது முதிர்ந்து வேலை செய்ய முடியாதவர்களாக, கடும் மழை, வரட்சி, போன்ற காலங்களில் பணிபுரிய முடியாத போதெல்லாம் வருமானமின்றி, நிவாரணமின்றி மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகும் போது அடிப்படையில் சுயமான பொருளாதார அமைப்பு முறை அவசியம். அதை எவ்வாறு அமைத்துக் கொள்வது என்பதைத் தீர்மானிக்க வேண்டியதும் அவசியம்.

இம் மக்கள் சமூகம் பெருந் தோட்டங்களில் வேலை செய்வதைத் தவிர தங்களுக்கு வேறு வகையான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை இன்னமும் உணராததும், அறியாததும், தெளிவின்றி இருப்பதும் மற்றவர்கள் இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பத்தைக் கொடுத்துவிடுகிறது.

இந்தத் தோட்டப் பொருளாதார அமைப்பினுள் சந்ததி சந்ததியாகக் கட்டுப்பட்டு இருப்பதுதான் மலையகத் தமிழர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடை. இது நீக்கப்படுவது எப்படி, எப்போது, யாரால் என்பதுதான் அவர்கள் முன்னால் மலையெனக் குத்திட்டு நிற்கும் பெரிய கேள்வி.

தற்போது பெரும்பாலும் பெருந் தோட்டங்களைச் சார்ந்தவர்கள் சிலர் ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, விவசாயம், சிறு கைத்தொழில், சிறு வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதையும் அநேகமானோர் செய்வதில்லை. அவர்களுக்கு இட வசதிகள் கிடைக்காதிருப்பதும், ஊக்கமின்மையைக் கொண்டிருப்பதும் முக்கிய மான விடயம்.

கம்பனிகள் பெருந் தோட்டங்களைக் கையேற்ற பின்பு தரிசு நிலங்களில் மரங்கள் வளர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. அதைவிட தேயிலை நிலங்களுக்குக் களைகொல்லியை விசிறுவதனால் புல்லைக் கால்நடைகளுக்கு உணவாகக் கொடுக்க முடியாது. கால்நடைகளுக்குரிய பிண்ணாக்கு, தீவனம் விலை அதிகரித்துள்ளது. பசும்பாலுக்குரிய விலை கிடைக்காமை, விவசாயம் செய்வதற்கான நிலங்கள் அவர்களுக்கு இல்லை. அப்படியே இருக்கும் நிலங்கள் அவர்களுக்குச் சொந்தமானதல்ல. பொருளாதார நெருக்கடி, உற்பத்தி செய்த பொருட்களை நியாயமான விலையில் சந்தைப்படுத்த எந்தவித வசதிகளும் இல்லை, விவசாயத்திற்கான உரம், மருந்து வகைகள், கிருமிநாசினிகள் போன்றவற்றின் அதிகரித்த விலை, அவர்களுக்கான ஆலோசனைகள் ஊக்குவிப்பதற்கான எந்த சக்திகளும் இல்லை. (இதே விடயத்துக்காகக் கிராமப் புறங்களில் சகல வசதிகளையும் அரசாங்கம் செய்து கொடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது) இவ்வாறான தடைகளும் இவர்களின் இந்த ஓரிரு முயற்சிகளும் முடக்கப்படுவதற்குப் பிரதான காரணங்களாகின்றன. இந்தச் சிறிய தொழில்கள் தொழிலாளர்களின் சுய பொருளாதாரத்தை ஊக்குவிக்கின்றன. ஆனாலும் அது லட்சக் கணக்கான மக்களின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்துவிடாது.

இப்போதும் ஒவ்வொரு மாதமும் தங்களின் சம்பளத்தில் முற்பணமாகப் பெற்றுக்கொள்வது, மிகுதியைச் சம்பளமாகப் பெற்றுக் கொள்வதான நடைமுறையையே கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மாதம் மாதம் 10ம் திகதியையும், 24ம் திகதியையும் சம்பளம் பெறும் நாளாக எதிர்பார்த்து நிற்கின்றனர். அவர்கள் தங்களுடைய தேவைகளை ஓரளவாவது பூர்த்திசெய்வதற்குரிய வேறு வகையிலான சுயமான பொருளாதாரம் தங்களிடம் இல்லாத ஒரு பிரச்சனையை எதிர்நோக்குகிறார்கள். அதைவிடப் பெரும்பாலானவர்கள் கிடைக்கும் சம்பளத்தை முறையற்ற விதத்தில், திட்டமிடப்படாத நிலையில் அநியாயமாக்குகிறார்கள்.

### மலையூரான்

"தோட்டங்கள் தோறும் சட்டவிரோதமான மதுவிற்பனை (கலப்படம் கொண்ட, தரம் குறைந்த மது போலியானவற்றைக் கடனுக்கு வழங்கி மாதாந்தம் வசூல் செய்வது, என்பவை மூலம் குறைந்த விலையில் அதிகம் போதையை கொண்ட, இலகுவில் வருமானம் தரக்கூடிய தொழிலாக இதைச் சிலர் மேற்கொள்கிறார்கள்) அத்துடன் பெரும்பாலான தோட்டங்களில் கசிப்பு உற்பத்தியும் உண்டு.


"அதிக வட்டிக்குப் பணம் கடனாகப் பெற்றுக் கொள்வது (கடன் கொடுத்தவர் முதலைக் கேட்கமாட்டார். கொடுத்த பணத்துக்குரிய வட்டியை மாத்திரம் கண்டிப்பாகப் பெற்றுக் கொள்வார்) "படித்தவர்கள் என்று சொல்லிக் கொண்டு மக்களை ஏமாற்றும் தரகர்கள் கூட்டம் கமிஷன் பெற்றுக் கொண்டு பிள்ளைகளை நகரில் உள்ள வீடுகளுக்கு வேலைக்காக விடுகிறார்கள். ( ஒரு பிள்ளையை வேலைக்கு அமர்த்தினால் 500-1000 ரூபாவை வீட்டுக்காரரிடம் பெற்றுக் கொள்வர்) ஈ.பி.எப்- ஈ.ரி.எப். பணம் பெற்றுக் கொடுப்பது, தொழிலாளர்களுக்கு அவர்களுடைய சேமலாப நிதியில் இருந்து வட்டியுடனான கடனைப் பெற்றுக் கொடுத்தல், பணிப் பெண்களாக வெளிநாடுகளுக்கு அனுப்புவது என்பவற்றைச் செய்துகொடுத்து தொகைக்கு ஏற்ப தரகர்கள் கமிஷன் பெற்றுக் கொள்வார்கள்.

வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு ஏற்ப சம்பள உயர்வு கிடைக்காமை, அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வு இவர்களைப் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கி உள்ளது.

இதன்மூலம் தங்களுக்குச் சொந்தமில்லாத, நிரந்தரமில்லாத முதலாளிகளின் பெருந்தோட்டங்களை தங்களின் நிரந்தர தொழிலுக்காகப் பாதுகாத்துக் கொள்வதாகவே அமைந்துவிட்டது. இன்றைய நவீன உலகத்தில் அடிமை வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமானால் இந்த சமூகம் சுயமான பொருளாதாரத் துறையைக் கொண்டிருப்பதும், ஆக்கபூர்வமான கல்வியறிவைக் கொண்டிருப்பதும் மிக மிக அத்தியாவசியமானதாகும். பொருளாதார வறுமையை விட அறியாமையாலும், திட்டமிடா வாழ்க்கை முறையினாலும் தொடர்ந்தும் இவர்கள் பின் தங்கிய சமூகமாகவே வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தத் தொழிலையே பிரதான தொழிலாக நம்பியிருக்கக் கூடாது என்ற சிந்தனை வளர்ச்சி மேலோங்க வேண்டும். அதற்காக இருப்பிடங்களைவிட்டு தங்களின் சிறார்களை நகர்ப் புறங்களில் வேலைக்காக அமர்த்துவதும், நகர்ப் புறக் கடைகளில் வேலை செய்து வருமானம் பெறுவதும்தான் முன்னேற்றம் என்ற நிலையை நிரந்தரமாக்கிவிடக் கூடாது. அப்படிக் கருதுவோமானால் அடுத்த தலைமுறையையும் முன்னேற்றம் இல்லாத பின்தள்ளப்பட்ட சமூக அமைப்புக்குள் விட்டவர்களாகவே இருப்போம். மாற்று வழிகளுக்கான முயற்சியை நாமே உருவாக்க வேண்டும். வறுமையில் செம்மையாக வாழ்வது எப்படி என்பதைக் கடைபிடிக்க வேண்டும்.

தொடர்ந்தும் அடுத்தவர்களை நம்பி வாழும் அடிமைத்தனத்துக்கு ஆப்பு வைக்க வேண்டும். ■



## காற்றுவாக்கில்... 14

### அரச ஊடகம்

அரச ஊடகத்துறைக் கட்டமைப்பில் சில முன்னேற்றகரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது கண்டு மகிழ்ச்சி கொள்ளாதவர்கள் இருக்க முடியாது. முக்கியமாக, வட பகுதி மக்கள் ரூபவாஹினி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு இப்பொழுது வசதி செய்துகொடுக்கப்பட்டுள்ளது. இனி, நிகழ்ச்சிகளின் தரம் குறித்துத்தான் நிர்வாகத்தினர் கவனஞ் செலுத்த வேண்டியிருக்கும். புதிய நிலை வரத்திற்கு முன்னர் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின. இது பற்றி வாசகர் ஒருவர் குறிப்பிடும் பொழுது, வடபகுதிக்கெனத் தனியாக ஓர் அலைவரிசை ஆரம்பிக்கப்பட்டதைப் போன்ற ஒரு பிரமையைச் சம்பந்தப்பட்ட சிலர் தமது பேச்சுக்களாலும், எழுத்துக்களாலும், ஏற்படுத்தியதாக, தமது அவதானிப்பை எடுத்துக் கூறியிருக்கிறார். இதில் ஓரளவு உண்மை இருப்பதாகத்தான் எண்ணத் தோன்றுகின்றது. நடந்தது இது தான்! வடபகுதி மக்களுக்கு ரூபவாஹினியைப் பார்ப்பதற்கு, அப் பகுதிக்கு ஒளிபரப்பை எடுத்துச் செல்வதற்கான வசதியிருக்கவில்லை. முந்திய அரசாங்க காலத்தில், ஏதோ ஒட்டுவேலைகளைச் செய்து, கொழும்பிலிருந்து ஒளிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி நாடாக்களை விமானத்தில் அனுப்பி, யாழ் இராணுவ முகாமில் சில தற்காலிக ஏற்பாடுகள் செய்து அவற்றை ஒளிபரப்பினார்கள். பல பகுதிகளில் மின்சாரம் இருக்கவில்லை என்பது வேறு விடயம். இதுவும், சில காலத்திற்குப் பின் தடைப்பட்டது. நல்ல மனதோடு இப்பொழுது நிலைமை மாற்றப்பட்டுவிட்டது. இனிமேல், தொடங்க வேண்டியது தரமான நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒளிபரப்புவதே! இதற்குத் தகுந்த/ தரமுள்ள தயாரிப்பாளர்களைப் புதிதாக நியமிக்கவேண்டியிருக்கும். 'புதிதாக' என்பதற்குக் காரணம், இது வரை இதற்கென இருப்பவர்கள் 3-4 பேர் மட்டுமே... அவர்கள் கூட, தமக்கெனக் குறிப்பிட்ட வேலைகளோடு/மேலதிகமாகச் செய்தி வாசிப்பதிலும் ஈடுபடுகிறார்கள். செய்தி வாசித்தால் மேலதிகக் கொடுப்பனவு கிடைக்குமல்லவா? ஏதோ சாக்குப் போக்குச் சொல்லிவிட்டு, தமக்குரிய வேலைகளில் சிரத்தை காட்டாது மேலதிகக் கொடுப்பனவு கிடைக்குமே என்பதற்காகச் செய்தி வாசித்தல் போன்ற, அலுவலக நேரத்திற்கு வெளியே பங்குபற்றக் கூடிய நிகழ்ச்சிகளில் சிலர்

### காற்றாடி

பங்குபற்றி விசேட கொடுப்பனவு பெறுகின்றார்கள் என்று குற்றஞ்சாட்டுவது 'காற்றாடி'யின் நோக்கமல்ல...

இப்படியான நிலைமை தொடரக் கூடாது என்பதே முக்கியம். ஏனெனில், புத்தம் புதிய நிகழ்சிகள் பலவற்றைத் தயாரித்து ஒளிபரப்ப வேண்டிய தேவைப்பாடு இப்பொழுது ஏற்பட்டுள்ளது. நிரந்தர ஊழியர் பட்டியலில் உள்ளவர்களுக்கே, மேலதிக வருமானத்தை ஈட்டக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தாமல், தற்காலிகமாக, மற்றும் அமய அடிப்படையில் ஏற்கனவே திருப்திகரமாகப் பணிபுரிந்துவருபவர்களுக்கு ஏன் சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாது? புதிய நிர்வாகம் இவ் விடயத்திலும் கவனஞ் செலுத்துமென்று எதிர்பார்ப்போமாக!

### அதிகரிக்கும் அறிவிப்பாளர் எண்ணிக்கை

"இருப்பவர்களுக்கே வேலையில்லை, புதிதாக ஆட்களை எடுக்க வேண்டுமா?" இப்படிக் கேள்வி எழுப்புவோர் - இலங்கை வானொலியின் பெயர் குறிப்பிட விரும்பாத சில பகுதி நேர அறிவிப்பாளர்கள். மாதத்தில் அதிக நாட்கள் வேலை பெறும் நோக்குடன் சமீப காலமாக "இருப்பவர்கள் பலர் வயது போனவர்கள், புதியவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்" என்று, சில பிரபலங்களுடன் "தொடர்பு" கொண்டுள்ள சிலர் செய்து வந்த பிரசாரம் ஓரளவு பலித்துவிட்டதாம். எந்தவொரு ஆட்சி மாற்றத்தின் பின்னரும் இப்படியான வேடிக்கை விநோதங்கள் இடம்பெறுவதுண்டு. இது எழுதப்படாத ஒரு விதி. சமீபத்தில் "தென்றலு"க்கென்று 18 பேரும், "தேசிய சேவை"க்கென 12 பேரும் புதிதாக, பகுதி நேர அறிவிப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறார்களாம். இப்படியான முயற்சிகள் 'மோசடி செய்பவர்களைக் கண்டால் முட்டி மோதிவிடு' என்பது போல், முறியடிக்கப்பட வேண்டுமென உள்ளிருப்பவர்கள் பலர் உரத்துக் கூறுவதாகக் கேள்வி.

### வாக்குறுதி காற்றோடு காற்றாக...

இலங்கை வானொலி நிகழ்ச்சிகள் இம் மாதம் முதலாம் தேதி தொடக்கம் வட பகுதியைத் தெளிவாக எட்டுமென வாக்குறுதி வழங்கப்பட்டது. ஒன்றும் அசையவில்லையே; ஒருவேளை வானொலிக்கும் வயசாகிவிட்டதோ?

### வடக்கு நோக்கி 'சக்தி'!

இவ்வாண்டு ஏப்ரல் புதுவருட தினத்தன்று 'சக்தி'யை வடபகுதியில் பார்க்கலாம்/கேட்கலாம் என்று முன்னர் அறிவித்தல் செய்யப்பட்டது. ஆனால் அதுபற்றிப் பின்னர் பேச்சில்லை- மூச்சில்லை. ஆயினும், யாரோ 'தடை'விதித்து விட்டதாகச் செய்தி அடிப்பட்டது என்னவோ உண்மைதான். அத் 'தடை' நீக்கப்பட்டதனாலோ என்னவோ இம் மாதத்தில் 'சக்தி'யை வடபகுதி மக்கள் கண்டு/கேட்டு இரசித்துக் கொண்டாடலாம் என்று ஓர் அன்பர் கூறுகிறார். ஏதோ நல்லது நடந்தால் சரிதான்! ■

# ஸ்போர்ட்ஸ்

## ஐ.சி.சி. போட்டிகள்

## சூதாட்டமாக மாறுமா?

ஐ.சி.சி. மினி உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு வந்திருக்கும் கிரிக்கெட் வீரர்கள் சூதாட்டக்காரர்களின் வலையில் சிக்கிவிடாமல் பாதுகாக்கப் பலத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆட்ட நிர்ணய சதி, மற்றும் பந்தயக்காரர்களின் செயற்பாடுகள் தொடர்பில் கொழும்பு முக்கிய தளமாகக் கருதப்படுகின்றது. அதனால் இம்முறை ஐ.சி.சி. போட்டிகளின் போது வீரர்களுடன் சூதாட்டக்காரர்கள் தொடர்பு கொள்வதைத் தடுப்பதில் கூடிய கவனம் செலுத்தப்படுவதாகச் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் அறிவித்துள்ளது.

நட்சத்திர கிரிக்கெட் வீரர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களில் முன் கூட்டியே அறைகளைப் பதிவு செய்து வைத்திருக்கும் பந்தயக்காரர்கள் ஆட்டக்காரர்களுடன் ஹோட்டலில் வைத்தே பேரம் பேசுவதாகக் கடந்த கால சம்பவங்கள் நிரூபித்துள்ளதையடுத்து, வீரர்கள் தங்கும் ஹோட்டல்களில் சந்தேகத்துக்குரியவர்களின் நடமாட்டங்கள் குறித்துக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அக்கறை கொண்டுள்ளது.

### ஜயசூரிய தேறிவருகிறார்



இதேவேளை 12ஆம் திகதி ஆரம்பமாகும் பாகிஸ்தான்-இலங்கை அணிகளுக்கு இடையிலான முதலாவது போட்டியில் இலங்கை அணியின் தலைவர் சனத் ஜயசூரிய கலந்து கொள்வார் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொரோக்கோ முக்கோணத் தொடரின் போது ஜயசூரியாவின் கையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் சில நாட்கள் பயிற்சி நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியிருந்தார். தற்போது தேறி வருகிறார்.

## ட்ராவிட் 1000 ஓட்டங்கள்

இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டியில் 217 ஓட்டங்களைக் குவித்த இந்திய அணியின் ராகுல் ட்ராவிட், இந்த ஆண்டில் 1000 ஓட்டங்களைப் பெற்ற முதல் வீரர் என்ற பெருமையைத் தனதாக்கிக் கொண்டார்.

ட்ராவிட் இன்னும் 4 ஓட்டங்கள் பெற்றிருப்பாராயின், இந்திய வீரர் ஒருவர் வெளிநாட்டு மண்ணில் பெற்ற அதிகூடிய டெஸ்ட் ஓட்டமாக இது விளங்கியிருக்கும்.

சுனில் கவாஸ்கர் இங்கிலாந்துக்கு எதிராகப் பெற்ற 221 ஓட்டங்களே, இந்தியர் ஒருவர் வெளிநாடொன்றில் பெற்ற அதி கூடிய ஓட்டமாகும்.

# இறுக அணைத்து என் இதழ்களை உண்ண...

மூச்சிரைக்க ஓடிவந்த வள்ளியைத் தடுத்து நிறுத்தினாள் நீலா.

"என்னடி யானையா துரத்துகிறது.... இப்படி ஆத்துப் பறக்க ஓடிவருகிறாயே?"

அவள் கைப்பிடிக்குள் மூச்சு வாங்கியபடி நின்ற வள்ளி ஆமென்பதற்கு அடையாளமாகத் தலையை மேலும் கீழும் ஆட்டினாள்.

"என்ன சொல்கிறாய்... யானையா? எங்கே?" என்றவாறு அவள் ஓடிவந்த திசையைப் பார்த்தபடி வினவினாள் நீலா.

எதுவும் கூறாமல் அவள் தோள்களில் தலையைச் சாய்த்த வள்ளி, அவள் கழுத்தைக் கைகளால் கோர்த்துக் கொண்டு மேனி தொய்ந்தபடி நின்றாள்.

"என்னடி உன் உடம்பு இப்படி நடுங்குகிறது. எதைப் பார்த்துப் பயந்தாய்? யானையா உன்னைத் துரத்தியது? இப்போ அது எங்கே?" என்று கேள்விகளை அடுக்கினாள் நீலா.

"யானை என்னைத் துரத்தியதுதான். ஆனால் இப்போ ஓடிவந்தது அதற்காக இல்லை" என்று நீலாவின் தோளில் சாய்ந்தபடியே முணுமுணுத்தாள் வள்ளி.

"என்னடி உளறுகிறாய்? யானை துரத்தியது என்கிறாய்... ஓடிவந்தது அதற்காக இல்லை என்கிறாய்... உனக்கு என்ன நடந்துவிட்டது?" என்று கேட்டபடி அவளது நாடியைப் பற்றி முகத்தை நிமிர்த்தினாள் நீலா.

"அவர்... அவர்...." என்று நாக்கைக் கடித்துக் கொண்டாள் வள்ளி.

"யாரடி அந்த அவர்?...ஓ.... சரவணனா?" என்று அவள் தோள்களைப் பற்றி எதிரே நிறுத்தி, கண்களை நேருக்கு நேர் நோக்கிக் கேட்டாள்.

வள்ளி இமைகளைத் தாழ்த்திக் கொண்டாள். அவள் முன் தலையைக் குனிந்தபடி நின்றாள். அவளுடம்பு இப்போதும் நடுங்குவதை அவதானித்தாள் நீலா. "சரவணனைப் பார்த்தாயா, எங்கே?"

"இப்போதுதான் சற்று முன்பு" என்று முனகினாள் வள்ளி.

"சரி, யானை துரத்தியது எப்போ?"

"அதற்கு முன்பு"

"அடடா! என் வள்ளிக் கண்ணே!, இன்னும் ஏன் நடுங்குகிறாய்?" என்று அவள் தோள்களை உலுக்கினாள் நீலா.

"யானைக்காக நான் நடுங்கவில்லை" என்று மெல்லச் சொன்னாள் வள்ளி.

"அப்போ?"

"யானையை அவர் துரத்தி விட்டார்..."

"எவர்? சரவணனா?"

"ம்" என்று தலையை ஆட்டினாள் வள்ளி.

"சரி யானையைத்தான் துரத்தி விட்டாரே, பிறகெதற்கு இந்த ஓட்டம் ஓடி வந்தாய்...?"

வள்ளி தயங்கினாள். பிறகு மெல்ல, "யானை துரத்தி ஓடிவந்தேனா?" என்று சிறு குழந்தையைப் போலக் கேட்டாள்.

"ம்... சரி சொல்லு" என்றபடி கதை கேட்கத் தயாரானாள் நீலா.



"அப்போது நான் நடுங்கி நின்றால்தான் வந்தது வினை" என்று நிறுத்தி நீலாவை இமைகள் படபடக்கப் பார்த்தாள் வள்ளி.

"என்னடி வினை? சொல்லித்தான் முடியேன்" என்று அலுத்துக் கொண்டாள் நீலா.

"திடீரென்று வெள்ளம் பெருக்கெடுத்துவிட்டால் கரையில் நிற்கும் வாழைமரம் அலமலந்து நடுங்குமே... அதுபோலத்தான் நான் நின்றிருந்தேன். யானையை வெகு தூரம் துரத்திவிட்டு வந்தவர் என்னருகே நெருங்கினார்...."

"ம்..."

"அருகில் வந்து நின்று கொண்டு, 'அடடா! கலைந்த பிறகுதான் தெரிகிறது கூந்தலின் நீளமும் அடர்த்தியும்' என்று சொன்னபடி என் கூந்தலைக் கையில் ஏந்திக் கொண்டார்..."

"நீ என்ன செய்தாய்?"

"எனக்கு நடுக்கம் தீரவில்லை. தொட்டால் கீழே விழுந்து விடுவேனோ என்று பயப்படுமளவுக்குக் கால்கள் வெடவெடத்துக் கொண்டிருந்தன."

"சரி சரி, அப்போ அவர்தான் என்ன செய்தார்?"

"பதற்றப்படாதே, ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். நான்தான் அருகிலிருக்கிறேனே...." என்று அவர் சொன்னது எங்கோ கிணற்றுக்குள்ளிருந்து கேட்பது போலக் கேட்டது. 'அழகான நெற்றி எப்படி வியர்த்துவிட்டது' என்று சொல்லியபடி வியர்வையைத் துடைத்து விட்டார்"

"ம்... ம... அப்புறம்?"

"'இருண்ட கூந்தலுக்குக் கீழே இருப்பதாலா நெற்றி இப்படி ஒளி மிகுந்ததாய்த் தெரிகிறது!' என்று சொல்லியபடி, நெற்றியின் இரண்டு பக்கங்களிலும் தன்னிரு கைகளால் பற்றியபடி என் கண்களை நேருக்கு நேர் பார்த்தபடி சிரித்தார். எனக்கு ஒரே பயமாகிப் போய்விட்டது. யானையின் பயம் போய், இப்போது அவரது நெருக்கம் ஏற்படுத்திய வெட்கத்தில் எனக்குக் கை கால் உதற ஆரம்பித்தது..."

"ம்... ம்.... அவரைத் தூரத்தில் கண்டாலே உனக்கு வெடவெடக்க ஆரம்பித்துவிடுமே... ஓடி ஒளிந்து அவரைத் தேடியலைய விடுகிற இனமல்லவா நீ! சரி சரி, அதுதான் இந்த ஓட்டம் ஓடி வந்தாயா?"

"இல்லை."

"பிறகு?"

"அவர் அத்துடன் நின்றிருந்தால் பரவாயில்லை. என்னைத் தன் மார்போடு சேர்த்தணைத்துக் கைகளால் சுற்றி இறுக்கிக் கொண்டு விட்டார்...."

"அடடா! நல்ல காட்சிதான். நீ அவரது அணைப்பை விரும்பாதது போல அவர் அணைப்புக்குள்ளேயே திமிறி நடித்தாயாக்கும்...."

"ச்சீ போடி, நான் எவ்வளவு பயந்தேன் தெரியுமா! கையை விடுவித்துக் கொண்டு அவர் அணைப்பிலிருந்து வெளியேறி ஓடி வந்துவிடலாமென்று முயன்றால்.... நான் திமிறத் திமிற அவர் பிடி இன்னுமின்னும் இறுகுகிறது. 'உன்னை இன்று விடப்போவதில்லை. இந்த அழகுகள் எல்லாவற்றையும் முழுமையாக ருசித்துப் பார்க்கப் போகிறேன்...' என்றெல்லாம் சொல்லி ஒரு பழத்தை உண்ண வருவது போல என் இதழ்களை உண்ண வந்தார்...."

"ஆகா! அதுதானா இந்த உதடுகள் இப்படிச் சிவந்திருக்கின்றன?"

"போடி... நான் விடுவேனா? எங்கிருந்து தான் எனக்குப் பலம் வந்ததோ தெரியாது. நெட்டித் தள்ளிவிட்டு ஒரே ஓட்டமாக ஓடி வந்துவிட்டேன்" என்றாள் வள்ளி.

"ச்சே... அருமையான சந்தர்ப்பத்தை வீணாக்கிவிட்டு வந்துவிட்டாயே! இன்னும் நாலைந்து நாட்களுக்கு இதையே நினைந்து உள்ளே வருந்தப் போகிறாய் பார்!" என்று சிரித்தாள் நீலா.

நுரையுடைக் கலுழி
பாய்ந்தலின் உரவுத்திரை
அடுங்கரை வாழையின்
நடுங்கப் பெருந்தகை
அஞ்சில் ஓதி அசையல்
யாவதும்
அஞ்சல் ஓம்புநின்
அணிநலம் நுகர்கென
மாசறு சுடர் நுதல்
நீவி நீடு நினைந்து
என் முகம் நோக்கி
நக்கனன் அந்நிலை
நாணும் உட்கும்
நண்ணுவழி அடைதர
ஒய்யெனப் பிரியவும்
விடா அன் கவைஇ
ஆகம் அடைய
முயங்கலின்....

(குறிஞ்சி: 178-186)

# சிந்தியா பதில்கள்

✒ ரோம் நகர் தீப்பிடித்து எரிந்த வேளையில் பிடில் வாசித்துக் கொண்டிருந்த நீரோவாக இன்றைய நிலையில் எமது அரசியல் தலைவர்களில் யாரைக் கூறலாம்?

-சோ.தனு, ஆரையம்பதி-01.

நான் சொல்வதென்றால், நானும் நீங்களும் உள்ளிட்ட எங்கள் மக்களைத்தான் சொல்வேன்.

❖❖❖

✒ ஒரு சில பாடல்களை மாத்திரம் பாடி இரசிகர்களின் மனதில் இடம் பிடித்த பாடகி ஜென்சி ஏன் இப்போது பாடுவதில்லை?

-எம்.காமில் ஹுமீதன், கல்ஹின்னை.

சைலஜா ஏன் பாடுவதில்லை, சசிரேகா ஏன் பாடுவதில்லை என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டேயிருக்கலாம். அறுபது வயதானாலும் குரலை அன்று போலவே வைத்திருக்கும் ஜானகியின் வரம் எல்லோருக்கும் கிடைத்துவிடுவதில்லை.

❖❖❖

✒ சிந்தியாவுக்கு அடுத்த ஜென்மத்தில் யாரைப் போல பிறக்க ஆசை?

-கலைப்பிரியன் வேணு, பெரியநீலாவணை-01.

என்னைப் போலவேதான்! இந்தப் பிறவியில் இளமைப் பருவத்தின் பெரும் பகுதி நாட்களை வேண்டாத கவலைகளாலும், அச்சங்களாலும் வீணடித்து விட்டதைப் போல, அடுத்த பிறவியில் வீணாக்கி விடாமல் (என் வாழ்க்கையையே) முழுமையாக வாழ்ந்து பார்க்க வேண்டும்.

❖❖❖

✒ நான் ஒரு ஈழத் தமிழன், ஆனால் என் சார்பில் பேசப் போகிறவர்கள் ஒரு பிரிட்டிஷ் தமிழர், ஒரு அமெரிக்கத் தமிழர், ஒரு அவுஸ்திரேலியத் தமிழர், மற்றும் ஒரு அவுஸ்திரேலியப் பெண்மணி ஆகியோராக இருக்கிறார்கள். இவர்களெல்லாம் யார் யாரென்று சிந்தியா கொஞ்சம் தகவல் தரமுடியுமா?

-மா.கபிலன், கொழும்பு-06.

முடியாது. தமிழ் மக்களின் அன்ரியையும், தமிழர்களின் அங்கிள்களையும் யாரென்று தெரியாமல் கேள்வி கேட்கும் உங்களைத் தமிழரென்றே ஒப்புக்கொள்ள முடியவில்லையே!

❖❖❖

✒ 'கெடுவான் கேடு நினைப்பான்', 'வினை விதைத்தவன் வினையறுப்பான்', 'அண்ணாந்து துப்பினால் எச்சில் உன் முகத்திலேதான் விழும்', 'முற்பகலில் செய்தவனுக்கு பிற்பகலில்'.... இதுபோல 'உலக சண்டியனுக்குப் பொருந்தக் கூடியதாக புதிய மொழி ஒன்று எடுத்து விடமுடியுமா?

-ஜி.விக்னேஸ்வரன், குளியாப்பிட்டி.

வளர்த்த லேடன் வர்த்தகக் கட்டடத்தில் பாய்ந்தது போல.

❖❖❖

✒ "இன்பத்தைக் கருவாக்கினாள் பெண்... உலகத்தில் மனிதனை உருவாக்கினாள் பெண்... விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் நிலையற்ற செல்வம் பெண்" என்று கூறும் கவிஞர்கள் ஆண்களைப் பற்றி இதெல்லாம் கூறுவதில்லையே ஏன்?

-சிபானிமன், ஹபஸ்தலாவ.

இப்படி இனிப்புத் தடவிய சொற்களால் மயக்கி, ஆணைத் தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொள்ள எந்தப் பெண்ணும் இன்னும் முன்வரவில்லை அல்லது அனுமதிக்கப்படவில்லை ஆதலால்!

❖❖❖

✒ ஜோதிகாவின் பிளஸ் என்ன? மைனஸ் என்ன?

-பி.விக்னேஸ்வரன், பண்டாரவளை.

மொழுமொழு முகமும், மொழுமொழு உடம்பும்.


❖❖❖

✒ காதலிக்க நினைத்த பெண் அழகாயில்லை என்பதால் தங்கையாகிறாள். அதுபோல தங்கை அழகாயிருந்தால்...?

-எஸ். ரோகினி, பசறை.

சீதனச் செலவு மிச்சமாகிறது.

❖❖❖



✒ சிம்ரனை உங்களுக்கு ஏன் பிடிக்கிறது என்று சொல்ல முடியுமா?

-யோ.சுரோமி, மட்டக்களப்பு.

இது கேள்வி. ம்... வந்து... ம்.... சரி இப்படிச் சொல்லலாம். நடிப்பால் அழகை அதிகரித்துக் கொள்ளும் ஒருசில நடிகைகளில் ஒருவராக இருப்பதால்.

❖❖❖

✒ இடைக்கால நிர்வாகம் கிடைத்துவிடுமா?

-ஆர்.சங்கப்பிள்ளை, கல்குடாவத்தை.

கிடைக்கவேண்டும். ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கு அதுவல்ல முக்கியம். நாம் சென்று சேரவேண்டிய இலக்குக்கான சட்டகங்களும், முன்வரைவுகளும், பாதைக் குறிகாட்டிகளும் பேச்சில் இடம்பெற்றாக வேண்டும். கடைசி எல்லை தனிநாடாகவோ, தற்போதுள்ள ஒற்றையாட்சி அமைப்பை நீடிப்பதாகவோ இருக்க முடியாதென்பது தெளிவு. ஆகவே, அரசை எப்படி மீளமைப்புச் செய்துகொள்வது என்பதைப் பேசினால்தான் எதிர்காலத்தில் தமிழ் மக்களை, ஏன் இந்த நாட்டையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

❖❖❖

# மன்னாதி மன்னன் 121

## அந்தணன் அரசனானான்

இராஜகுமாரன்

சிங்கபுரி நகரின் மத்தியில் உள்ள கோவிலின் முன்றலில் வைக்கப்பட்டிருந்த பெரிய எண்ணெய்க் கொப்பரையில் இடைவிடாது எரிந்துகொண்டிருந்த எண்ணெய்பற்றி தான் அறிந்து வந்த கதையை மன்னர் விக்கிரமாதித்தனிடம் சூரசேனன் கூறினான்.

சிங்கபுரியை ஆட்சி செய்யும் மன்னன் மகள் வீரலட்சுமி, தனது மணாளனாக வரவேண்டியவன், அந்த எண்ணெய்க் கொப்பரையில் மூழ்கி உயிருடன் திரும்ப வேண்டும். அவ்வாறு கொதிக்கும் எண்ணெயில் குதித்து உயிருடன் வருபவனையே தான் மணவாளனாக ஏற்பேன் என்று நிபந்தனை விதித்திருந்தாள்.

வீரலட்சுமி மிகுந்த அழகியாக இருந்தமையினால், பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்த அரசர்களும், இளவரசர்களும் கொதிக்கும் எண்ணெய்க்குள் பாய்ந்து தமது உயிர்களை மாய்த்தனர். இதனால் சிங்கபுரி அரசன் தனது மகளின் திருமணம் நடைபெறாமல் போனமைக்காகவும், பல மன்னர்களும், இளவரசர்களும் தன் மகளுடைய பிடிவாதத்தினால் மாண்டு மடிவதற்காகவும் மிகவும் மனம் வருந்தினான்.

இவ்வாறு சூரசேனன் கூறிய கதையைக் கேட்ட மன்னர் விக்கிரமாதித்தன், தன்னுடன் சூரசேனனையும் அழைத்துக்கொண்டு வேதாளத்தின் மீதேறி சிங்கபுரியை அடைந்தார். விக்கிரமாதித்த மன்னரின் இஷ்ட தெய்வமான காளிகாம்பாள் உறையும் கோவிலிலேயே எண்ணெய்க் கொப்பரை வைக்கப்பட்டிருந்தது. எனவே, முதலில் அன்னையை வணங்கிவிட்டு, சூரசேனனை அங்கேயே இருக்கும்படி கூறிவிட்டு, நேராக எண்ணெய்க் கொப்பரை அருகில் வந்து நின்றார். அங்கு காவலுக்கு நின்றிருந்தவர்கள் மன்னரைப் பார்த்து, மற்றுமொரு அரசிளங்குமரன் அநியாயமாக எண்ணெய்க் கொப்பரைக்குள் தன் உயிரை அர்ப்பணிக்கப் போகிறாரே என்று பரிதாபப்பட்டனர். ஒரு சிலர். மன்னரைத் தடுக்கவும் முற்பட்டனர். அவர்களை, 'அருகே வரவேண்டாம்' என்று சைகை காட்டித் தடுத்த மன்னர், கொதிக்கும் எண்ணெய்க்குள் குதித்தார். காவலர்கள் இந்தக் கொடூரமான காட்சியைப் பார்க்காமல் தமது கண்களை மூடிக்கொண்டனர்.

ஒரு தடவையல்ல, விக்கிரமாதித்த மன்னர் பல தடவைகள் எண்ணெய்க் கொப்பரைக்குள் மூழ்கி எழுந்தார். கண்களைத் திறந்து பார்த்த காவலர்கள் தாங்கள் கண்ட காட்சிவெறும் கனவல்லவே என்று வியந்தனர். அவர்களில் சிலர் மன்னரிடம் இச் சம்பவத்தைக் கூற ஓடோடிச் சென்றனர்.

கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரைக்குள் ஓர் அரசன் மூழ்கி உயிருடன் எழுந்துள்ளான் என்ற கதையை நம்பவே முடியவில்லை. ஒருவரல்ல, பல காவலர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்ட மன்னன் திகைப்பும், மகிழ்ச்சியும் அடைந்தார். அந்த அரசரைச் சகல மரியாதைகளுடன் அழைத்து வர ஏற்பாடுகள் செய்தார். தனது மந்திரி பிரதானிகளையும் அழைத்துக்கொண்டு மங்கல வாத்தியங்கள் முழங்க விக்கிரமாதித்த மன்னரிடம் வந்து சேர்ந்தார்.

கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரைக்குள் வீழ்ந்து உயிருடன் மீண்டு வருபவர் எவரும் சாதாரண மனிதராக இருக்க முடியாது என்று கருதிய மன்னர், விக்கிரமாதித்த மன்னரைக் கண்டதும், அவர் விக்கிரமாதித்த பூபதியாகத்தான் இருக்க முடியும் என்று எண்ணிக்கொண்டார். இதனால், அவருடைய மகிழ்ச்சி பல மடங்காகப் பெருகியது.

"விக்கிரமாதித்த மன்னரே! எனது மகள் உண்மையில் பாக்கியம் செய்தவளே! அதேபோல் எங்கள் நாட்டு மக்களும் தங்களைப் போன்ற மாமன்னரின் ஆட்சிக்குட்பட்டு வருவதனால் பேருவகை கொள்வார்கள். எனது மகள் போட்ட சபதம் நிறைவேறிவிட்டது. தாங்கள் எனது மகளையும், இந் நாட்டையும் ஏற்றுக்கொண்டு எங்களை இரட்சிக்க வேண்டும்" என்று கூறி வணங்கி நின்றார்.

மன்னர் விக்கிரமாதித்தனோ, சிங்கபுரி மன்னனின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. தனது அரண்மனையைச் சேர்ந்த இளவரசனான சூரசேனனுக்கே இளவரசி வீரலட்சுமியை மணம்முடித்து, நாட்டையும் பரிபாலிக்கும் மன்னனாக முடிசூட்டப்போவதாகவும் சிங்கபுரி அரசரிடம் கூறினார்.

விக்கிரமாதித்த மன்னரின் விருப்பத்திற்கு மாறாக மறுவார்த்தை கூற விரும்பாத சிங்கபுரி அரசர் தனது மகளைச் சூரசேனனுக்கு மணம்முடித்து வைத்து தனது நாட்டையும் சூரசேனனிடம் ஒப்படைப்பதற்குச் சம்மதமளித்தார். திருமணமும், முடிசூட்டு விழாவும் விக்கிரமாதித்த மன்னரின் தலைமையிலேயே சிறப்பாக நடைபெற்றது.

இக் கதையை பத்தொன்பதாவது படிக்குக் காவலாக நின்ற சற்குணவல்லிப் பதுமை போஜ மன்னனிடம் கூறி முடித்தது. கதையைக் கேட்டுப் போஜ மன்னன் தனது அரண்மனைக்குத் திரும்பினார்.

இருபதாம் நாளன்று அதிகாலை துயிலெழுந்த போஜ மன்னர், காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அரியணை வைக்கப்பட்டிருந்த மண்டபத்தை அடைந்தார். அரியணைக்கான பூஜைகளை முடித்துக் கொண்டு வழமைபோல் அரியணையின் படிக்கட்டுக்களில் ஏறத் தொடங்கினார். இருபதாவது படிக்கட்டில் காவலுக்கு நின்றிருந்த சுந்தரவிநோதப் பதுமை மன்னனை மேலே செல்ல விடாமல் தடுத்து நிறுத்தியது.

"போஜ மன்னனே! எமது பேரரசரான விக்கிரமாதித்த பூபதியின் சிறப்பம்சங்களைக் கூறும் பல கதைகளையும் கீழுள்ள பத்தொன்பது படிகளிலும் காவலுக்கு நின்றிருந்த பதுமைகள் கூறக் கேட்டிருந்தீர். நானும் எமது அரச பூபதியின் பிறருக்குதவி புரியும் தயாள குணத்தை விளக்கும் சில கதைகளைக் கூறுகிறேன். அவற்றையும் கேட்டு, இத்தகைய குணங்களுள் எவையேனும் உம்மிடமிருந்தால் நீர் மேலே சென்று அரியணையில் அமரலாம்" என்று கூறிக் கதை சொல்லவாரம்பித்தது.

சகரபுரி நாட்டை ஆண்டு வந்த அரசன் சாதுரியவான் பாம்பு தீண்டி இறந்துவிட்டான். கணவனைப் பிரிந்த துயர் தாங்காத அரசி உடன்கட்டை ஏறத் துணிந்தாள். அரசருக்குரிய கடன்களை முடித்துத் தீமூட்டப்பட்டது. அரசி சிதையை வலம் வந்துகொண்டிருந்தாள்.

விக்கிரமாதித்த மன்னரின் ஏவலாளர்கள் மூலம் இக் கதையைக் கேள்விப்பட்ட மன்னர் வேதாளத்தின் உதவியுடன் அவ்விடத்திற்கு விரைந்து வந்தார். அரசியை உடன்கட்டை ஏறாமல் தடுத்தார். தன்னிடமிருந்த மந்திரவாளை எடுத்துச் சிதையில் கிடந்த மன்னன் சாதுரியவானின் உடலைத் தொட்டார். அம் மன்னன் தூக்கத்திலிருந்து விழித்து எழுபவன் போல் எழுந்தான். அவ்வரசனும், அரசியும் விக்கிரமாதித்த மன்னரின் தாள் பணிந்து, தங்கள் உயிர்களைக் காப்பாற்றியமைக்காக சகரபுரி நாட்டை ஏற்று அரச பரிபாலனஞ்செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். மன்னர் விக்கிரமாதித்தன் அந் நாட்டைத் தொடர்ந்து சாதுரியவானே ஆளவேண்டும் என்று பிரகடனப்படுத்திவிட்டு உஜ்ஜயினி மாகாளிப் பட்டணம் போய்ச் சேர்ந்தார்.

உஜ்ஜயினியில் நாடாறு மாதம் ஆட்சி முடிந்ததும், காடாறு மாத வாசத்துக்காக மன்னர் விக்கிரமாதித்தன் புறப்பட்டார். அவர் செல்லும் வழியில் இருந்த சத்திரத்தில் தங்கியிருந்த போது, வீதி வழியாகப் பெரும் சலசலப்புக் கேட்டது. மன்னர் வெளியே வந்து நோட்டமிட்ட போது, அரச உடைகளணிந்த ஒருவரைச் சிலர் கட்டியிழுத்துச் செல்வதைக் கண்டு, அவர்களை இடைமறித்தார்.

(மன்னன் வருவான்...)

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
-காதில பூ கந்தசாமி-

ச.க. வீரப்பன் கடத்திக் கொண்டு போன நாகப்பனை சுப்பர் ஸ்டார் ரஜனி போய் மீட்க வேணுமெண்டு பா.ம.க.தலைவர் ராமதாஸ் சொன்னாரெல்லே...உடனை என்ரை மனசில... ரஜனி நாகப்பனை மீட்க வீரப்பனோட நடத்தின பேச்சு வார்த்தைக் காட்சி... "யாருடா காட்டுக்க நம்ம அனுமதியில்லாம" வீரப்பன் கேக்க, குரல் வந்த திசையை நோக்கி ரஜனி "பாபா"கத்தியை வீச, அது "அய்ங்" கென்று பாய்ந்து வீரப்பன்ரை முகத்தை உரசியபடி, பின்னால இருந்த மரத்தில குத்தி நிக்குது. ரஜனி எம்பிக் குதிச்சு அந்தரத்தில சுழண்டபடி வீரப்பனுக்கு முன் னால அட்டகாசமாக காலை அகல விரிச்சப்படி நிண்டு "ஹ...ஹ...ஹ" என்று ஒரு சிரிப்பு.

வீ: யாருடியிது? நம்ம காட்டுக்க, மரத்துமேல கத்தியெறிஞ்சுபுட்டு நம்ம முன்னாலியே இம்புட்டுத் துணிவா நின்னு சிரிக்கிறது...?

ர: தெரியேல்ல..? நான்தான் ரஜனி! நா நல்லவனுக்கு நல்லவே, கெட்டவனுக்குக் கெட்டவே!

வீ: நா நல்லவனுக்குக் கெட்டவே, கெட்டவனுக்கு நல்லவே! ஒனக்கு என்னாமேன் வேணும் நம்மகிட்ட?

ர: நா கேட்டு வாங்கிற ஜாதியில்லை எனக்கு வேணும் நியாயோ, தர்மோ, அதோட சினிமா ரசிகங்க ளோட ஆர்வோ, இந்தாப்பார். இந்தக் கத்திய பத்து செக் கண்டுக்கள்ள நீயெடுத்தேன்ன, சமாதானமெண்ணு அர்த்தம். நா எடுத்தேன்ன வைச்சுக்க. சண்டேன்னு அர்த்தோ. சண்டையா? சமாதானமா? நீயே முடிவுபண்ணிக்க, பாபா கவுண்டிங் ஸ்டாட்டிங். வன்..டூ...திறீ..

வீ: யாரது பாபா?

வீ சகா: இப்ப ஓடிக்கிட்டிருக்கே, நாம கூட முந்தனா பாத்தமே ஒரு புதுப்படோ,

வீ: அட அதுவா, ஏதோ நம்ம மான்குட்டி போல மூணு விரல மடக்கி அபினயோம்புடிச்சி என்னமோ சதம் சச்சச மோன்னுவியே....?

ர: ஆமா, முடிஞ்சது முடிஞ்சு போச்சு

வீ: முடியாதது...?

ர: முடியவில்லை.

வீ: ராஜ்குமாரு விஷய முன்னா முடிச்சி போச்சு, நாகப்பே விஷயம் இன்னும் முடியேல்லை, இப்ப என்னாப் பண்ணனுங்கறே.

ர: நாகப்பனை விடணு.

வீ: சரி வுடுரே, ஆனா ஒரு கெண்டிஷன்.

ர: என்ன கெண்டிஷே?

வீ: ஒ. ஏழு வரத்துல ஒன்ன எனக்குத் தரனு.

ர: வரமா, எந்த வரோம்?

வீ: அதுதாம்மேன் இந்த பாபா படத்துல ஏழு வரத்தை வாங்கிபுட்டு, அம்மா காத்தாடி வரவழைக்கறே. தெருவுல போற வங்கிட்ட டைம் கேக்கறேன்னு மூணு வரத்த சும்மாவே வேஸ்ட்டாக்கினியே.

வீ சகா: நாலாவது வரத்துல பத்து லட்சோங் கெடச்சுதில்ல அவுருக்கு?

வீ: என்னாப் பெரிய பத்த லட்சோ, என்ர ஒருலோட் சந்தனக் கட்டை தேறாது! ஏம்பா, ஒரு ஐம்பது அறுவது கோடியக் கேட்டு நமக்கும் ஒரு பத்துப் பதினைஞ்ச விசுக்கியிருந்தேன்னா நாம ஏன் இந்த நாகப்பே, காகப்பேன்னு போயி புடிச்சிகிட்டு அலையப்போறோ.

ர: அது மக்களோட பணோ, மக்களுக்குத்தா சேரணு.

வீ: ஆமா, மக்கள் பாக்கிற சினிமாவோட வசூல் மட்டு ஒனக்கு வந்து சேரணுமாக்கும். சரி எனக்கு அதில ஒரு வரத்தத் தரப் போறியா இல்லியா அதச் சொல்லு மொதல்ல.

ர: ஒனக்கே அந்த ஏழு வரமும் கெடைச்சுதுன்ன வைச்சுக்க, என்ன பண்ணியிருப்பே?

வீ: அடி சக்கையிண்ணாணாம்? ஒண்ணு கெடைச்சாலே இந்த ஒலகத்த ஏங் காட்டுக்குள்ள கொணாந்திருப்பே. ஏழு கெடைச்சா வுடுவனா. மொதல் இந்த நாகப்பன் என்ன, ஜெயலலிதா, கிருஷ்ணாவைக் கடத்தியாந்திருப்பே. அடுத்து, இந்தக் காடு பூரா சந்தன மரமா மாறிப் புடனுமுன்னு கேட்டிருப்பே. அப்புறே, சைட் பிஸ்னஸுக்கு யானைத் தந்தோ அப்புறோ...?

ர: அப்புறோ?

வீ: நம்ம தோஸ்துங்க சிறைமீளணு. மேல இன்னா கேக்கலாங்கறோ, நீயே ஒரு ஐடியாத் தரப்புடாதா?

ர: ஹ.. ஹ.. ஹ.. ஹா! என்ன பெரிசா கேக்கப் போறோ, இந்த ஒலகமே ஒன்னோடதுண்ணு ஒரு வரத்திலயே வாங்கிக்க கதை முடிஞ்சுபோடும். ஏன் ஒன்ணொன்ணாக் கேட்டுகிட்டு....?

வீ: அப்புடீங்கறியா? அப்புறோ இந்த வீரப்பன்னு இருக்கறதிலை என்னா மேன் திறில்லிருக்கு? நாலுபேரு நம்பளத்தேடணு. நா டிமிக்கி குடுத்துக்கணு. இல்லமே, எல்லாத்தையும் ஒர வரத்தில வாங்கிப் புட்டு சக்கப் புள்ளையார நா குந்திக்கிணு இருக்கறதுல இன்னாமேன் திறில்லு...?

ர: அதுதா நா சினிமாவுல சொல்லியிருக்கே. அளவுக்கு மிஞ்சின பணத்த செலவழிக்கவும் முடியாது-அருணாச்சலம். அளவுக்கு மிஞ்சின வரத்த அனுபவிக்கவும் முடியாது இது பாபா. இப்ப என்ன சொல்லறே. நாகப்பாவ விட்டிடு.

வீ: முடியாது. நீ பண்ணுறதப் பண்ணிக்க.

ர: நீ மரத்தக் கடத்தினே, பொறுத்துக்கிட்டே, தந்தத்தக் கடத்தினே சகிச்சுகிட்டே.இப்ப மனிஷனையே கடத்திறே. இனியும் பொறுக்க முடியாது. இந்தாபார் நீயா திருந்திக்க. நா எம் பாட்டில பாபா வழிக்குப் போய்கிட்டிருக்கே அரசியலுக்கு இழுத்துவிட்டுடாதே.

வீ: என்னால என்ன மாத்திக்க முடியாது. முடிஞ்சா அரசியலில நொழைஞ்சு மொதலமைச்சரா வந்து என்னோட மோது. அப்ப பாக்கலாம்.

ர: நா அரசியலா ஆன்மீகமான்னு கொஞ்சம் திங்க் பண்ண வேண்டிக் கெடக்கு. முடிவெடுத்துகிட்டு திரும்ப வருவே. அதுக்குள்ள அதுவர இந்தக் கத்திய நீயே வைச்சுக்க. நான் வறேன்.

யாவும் கலப்படமற்ற கற்பனை

# இந்தவாரம் உங்கள் பலன்

15.09.2002 தொடங்கி 21.09.2002வரை

சோதிட மாமணி
தில்லை

## கிரக நிலை

சிங்கம் - சூரியன், செவ்வாய், கர்க்கடகம்-வியாழன், கன்னி-புதன்
துலாம்- வெள்ளி, விருட்சிகம்-கேது, இடபம்- இராகு, மிதுனம் - சனி.
17.09.2002 ல் கன்னி சூரியன், சந்திரன் தனு, மகரம், கும்பம், இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) கருமங்களில் வெற்றியுண்டு. புதிய முயற்சிகளில் அவதானம் தேவை. பெரியோர் உதவி, கௌரவம் ஏற்படும். உத்தியோகத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்கள் கல்வியில் கூடிய சிரத்தை எடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 5.

### இடபம்

(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) தொழிலில் சிறிது பிரச்சனைகள் தோன்றும். பண வரவு தாமதமாகும். வெளியிடப் பிரயாணங்களில் அவதானத்துடன் நடந்து கொள்ளவும். உத்தியோக ரீதியாக மேலதிகாரிகளின் உதவிகள் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல: 4.

### மிதுனம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) மறைமுக எதிர்ப்புக்கள் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பொருள் வரவு சுமாராக அமையும். உத்தியோகத்தில் சிலருக்குத் திடீர் இடமாற்றம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் கூடிய சிரத்தை எடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி,
அதிஸ்ட இல.: 7.

### கர்க்கடகம்

(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் கஷ்டம் நீங்கும். எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும். பெரியோர் தக்க தருணத்தில் உதவுவர். உத்தியோகத்தில் உள்ளவர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 2.

### சிங்கம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) எதிர் பார்த்த கருமங்களில் தடையுண்டாகும். பெரியோர்கள் உதவுவர். பணவரவு சுமாராக அமையும். உத்தியோகத்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 3.

### கன்னி

(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழிலில் நன்னிலை தோன்றும். பெரியோர் உதவியும், பொருள் வரவும் சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் சிலர் முன்னேற்றம் பெறுவர். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 5.

### துலாம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழில் நிலையில் தளம்பல், பணவரவு குன்றல், எதிர்பாராச் செலவினம். மறைமுக எதிர்ப்புக்களுக்கு இடம் தரும். உத்தியோகத்தில் சில பிரச்சனைகள் தோன்றும். மாணவர்களுக்குக் கல்வியில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 4.

### விருட்சிகம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) பொருள் வரவுண்டு. பெரியோர் தக்க தருணத்தில் உதவுவர். இனசன நன்மையும். வெளியிடப் பயணமும் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. உத்தியோகத்தர்களுக்கு நன்மை உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 1.

### தனு

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) கருமங்களில் சிறு தடையுண்டாகும். பொருள் வரவு தாமதமும், பெரியோர் பகையும் ஏற்படும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்வர். மாணவர்களுக்குக் கல்வித் தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் அடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

### மகரம்

(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) மனக்கிலேசம் நீங்கும். தடைப்பட்ட கருமங்கள் நிறைவேறும். பொருள் வரவு உண்டாகும். உத்தியோகத்தர்கள் விழிப்புடன் நடந்து கொள்ளவும். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 3.

### கும்பம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) புதிய முயற்சிகளைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. பணவரவு சிறந்து விளங்கும். பெரியோர் உதவி உண்டு. உத்தியோகரீதியாக இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கும். மாணவர்களுக்குக் கல்விச் சிறப் பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் கவனமுடன் இருப்பது நல்லது.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 7.

### மீனம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) செய் தொழில் நன்மையும், காரியானுகூலமும் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோக ரீதியாக நன்மையுண்டாகும். மாணவர்களுக்குக் கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 1.

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

2323657


→ தவளை இனத்தைச் சேர்ந்த இந்த உயிரினம் நம் நாட்டில் காணப்படும் தேரைகளை ஒத்ததாகச் சிவப்பு நிறத்தில் இருக்கும். ஆபத்தின் அடையாளம் சிவப்பு என்பது இந்தத் தவளை வகைக்கு நிரம்பப் பொருந்தும். தெற்கு மற்றும் மத்திய ஆபிரிக்கப் பாலை நிலங்களிலும், வெப்ப வலயக் காடுகளிலும் வசிக்கும் இவை மிகக் கொடிய ஒரு வகை விஷத்தை தன்னகத்தே கொண்டுள்ளன. இவற்றின் உமிழ் நீரில் கலந்து கிடக்கும் இந்த விஷத் திரவத்தின் ஒரு துளி மனித உடலுக்குள் செல்லுமாயின் சில விநாடிகளுக்குள் அந்த மனிதனின் நரம்புத் தொகுதியும், இருதயமும் செயலிழக்கும். இதன் விஷம் சிறிய அளவில் இரத்தத்தோடு கலந்த உடனேயே மனித மூளையின் நரம்புத் தொகுதி செயற்படாமல் போகுமென ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்த விஷம் கூட அங்குள்ள மலைவாசிகளுக்குப் பயன்படுகின்றது. மிருகங்களை வேட்டையாடும் போது அம்பின் நுனியில் இந்த விஷத்தைத் தடவிச் செலுத்துகிறார்கள். இத்தகைய ஒரு தவளை 12 மனிதர்களைக் கொல்லக் கூடிய அளவு விஷத்தை ஒரு நாளைக்கு உற்பத்தி செய்யக் கூடியது.




அருள் ஜுவல்லர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது பொன் நகைகள் பின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

436331


# அபாயம்








# முன்னோடி

↑ இன்று பரிசோதனைக் குழாய் குழந்தை சர்வ சாதாரணமான விஷயம். நம் நாட்டில் கூட இவ்வாறு குழந்தை பெற்றுக் கொள்ளலாம். ஆனால் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் பரிசோதனைக் குழாய் குழந்தை முறை குறித்து அறியப்படாத காலத்தில் அவ்வாறு பெற்றெடுக்கப்பட்ட குழந்தைதான் இந்தப் படத்தில் இருக்கிறது. அன்றுதான் இவர் குழந்தை இப்போது 25 வயதாகிறது. பிரிட்டனின் லங்காஷயர் மாகாணத்தில் ஒல்டஹம் மருத்துவ மனையில் 1978 ம் ஆண்டு ஜுலை மாதம் 25 ம் திகதி இவர் முதல் பரிசோதனைக் குழாய் குழந்தையாக, சத்திர சிகிச்சை மூலம் பிறந்தார். அப்போது இந்தக் குழந்தை 2.6 கிலோவாகக் காணப்பட்டது. உலகில் முதன் முதலாக ஒரு பெண்ணின் கருவில் இருந்து கரு முட்டைகள் பெறப்பட்டு மற்றொரு பெண்ணின் வயிற்றில் வளர்ந்த முதல் குழந்தை இவர்தான்.

# கோடீஸ்வர வீரர்

↑ சச்சின் டெண்டுல்கர் எத்தனை சதங்கள் அடித்தார் என்பதைக் கணக்கு வைத்தோ, மொத்த ஓட்ட எண்ணிக்கை எத்தனை என்பதை வைத்தோ அளவிடக் கூடிய ஒரு கிரிக்கெட் வீரரல்ல. சச்சின் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் மற்றொரு பிரட்மன். மிக இளவயதிலேயே ஆடுகளத்தில் நுழைந்து முப்பது வயதுக்கு முன்னதாகவே துடுப்பாட்ட துறையில் உள்ள அனைத்துச் சாதனைகளையும் முறியடித்துவிட்டு இன்னும் பலகாலம் ஆடக்கூடிய இளமைத் துடிப்புடன் திகழ்கிறார் சச்சின். இந்திய அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்த சச்சின் பல முறை முயற்சி செய்தார். ஆனால் கெப்டன் என்ற பொறுப்புணர்வு அவரது துடுப்பாட்டத் திறனை மழுங்கடிப்பதாக உணரப்பட்டதும் அந்தப் பதவியில் இருந்து விலகிய சச்சின் தன்னை ஒரு மிகச் சிறந்த பெட்ஸ்மனாக வலுப்படுத்திக் கொண்டார். உலகில் உள்ள மிகவும் பணக்காரக் கிரிக்கெட் வீரராக டெண்டுல்கர் கருதப்படுகிறார். சில சர்வதேச வர்த்தக நிறுவனங்களுடன் அவர் செய்து கொண்டிருக்கும் விளம்பர ஒப்பந்தங்களின் தொகை இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. அவை பல நூறு கோடி டொலர்களாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. இத்தனை பெரிய செல்வந்தரான சச்சின் விளம்பர ஒப்பந்தம் குறித்த சர்ச்சை காரணமாக, கொழும்பில் நடைபெறும் ஐ.சி.சி. போட்டிகளில் பங்குகொள்வதைத் தவிர்க்கலாம் என்ற சந்தேகம் கடந்த நாட்களில் எழுந்தது. கடைசியாக வெளியான அறிக்கைகளின்படி இந்திய அணியின் முன்னணி வீரர்கள் ஐ.சி.சி. போட்டிகளுக்காக இலங்கை வருவார்கள் என அறிவிக்கப்பட்டது. எவ்வாறெனினும் இரசிகர்களின் அமோக வரவேற்பைப் பெற்ற சச்சின் போன்ற வீரர்கள் அனுசரணையாளர்களின் தாளத்துக்கு ஆட முற்படுவது கிரிக்கெட்டை நேசிக்கும் சகலரையும் நிச்சயம் கவலை கொள்ள வைத்திருக்கும்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் றொபின்சன் சந்தோஷ் 18.09.2002

உடுப்பிட்டி நவிண்டிலைச் சேர்ந்த றொபின்சன் - அருந்தமிழ்ச் செல்வி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சந்தோஷ் தனது முதலாவது பிறந்தநாளை 18.09.2002 புதன்கிழமை அன்று ஜேர்மனியிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பரமேசு மாமா (இலண்டன்), செல்வத்துரை அப்பப்பா, கரேன் மாமா, சந்திரா மாமா (கலிஸ்), கமல சித்தப்பா (இலண்டன்), நரேந்திரம் மாமா குடும்பத்தினர் (நீர்கொழும்பு), சிவபாதம் தாத்தா, தியாகராசா அம்மப்பா குடும்பத்தினர், கீரன் மாமா (இலண்டன்), யோகநாதன் மாமா (இலண்டன்), தங்கராசா அப்பப்பா குடும்பத்தினர், தர்மலிங்கம் அப்பப்பா குடும்பத்தினர், கனகரட்ணம், சுரேஸ் மாமா குடும்பத்தினர், தாத்தாமார், பாட்டிமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்லாண்டு அருள் பெற்று பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- அருமைத்துரை பரமேஸ்வரன் (இலண்டன்)

## 8வது பிறந்தநாள் வாழ்த்து 12.09.2002



செல்வி ஜா. பாத்திமா ஜமானா

கொழும்பு-12, புதிய சோனகத் தெருவைச் சேர்ந்த ஜாம்பர் சாதிக் - ஷக்கீனா தம்பதிகளின் செல்வப் புதல்வி பாத்திமா ஜமானா Fathima Jamana 12-09-2002 அன்று தனது 8 ஆவது பிறந்த நாளை Kuwait - Hawally இல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். பாத்திமா ஜமானாவை அன்பு வாப்பா, உம்மா, தம்பி- தாமிர், தங்கைச்சி நவாஸ், இந்தியாவில் வசிக்கும் வாப்பாம்மா குடும்பத்தினர், கொழும்பு-12 இல் வசிக்கும் உம்மாம்பா, உம்மாவாப்பா, பெரியம்மாமார் நஸீரா, ஹுசைறா, பெரியப்பாமார், ஷியாத் நிஸார், முஹம்மட் காக்கா - Kuwait, பஷரி சாச்சி- Kuwait, மாமாமார்: பாரூக், இக்பால், இம்தியாஸ், ஹுசைன் பைசர், மாமிமார்: பரினா, அஸ்மா, பௌசியா, ராத்தாமார்களான பாத்திமா ஹுஸ்னா, ஷிபானி, நிஸ்ரின், முனா, சமீரா, தங்கைச்சிமார் கௌதர், அ..ரா, ஷஹாறா, நானாமார்- ஷியாம், வாசிம், மச்சான்மார் ரபீ, பஸ்மின், இம்ரான், ஆஷிப், பாசில், இஹாஸ், மதினிமார், இர்பானா, முபஸ்ரா, அஸ்றா, மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் "பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென" வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- நிஸாம் ஹுஸைன் பைசர், Kuwait

## 4வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் ஜெ. சுஜீவன் 17.09.2002

மட்டக்களப்பு காரைதீவைச் சேர்ந்த திரு திருமதி ஜெயகுமார் (J.K.R.) - [illegible] தம்பதிகளின் செல்வப் புதல்வன் சுஜீவன் தனது 4ஆவது பிறந்த நாளை கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் 17.09.2002 அன்று மிகவும் விமரிசையாகக் கொண்டாடுகிறார். [illegible]

தகவல்:- ஜோனா, ரூபா (விக்னேஸ்வரம்) வெள்ளவத்தை







இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 18A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் செப். 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.